# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 4, Vol. 4. — பரீதாபிஷு கார்த்திகைமீ, NOVEMBER 1912. — ஸஞ்சிகை 11 No. 11


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | | | *Foreign.* Rs. A. P. | | |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 2 | 0 | ... ... | 0 | 3 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 &4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒருமாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்நிய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்பிரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 2 | 0 | ... | 0 | 3 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 | 4 | 0 |

வியாசம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புகொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்ரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# SPECIAL ARTICLES.

## விசேஷ வியாஸங்கள்.

### THE SILK COTTON TREE.

BY

T. P. SUBBARAYA AIYAR.

### இலவமரம்.

இம்மரத்தின் பயன் சொல்லி முடியாது. இவ்விலவமரம் வேர் முதல் நுனிக்கொம்பு, இலை, பட்டை, மரம், ஸகலமும் மனிதருக்கு விசேஷப் பிரயோஜனமுள்ளன. இம்மரத்தை ஸகல நிலஸ்வான்தார்களும் தங்கள் புன்செய் நிலத்தின் ஹத்துக்களிலும், புழக்கடைகளிலும் வைத்துப் பயிர் செய்வதால் தக்கலாபம் பெறலாம்.

இலவின்பயன்:—இலவங்காய் பழுத்துமரத்திலேயே வெடிக்குந் தருணத்தில் காய்களையடித்து உதிர்த்து வெயிலில் காயவைத்தால் பசுமையாயுள்ள பழங்களும் ஈரம் காய்ந்து வெடிக்கும். அப்படிப்பட்ட காய்களின் மேலோடுகளை நீக்கிவிட்டு, பஞ்சை யெடுத்து அதனுள் நிறைந்துள்ள விதைகளை விற்கொண்டடித்தாவது, ஓர் கம்பின் நுனியில் இருபிளவுகளைச் செய்து அதில் குறுக்கும் மறுக்கமாக சிறிய பிளாச்சுகளை வைத்துப் பிகித்து பஞ்சு வைத்திருக்கும் கூடையில் வைத்துத் தயிர் கடைவதுபோலக் கடையவேண்டும். விதைகள் கூடையின் அடியில் தங்கி பஞ்சு பொங்கி விழும்; அவைகளை யெடுத்து மற்றொருபுறத்தில் சேர்த்து வைத்துக்கொண்டு, மெத்தைகள், ரஜாயிகள், தலையணை, தெண்டு, முதலிய சயந ஸுகத்தை யுண்டாக்கும் ஸாதனங்களுக்கும், ஸோபாக்கள், குஷன்நாற்காலிகள், கோச் வண்டிகளின் மெத்தைகள், சாய்மானங்கள் இவைகளுக்கும் அடைத்து உபயோகிக்கலாம்.

இப்பஞ்சு வேண்டியமட்டில் அகப்படாமல் அந்நிய நாடுகளிலிருந்து வந்து கடைகளில் விற்கும் பல வர்ணங்களுள்ள தகடுபோன்ற பஞ்சுகளை வாங்கி அநேகர் தங்கள் படுக்கைகளுக்கு உபயோகிக்கிறார்கள்.

ஸாதாரணமான ஏழைகளும் தலையணையின்றிப் படுப்பதைக்காணோம். இப்பஞ்சு மலையாளம் பாலக்காட்டிலிருந்து விதை நீக்கியே மூட்டைகளாகக் கட்டியனுப்பப்படுகிறது. அவ்வவ்விடத்தில் விளையும் காய்கள் போக அதிகம் வேண்டுவோர் ஷை பஞ்சுகளையே வாங்கி உபயோகிக்கிறார்கள். சில பஞ்சு வியாபாரிகள் முள்ளிலவுப் பஞ்சையும் கலந்து விதைகளையும் நீக்காமல் திருச்சி முதலிய இடங்களில் விற்கிறார்கள். 5 வீசைகொண்ட துலாம் ஒன்றுக்கு ரூ 1—4—0 ஆக விற்கிறார்கள். சில ஸமயங்களில் அதிகம் விலை விற்பதுமுண்டு. முள்ளிலவுப் பஞ்சு தேகத்திற்கு உஷ்ணத்தையுண்டாக்கும். முள்ளிலவுக்கு விலை கிடையாது. மரத்திலிருந்து அடித்து எடுக்கிற கூலி யொன்றே விலை. நல்லிலவு காய்கள் 1000-க்கு ரூ 2—8—0 முதல் $3\frac{1}{4}$, $3\frac{1}{2}$ வரையுண்டு.

இலவு பயிர் செய்யும் விதம்.—முதிர்ந்த இலவம் பழத்தின் சோடையற்ற விதைகளை யெடுத்து, வெயிலில் நன்றாய்க் காயவைத்து, நன்றாய்க் கொத்திப் புழுதி செய்து, பாத்தி பிடித்திருக்கும் இடத்தில் கலக்க விதைத்து, மேல் மூட்டம் போட்டுவைத்து, இரண்டு நாள்களுக்கு ஒருதரம் தண்ணீர் பாய்ச்சி வந்தால், ஒரு வாரத்தில் நன்றாய் விதைகள் முழுதும் முளைத்துவிடும்.

அப்படி முளைத்த இலவஞ்செடிகளை ஆடுகள் முதலிய ப்ராணிகள் தின்னும்படி விடாமல் வேலி கட்டி காபந்துசெய்து, 5, 6, அடி உயரம் உயர்ந்ததன்மேல் மழைகாலத்தில் (புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில்)

வேர்கள் வெட்டுப்படாமல் இலவஞ்செடிகளை எடுத்து ஒரு கஜம் அகலம் நீளம் ஆழமாக வெட்டியும், 8, 10, அடி தூரத்திற் கொன்றாயி ருப்பதுமான இடங்களில் நட்டு, மண் தள்ளி மூடி, தண்ணீர் தங்கும்படி அரையடிப்பள்ளம் வைத்து வரப்புக் கட்டிவைத்துத் தண்ணீர் வார்த்து வரவேண்டும். நாற்றில் பூமியின் திமிரினால் உயர்ந்துபோயிருக்கும் இலவஞ் செடிகளை ஐந்தடியுயரம் மட்டில் வைத்துவிட்டு, அரிவாள் கொண்டு காயப்படாமல் வெட்டிவிடுவது ச்லாக்யம். அடிக்கடி கோடைகாலத்தில் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். இப்படி வளர்க்கப்படும் செடிகள் இரண்டரை வருஷத்திற்குள் 25, 30 அடி யுயர்ந்து தழையும்.

**பலனளிக்குங் காலம்:**—வருஷந்தோறும் தைமாதத்தில் பூத்து, மாசிமாதத்தில் பிஞ்சு பிடித்து, பங்குனியில் காய்கள் முதிர்ந்து மாஸக்கடைசியில் பழுக்கும்.

**மரத்தின் உறுதி:**—வெகு துர்ப்பலமுள்ளது. 3, 4, 5, 6, 7, 8, அடி வரை பருத்தும் மரத்தின் கிளைகள் பூமிக்குமேல் 8 அடி யுயரத்தி லுண்டாகும். அவைகள் வேண்டுமென்று செய்ததுபோல் மரத்தின் நான்கு பக்கத்திலும் உண்டாகி பரவலாக 5, 6 அடி நீளும், இம்மாதிரியே அதற்கு மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகும். காய்கள் குலையாக 4, 5, 6, 7, 8 சேர்ந்து காய்க்கும். மூற்றாதபிஞ்சுகளை மாடுமேய்க்கும் சிறுவர்கள் கல்லாலெறிந்து உதிர்த்துத் தின்பார்கள். முற்றிய விதைகளை எலிகள் தின்னும். மரங்கள் காய்ப்பு நின்று போனபிறகு வெட்டி ஆலயங்களில் உத்ஸவத்தில் தெப்பம் கட்டவும், ஆறுகளைக் கடக்கத் தவணையாகவும், ஸமுத்திரத்தில் மீன் முதலியன பிடிக்கப்போகும் செம்படவர்கள் கட்டுமரங் கட்டவும் தலையணைக்கு பதிலாய் மடியாய் வைத்துக்கொள்ளத் தலையணைக் கட்டையாகவும் செய்ய உதவும்.

**இலவின் தழைப் பயன்:**—மேற்படி இலையை ஆடுகள் வெகுஆவலாகத்தின்னும். எண்ணெய் தேய்த்துக் கொள்பவர்கள் இந்த இலையைக் கசக்கிப்பிழிந்து அரப்பு சீயக்காய்க்குபதிலாக, உபயோகித்துக்கொள்வார்கள். அதினால் நேத்திரத்திற்குக் குளிர்ச்சியைச் செய்யும். மரத்தின்மே லுண்டாயிருக்கும் முள்ளுகளைப் பெயர்த்து பாக்குக்கு பதிலாய் வெற்றிலையுடன் சிறுவர்கள் போட்டுக் கொள்ளுவார்கள். அதின் துவரால் சிவக்கும்.

**மரத்தின் வயது:**—இலவமரம் ஸுமார் 30 வருஷமிருப்பதை நாமறிவோம். அவ்வளவு காலமும் காய்க்காவிட்டாலும் 25 வருஷம் நன்றாய்க் காய்க்கும். நீர்ப்பசையுள்ள விடத்தியமரங்கள் ஏராளமான பலனை யளிக்கும். நன்றாய்க் கொழுத்து வளர்ந்திருக்கும் மரங்கள் 2000, 3000 காய்களைத் தரும். மிகவும் குறைந்து காய்க்கும் மரங்களில் 200, 300-க்குக் குறையாது.

**இலவுக்கு லாயக்குள்ள பூமி:**—படுகைத்தரமண் விசேஷம். செம்மண்ணும், சரள் கலந்த மண்ணும் ச்லாக்யம். மற்ற மண்களிலும் நீர்ப்பசையிருப்பின் மரங்கள் வளர்ந்து பலனை தரும். கரிசல் மண்ணில் செழித்து வளருவது முண்டு.

இம்மரத்திற்குத் தண்ணீர்ப்பசை பூமியில் ஸமீபத்திலிருக்கின் செழித்து வளர்ந்து பலனைத் தருவதில் குறையே கிடையாது. அவ்விதமின்றி தண்ணீர்க் குறையுள்ள விடங்களில் ஜலம் இறைத்து வந்தால், பலன் குறையாது. இம்மரத்தின் காயாத பட்டை சில வ்யாதிகளுக்கு ஒளஷதமாகவும் உபயோகமாகிறது.

**இலவமரம் பயிர்செய்யும் மற்றோர் வகை.**—முதிர்ந்த இலவமரத்தின் கிளைகளில் அரையடி முதல் பருமனுள்ளவைகளை 5, 6 அடி நீளம் வைத்துத் துண்டுசெய்து அத்துண்டு

களின்பேரில் வைக்கோல் புரியைச் சுற்றி 2 அடி ஆழமுள்ள குழியில் வடகிழக்குப் பருவ மழைகாலத்தில் நட்டுத் தண்ணீர் வார்த்து வந்தால் தளிர்த்தோங்கும். சில அடுத்த வருஷத்திலேயே பலனைத் தரும். ஆனால் 10 வருஷங்களுக்குள் ஆயுளை யிழக்கும். காய்கள் குறைந்து காய்க்காது.

இலவமரத்தால் கெடுதியில்லை. தோப்பாக இலவ மரங்கள் பயிர் செய்யப்பட்டாலும், அவைகளினால் மற்றப் பயிர்களுக்கும் அக்கம்பக்கம் பயிர்களுக்கும் நிழலால் ஏற்படும் தீங்கில்லை.

ஒரு குடியானவனுக்கு 10 இலவமரமிருந்தால் குறைந்த பக்ஷம் 5000 இலவங்காய்கள் அகப்படும். அதின் விலை 12½ ரூபாய். அந்த நிலத்தீர்வை ரூ 1 என்றாலும், யாதொரு ப்ரயாஸையுமின்றி 11½ ரூபாய் மீதமாகும். அந்த இடம் வேலி ஹத்தானபடியால் மற்றப் பயிர்களுக்கு இடையூறுகளே கிடையாது. ச்ரமமென்பதே இல்லை. கூடுமானால் தண்ணீர் பாய்ச்சட்டும்; இல்லாவிட்டால் பருவ மழைகளே போதும். ஸாகுபடிக்கு லாயக்கில்லை யென்றவிடத்தில் முந்திரியைப்போல் இலவைப் பயிர் செய்தால் பலனுண்டு. ஏராளமான தருசு நிலங்கள் இந்தியாவிலிருக்கின்றன. அவைகளில் வேறு பயிர்கள் செய்ய உபயோகப்படாத விடங்களில் இலவ மரங்களைப் பயிர் செய்து லாபத்தை யடையாதவர்கள் மனிதரில் பதரென்று செல்லப்படுவதோடு, அவர்களை அக்காளும் விட்டு நீங்காள்.

நமது பாட்டியார் ஔவை "இலவம் பஞ்சில் துயி" லென்று சொல்லியிருக்கிறார். இப்போது ஸகலத்திலும் விபரீத புத்தியை வைத்துத்திரியும் மேதாவிகள் பருத்திப்பஞ்சை அதிகம்விலைகொடுத்து வாங்கி, மெத்தை முதலியன தைத்து உபயோகப்படுத்துகிறார்கள். அது சயநவிதிக்கு விரோதமாயுள்ளது. சக்ரவர்த்திகள், ராஜாக்கள், பணம்பெருத்த தனிகர்கள், ஹம்ஸப்பறவையின் கழுத்து ரக்கைகளை எடுத்துச் சேர்த்து அதைப் படுக்கைக்கு உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள். அதற்கு பதிலாக அநேகம் வேறு பக்ஷிகளிர குகள் அடைத்த மெத்தைகளை அன்னிய நாட்டிலிருந்து அதிகம் விலைகொடுத்து வாங்கி உபயோகிக்கிறார்கள். எதுவும் அன்னியருடையது ச்லாக்யம் போலும்.

தி. ப. ஸுப்பராய ஐயர்.

---

## MATTER AND ITS THREE STATES.

BY

S. GANAPATI SUBRAMANYAM, M.A., L.T.
*Sub-Assistant Inspector of Schools, Mannargudi.*

### பொருளும் அதன் மூன்று நிலைமைகளும்.

இதோ இந்த ஸ்லேட்டைப் பாருங்கள். அதனுடைய நிறம், பருமன், உருவம் இவைகளைப்பற்றி கவனியுங்கள். அது இன்ன நிறம், இன்ன உருவம் என்று எதனால் சொல்லுகிறீர்கள்? நம்முடைய கண்ணால் பார்த்து சொல்லுகிறோம். அது ம்ருதுவாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கிறதா என்று எப்படிப் பார்ப்பீர்கள்? கையால் தடவிப் பார்த்தால் தெரிகிறது. ஸரி, சுத்தமான தேங்கா யெண்ணெய் ஒரு ஸீஸாவிலும் அதேமாதிரியான ஸீஸாவில் சுத்தமான நல்லெண்ணெயும் போட்டு அவைகளை நன்றாய் கார்க்கால் அடைத்துவிட்டு ஒருவரைப் பார்த்து இது என்ன எண்ணெய் என்று கேட்டால் எப்படிப் பரிசோதிப்பார்? அவர் மூடியைத்திறந்து மூக்கால் முகர்ந்து பார்த்துச் சொல்லுவார். ஆம், நல்லது. எண்ணெயை அவர் கண்ணால் பார்த்தோ அல்லது கையால் தொட்டோ சொல்ல முடியுமா? முடியாது. பின் எதனால் சொல்ல முடிந்தது? மோப்பத்தினால் சொல்ல முடிந்தது. இது இருக்கட்டும். இங்கே படிக்

காரக்கட்டி ஒன்றும் கற்கண்டுக் கட்டி ஒன்றும் இருக்கிறது. எது கற்கண்டு என்று சொல்லுவீர்கள்? என்னமாய்ச் சொல்லுவீர்கள்? கொஞ்சம் பொடிசெய்து வாயில் போட்டால் தெரிந்துவிடுகிறது. மூக்கினுல் முகர்ந்தோ அல்லது கையால் தொட்டோ சொல்ல முடிந்ததோ? இல்லை. நம்முடைய சுவையுணர்ச்சியால் சொல்ல முடிந்தது. ஆகவே, நம்மைச் சுற்றிலு மிருக்கும் ஸாமான்களைப்பற்றி நம்முடைய பஞ்சேந்திரிய வுணர்ச்சிகளின் ஒன்றினுலோ அல்லது இரண்டு மூன்றினுலோ அறிகிறோம். மொத்தத்தில் கடவுளால் அளிக்கப்பட்ட மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்புலன்களாலேயே நாம் பதார்த்தங்களைப் பற்றி தெரிந்துகொள்ள சக்தியுடையவர்களாயிருக்கிறோம். நம்முடைய பஞ்சேந்திரியங்களினுல் தெரிந்து கொள்ளுகிறவைகளெல்லாம் பதார்த்தங்களென்று பொதுவாய்ச் சொல்லலாம்.

பதார்த்தங்கள் எத்தனையோ கணக்கிட முடியாமல் இருக்கின்றன. ஆயினும் அவைகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன; (1) ஸாலிட் என்று சொல்லப்படும் கெட்டி பதார்த்தமும் (2) லிக்விட் என்று சொல்லப்படும் த்ரவபதார்த்தமும் (3) காஸ் என்று சொல்லப்படும் வாயுபதார்த்தமும். அப்படி எந்தக் காரணத்தால் பிரிக்கிறார்கள் என்று கேட்பீர்களாகில், அவைகளுடைய குணுகுணங்களால் அவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன என்றே சொல்லவேண்டும்.

பதார்த்தங்களின் குணமென்றால் என்ன? மாம்பழம் தித்திக்கிற தென்கிறோம்; காகிதம் வெண்மையாயிருக்கிற தென்கிறோம்; ஸூர்யன் ப்ரகாசமாயிருக்கிற தென்கிறோம். ஆகவே, பதார்த்தங்களின் கூடவே பிறந்தாற் போன்ற தன்மையை குணம், குணுதிசயம் என்று சொல்லுகிறோம்.

பதார்த்தங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருந்தாலும் அவைகளுடைய குணங்களில் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உண்டு. முதல் முதலில் எல்லாவற்றிற்கும் பொதுவான சில குணங்களைப் பற்றி கவனிப்போம். பிற்பாடு வேற்றுமை குணங்களைப் பற்றி விசாரிப்போம். இப்படி விசாரிக்குமிடத்து வேற்றுமை குணங்களால்தான் இது ஸாலிட், லிக்விட், காஸ் என்று சொல்லுவதற்கு நியாயமுண்டென்று புலப்படும்.

(1) ஒரு ஸ்லேட்டுப் பலகையையோ புஸ்தகத்தையோ எங்கே வைத்தாலும் அது அதனுடைய பருமனுக்குத் தக்கவாறு இடத்தை அடைத்துக் கொள்ளும். ஒருபடி பாலை எந்தப் பாத்திரத்தில் வைத்தாலும் ஒருபடி பால் தானே. இதன் உண்மையை நம்முடைய வீட்டில் பாட்டிமார்கள் "கொட்டிக்கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகாது" என்று சொல்லுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். ஆகவே, பதார்த்தங்களெல்லாம் தங்கள் தங்களுடைய பருமன் அல்லது ஆக்ருதிக்குத் தகுந்தபடி இடத்தை யடைத்துக் கொள்ளுகின்றன.

(2) ஒருபடி நெய்யையோ அல்லது ஒருபடி சர்க்கரையையோ நிறுத்தால் எப்போதும் ஒரே இடையுடைய தாய்த்தானிருக்கும். எந்த ஊரிலும் ஒரே எடைதான். ஆகவே எவ்வித மான பதார்த்தங்களுக்கும் எடை அல்லது நிறையுண்டு.

(3) ஒரு கற்கண்டுக் கட்டியை பொடி செய்யுங்கள். பொடிப் பொடியாய் ஆனபிறகு ஒரு சிறு துண்டை பூதக்கண்ணுடியின் கீழேவைத்துப் பாருங்கள். ஒரு பெரிய கற்கண்டாகத் தோன்றும். அந்தத் துண்டை இன்னும் பொடியாக்கினுல் இன்னும் சிறிதாகும். அந்தப் பொடியை கொஞ்சம் ஜலத்தில் போட்டால் அது தண்ணீரில் எங்கும் பரவுகிறது. அப்படி பரவுகிறது என்பதற்கு பரீக்ஷை என்ன? ஒரு

துளி ஜலத்தை வாயில் போட்டுக் கொண்டால் தித்திக்கிறது. ஆகவே, இந்தக் கற்கண்டுப் பொடியானது ஜலத்தோடு சேர்ந்து பூதக் கண்ணுடிக்குக் கூடப் புலப்படாத அவ்வளவு சிறியதாகி விடுகிறதல்லவா? பிரிக்கமுடியாத சின்னஞ் சிறுத் துண்டுகளுக்கு "ஆடம்ஸ்" என்று இங்கிலீஷிலும், அணுக்கள் என்று தமிழிலும் சொல்லப்படுகிறது. இதனுல் பதார்த்தங்களெல்லாம் அணுக்களாலாக்கப் பட்டவை என்று ஏற்படுகிறது. அணுக்கள் எவ்வளவு சிறியவையாயிருக்க வேணுமென்பதை ஒரு பெரிய கண்ணுடிப் பாத்திரத்தில் நிறைய ஜலம் எடுத்து அதில் ஒரு ஊசி நுனியளவு 'அவுரி நீலமோ' அல்லது 'பொட்டாவியம் பர்மாங்கனேட்டோ' போட்டால் ஜலம் முழுதும் நீலமாகவோ சிவப்பாகவோ ஆகிவிடுவதைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

(4) ஒரு பாத்திரத்தில் நிறைய ஜலம் எடுத்து அதற்குள் ஒரு கல்லைப் போட்டால் என்ன வாகிறது? ஜலம் வழிகிறது. ஏன் வழிகிறது? கல்லைப் போட்டதினுல் வழிகிறது. ஸரியான படி கணக்கிட்டுப் பார்த்தால் கல்லினுடைய பருமனுக்குத் தகுந்த ஜலம் வெளியில் போயிருக்கும். ஒரு பாத்திரத்தை (கண்ணுடிடம்ளரை) தலைகீழாகக் கவிழ்த்தால் ஜலம் உள்ளே செல்லுகிறதோ? இல்லை. ஏன் செல்லவில்லை? அதற்குள் ஆகாயம் அல்லது வாயு விருக்கிறது. அதனுல் ஜலம் உள்ளே செல்ல முடிகிறதில்லை. இன்னும், கடைகளில் எண்ணெய், நெய் ஆகிய இவைகள் கொடுக்கும் போதெல்லாம் ஒரே யளவு பாத்திரத்தைத் தானே துடைத்து விட்டு கொடுக்கிருர்கள். ஒரு படி நெய்யுள்ள பாத்திரத்தில் ஒரு படி எண்ணெய் விட இடமுண்டோ. இல்லை. ஆனுல் நெய்யை ஊற்றிய பிற்பாடு எண்ணெயைவிடலாம். ஆகவே, ஒரேகாலத்தில் ஒரே இடத்தில் இரண்டுபதார்த்தங்கள் இருக்கஇடமில்லை. இதற்கு வச்சிரத்துவம் என்று சொல்லுகிருர்கள்.

இப்போது பதார்த்தங்களின் ஒற்றுமை குணங்களை ஒருமிக்க ஆராய்வோம்.

பதார்த்தங்கள் அவையவைகளுடைய பருமனுக்குத் தக்கவாறு இடத்தை யடைத்துக் கொள்ளுகின்றன. அணுக்களா லாக்கப்பட்டவை எல்லாவற்றிற்கும் நிறையுண்டு. ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இரண்டு பதார்த்தங்களை வைக்க முடியாது.

எஸ். கேணபதி ஸுப்ரமணியம்.

---

## GATHERING HONEY.

BY

T. C. V. RAMANA AIYAR.

### தேன் சேகரித்தல்.

பசு வளர்த்து பால், வெண்ணெய், நெய், முதலியவைகள் செய்து ஜீவிப்பது போலும், பட்டுப் பூச்சி வளர்த்து பட்டெடுத்து விற்றுப் பிழைப்பது போலும், கோழி, வாத்து முதலியவைகளை வளர்த்து முட்டை, குஞ்சுகளை விற்றுப் பயனை யடைவதுபோலும், தேனீயை வளர்த்து மதுவாகிய பயனையடைந்து ஜீவிக்கலாம். தேன் தேகத்திற்கு ஆகாரமாவதுடன் நமது ஆயுர்வேத சாஸ்த்ரத்தில் கண்ட வைத்ய முறைகளில் விசேஷமாய் உபயோகிக்க வேண்டிய பொருளாயுமிருக்கிறது. தற்காலத்தில் ஸ்வயமான நல்ல தேன் கிடைக்கிறதில்லை யென்பதையும், வேண்டிய அளவு அபரிமிதமாய்க் கிடைக்கிறதில்லை யென்பதையும், யாவரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். தேனுக்கு விலை எப்பொழுதும் அதிகமாகவேயிருக்கிறது. இதற்கு இத்தொழிலை நமது விவஸாயிகள் செய்யக் கற்றுக்கொள்ளாததே முக்ய காரணமெனலாம்.

இப்பொழுது ஸாதாரணமாய் அங்கங்கே மலை ப்ராந்தியங்களிலும் மற்ற விடங்களிலும் தேனீக்கள் ஸ்வயமாகக் கட்டுகிற கூடுகளைப் பிரித்து, மலைவாஸிகளாகிய மலசர், குரவர்

போன்றவர்களும் மற்றவர்களும் எடுத்துக் கொண்டு வரும் தேனே கடைகளில் விற்கப் படுகிறது. தேனீயை வளர்த்து தேன் எடுத்து விற்பனைக்குக் கொண்டுவருகிறவர்கள் அநேக மாய் ஸ்வல்பமென்றே கூறவேண்டியிருக் கிறது.

இத்தொழில் இன்னவிதமாக செய்கிறதென் றே பலருக்குத் தெரியாது. பட்டுப்பூச்சிக ளுக்கு முசுக்கட்டைச் செடியின் இலைகளை ஆகாரமாகக் கொடுத்து வளர்த்து பட்டு செய் வதுபோல், பலர் தேனீக்களைப்பிடித்து ஆகா ரங்கொடுத்து, தேனை எடுக்கலாகுமென்று கருதுகிறார்களென்று நினைக்கவேண்டியிருக் கிறது.

நான் அறிந்த வரையில் நீலகிரிமலையின் மேலுள்ள காப்பி, தேயிலைத் தோட்டக் காரர்களில் பல ஐரோப்பியர்களும் சில இந் தியர்களும் இத்தொழில் செய்கிறார்கள். விஸ்தாரமான தோட்ட வெளிகளில் சற்று பள்ளத்தாக்கும், காற்று அதிகமாக வீசியடிக் காத விடத்தில் ஓர் சிறிய கூரை வீட்டைக் கட்டி, அதில் அதிக காற்றோட்ட மில்லா திருக்கும்படி செய்து, அதற்குள் சில மரப் பெட்டிகளை யடுக்கி வைக்கிறார்கள். இப் பெட்டிகளுக்குள் 15,20 படி கொள்ளும்படி யான மண் சட்டிகளைக் கவிழ்த்து வைக்கிறார் கள். சட்டிகளின் உட்புறத்தில் சட்டியின் இருபுறமும் பிடித்துக்கொள்ளும்படி ஒவ் வொரு குச்சியைப் பதிக்கிறார்கள். இக்குச்சி களில் கொஞ்சம் தேன்மெழுகைத் தடவி வைக்கிறார்கள். இந்த சட்டிகளின் கழுத்துப் புறத்தில் ஈக்கள் நுழையும்படி ஓர் த்வாரமும் செய்யப்படுகிறது. இந்தக்காரியம் அனேக மாய் வஸந்தகாலத் தொடக்கமாகிய பிப்ரவரி மாதத்தில் செய்யப்படுகிறது.

மார்ச்சுமாஸத்தில் எங்கிருந்தாவது இந்த வீடுகளில் வைக்கப்படுகிற சட்டிகளில் தே னீக்கள் குடிப்புகுந்து கூடுகட்டத் தொடங்கு கின்றன. ஒவ்வொரு சட்டியிலும் தேனீக்கள் வந்து சேர்ந்து கூடுகள் கட்டாதபோதிலும், வீட்டில் வைக்கப்பட்ட சட்டிகளில் பாதி எண் களுக்காவது சேர்ந்து கூடுகட்டிவிடும். வீடுமட் டும் நல்ல சூடுள்ளதாயும் ஈரமற்றதாயுமிருக்க வேண்டும்.

அஸ்தமிக்கிற ஸமயத்தில் இந்த வீடுகளிற் புகுந்து சட்டி ஒவ்வொன்றையும் பார்த்து, அதிகமாய்ப் பிடித்திருக்கிற சட்டிகளிலிருந்து, தேன் நிறைந்திருக்கிற அடைகளை எடுத்துப் பிழிந்து தேனையடைவார்கள். சில அடை களில் முட்டைகளும் குஞ்சுகளுமாக விருக் கும். அவைகளைத் தொடக்கூடாது. ஒரு ஸம யம் எடுத்துப் பிழிந்தால் முட்டைகளுடைந்து அவற்றிலுள்ள நீர் தேனுடன் கலந்து தே னின் குணத்தையே கெடுத்துவிடும். ஆகை யால் மேற்கூறியபடி யெடுக்கப்பட்ட தேன் அதிக மதுரமாகவும், அதிக நாள் வரையில் கெடாமலுமிருக்கிறது. இதைக் காய்ச்சி சுத் தஞ்செய்து ஸீஸா புட்டிகளில் விட்டு வெள்ளை த்தேன் என்பதாக சென்னை முதலிய விடங் களிலுள்ள ஐரோப்பிய வர்த்தகசாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. இது ஸர்வ ச்ரேஷ்டமான தேன் என்பதாக புட்டி ஒன்றுக்கு ரூபாய் 1—4—0 வரையில் விற்கப்படுகிறது. சிலர் மேற்சொன்னபடி வீட்டைத் தயார் செய்து கொண்டு சில தேனீக்களைப் பிடித்து வந்து வீட்டிற்குள் விடுவது முண்டு. இப்படி விடப் பட்ட ஈக்கள் அந்த இடத்தின் ஸௌகரி யத்தை மற்ற ஈக்களுக்குத் தெரிவித்து அவை களைக் கூட்டிக்கொண்டு வருகின்றனவென்றும் நம்பப்படுகிறது. இந்த ஈக்கள் தினத்திற்கு 12, 15 மைல்தூரம் சென்று தேன் கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. பரங்கி நாட்டிலுள்ள ஒரு தோட்டத்தில் வைக் கப்பட்ட ஒரு கூட்டில் 15 மைலுக்கு அப்

பாஅுள்ள தொதவர் நாட்டில் புஷ்பித்தி ருக்கும் ஒருவகைச் செடியின் புஷ்பங் களிலிருந்து தேனைக் கொண்டுவந்து சேகரித் திருப்பதாகக் கூறப்படுகிறது. எப்படியென் றால் அக்காலத்தில் பரங்கி நாட்டில் அச்செடி கள் புஷ்பிக்கவில்லை என்பதைக்கொண்டே.

தேனீக்களுக்கு ஆகாரமாகியதேனை ஏதே ஷ்டமாகக் கொடுக்கத்தக்க பல ஏக்கரா விஸ் தீரணமுள்ள ஒரு புஷ்பத்தோட்டத்தை யுண்டு பண்ணிய போதிலும், அத்தோட்டத்திற்குள் ளாகவே தேனீக்களிருக்குமென்பது நிச்சய மில்லை. வேறு ஆகாரங்களை ஈக்களுக்குக் கொ டுத்து தேனையுண்டுபண்ணவோ முடியாது. அப்படியிருக்க பட்டணங்களில் இத்தொழிற் சாலையை ஏற்படுத்துவது ஸாத்தியமல்ல.

விவஸாயிகள் இம்முறையை யறிந்து கொண்டால் தங்கள் பூமிகளில் செய்து பலன டையலாமே யன்றி பலரும் கற்றுச் செய்யும் தொழிலாகக் கூறமுடியவில்லை.

டி. ஸி. வி. ரமணய்யர்.

---

## SELECTION OF SEED.

BY

M. VAIDYANATHAN.

### விதை பொறுக்கல்.

விவஸாயிகள் விதை பொறுக்கும் காலம் ஸமீபித்து விட்டது. மட்டை நெல் சேராமல் விதைகளைப் பொறுக்கவேண்டியது விவஸாயி களுக்கு முக்யமானது. மட்டை நெல் கலப்ப தினால் கதிர் முன்னும் பின்னுங்கண்டு கிடைத்த மாஸூல் தகுந்தவாறு அரிசியாகா மல் இடிந்து போகிறது. மேலும் மில் வைத்து வேலை நடத்துகிறவர்கள் இந்த நெல்லை கொள் ளமாட்டார்கள். விலையும் குறைந்தே விற்கிறது. இக்கெடுதிக்காக மட்டை நெல்லைப் பொறு க்கி எடுப்பது வழக்கம். மட்டை நெல் மற்ற வைகளைவிட முன்பாக கதிர் தோன்றுவதால் அந்த ஸமயத்தில் அக்கதிர்களைக் களைந்து விடு வது உத்தமம். சில ஜாதிகள் ஒரேகாலத்தில் கதிர்கள் தோன்றி கலந்துவிடுகின்றன. இவை களைப்பொறுக்க வேண்டுமானால் அறுத்துக் களத்துக்குக் கொண்டுவந்தவுடன் பெண்பிள் ளைகளைக்கொண்டு கதிர் கதிராகப் பொறுக்கிவி டலாம். வித்து எடுக்கும் வயல் அதிக கொழு மை யடைந்ததாகவாவது, மிகப் பஞ்சையாக வாவது இருக்கக்கூடாது. நடுத்தரமானதும் ஒற்றை அலகு நடப்பட்டு அநேக கிளை களுள்ளதாயுமான வயலை குறிப்பிடவேணடும். குறிப்பிட்ட வயலில் ஆள் இறங்கி தக்கபடி வளர்ந்து பருத்திருக்கிற நெற் கதிரை ப்ரத் யேகமாய்க் கொய்து சேகரிக்கும் கொஞ்ச நெல்லை தனியாக விதைத்து அதில் கிடைக்கும் மாஸூலை மறு வருஷத்துக்கு விதைக்காக உபயோகப்படுத்துவார்கள்.

இவ்வாறு ச்ரத்தையிருந்தபோதிலும் களம் சிறிதாயும், நெல்வகைகள் அநேகமாயும், இரு ப்பதாலும், அடுத்தடுத்து பலவகை நெல்லுக ளை ஸாகுபடி செய்வதாலும், அவைகள் கலந்து போகின்றன. இப்படி மட்டையைப் பொறுக் குவது வ்யாபாரவேலை. சாஸ்திர விஷயமான வேலை வேறு. ஒற்றை அலகாக நடப்பட்டு கிளைத்திருக்கும் கிளைகளிலிருந்து விதை எடுப் பதால் கிளைக்கும் குணம் உண்டாகிறது. கதிர் ஒன்றுபோல் பிரிந்து விளையும். அவ்வாறு மட் டை பொறுக்கப்பட்டு கிளைத்த கதிர்களாயும் உள்ளவைகளை அறுத்து களத்துக்குக் கொ ண்டு வந்து கதிர்களை மேலே தூக்கி முனையிலு ள்ள நெல் மட்டும் விழுமாறு மெதுவாய் ஒரு அடி அடிக்கவேண்டும். இவ்விதமாய் விதைக் கென்று குறிப்பிட்ட ஸ்தலத்திலிருந்து கொ ண்டுவந்த கதிர்களிலிருந்து விதை சேகரித் துக்கொள்ளவேண்டும். ஒருஅடி அடித்தபிறகு கதிர்களைத் தனியாக முழுமையும் அடித்து நெல்லாக்கிக்கொள்ள வேண்டும். மேல்கண்ட

விதமாய் வேண்டிய விதைகளை சேகரித்துக் கொள்ளலாம். ஸ்வல்பவிதை வேண்டியவர்கள் கையினால் கதிர்களின் முற்பாதியை உருவி எடுத்துக்கொள்ளலாம். இந்த மாதிரி எடுக்கப் படும் விதை பளுவுள்ளதாயும், வ்யாபார சாஸ்த் ரவேலைகள் அமைந்ததாயும் இருக்கிறது. ஸத் துள்ளதும், ஒன்றுபோல் பழுக்கக்கூடியதும், வைக்கோல் குறைந்தும், தான்யம் அதிகரித் தும், உமி சிறுத்தும், அரிசி மேன்மைப் பட்டு முள்ளதுமான விதைகளை உற்பத்திசெய்ய வேண்டும். இன்னும் வயது குறைந்தும் காய்ச் சல் வெள்ளம் இவைகளைத் தாங்கக்கூடியனவா யும் உள்ளவகைகளையும் வ்ருத்தி செய்யவேண் டும். இவ்விதமாய் சேகரிக்கும் விதையை உட னே காயவைக்கவேண்டும். விதை பக்குவ மாய்க் காய்ந்ததும் அரிசி நடுவில் உடைந்திரா தபடி கோட்டை கட்டுவது வழக்கம். ஐம்பது கலம் விதை கட்டக்கூடிய விவஸாயிகள் இப் போது ஐந்து கலம் கட்டினால் போதுமான தாயிருக்கும் இக்காலத்தில் சாக்கில் கட்டி வைப்பதே மேலான காரியம். மாதம் ஒரு முறை காயவைப்பதற்கு ஏதுவாகும்.

விதைப்பதற்கு விதைகளை ஊரவைக்குந் தருணத்தில் ஒரு பட்டணம் படி ஜலத்திற்கு 10 பலம் உப்பை ஒரு தொட்டியில் வேண்டிய வரையில் கலந்து விதைக்கவேண்டிய விதை யைக் கொட்டி கலக்குவது அவசியம். ஒன்றி ரண்டு தரம் கலக்குவதவசியம். சில நிமிஷங் கள் கழிந்த பிறகு ஜலத்தில் மிதக்கிற வைகளை எடுத்து வெளியில் போடவேண்டும். நெல்லில் பிடிபட்டு பதர்கள் கீழே தங்காத படி கலக்கவேண்டும். பின்னும் மிதக்கிற விதைகள் இல்லாதபடி செய்து நெல்லை சல்ல டை யடைத்த பாண்டத்தில் வடிக்கட்டி அந்த உப்பு ஜலத்தை மறுபடியும் உபயோகிக் கவேண்டும். இவ்வாறு செய்வதால் மிகப் பிர யோஜனமுண்டு. ஜப்பானில் இவ்வாறே செய் கிறார்கள். இவ்விதம் தெரிந்தெடுக்கப்படும் விதை கனமுள்ளது. மணி நிறைந்த விதையாக வும் இருக்கிறது. உமி குறைந்து மேன்மைப் பட்டிருக்கிறது. இரண்டு வருஷமாய் இவ்விதம் எடுக்கப்பட்ட விதையையே நான் விதைத்து வருகிறேன். மேலும் தாய்ச்செடியைவிடக் கிளைக்கும் செடியில் கதிர்கள் நடுராசியிலிருப் பதால் அதையே விதைக்கு உபயோகப்படு த்திவருகிறேன்.

விதை எடுக்கும் காலம் பின்வருமாறு:— பால், பசுங்காய், மஞ்சள், முற்றல் என நான் கு பருவங்களுண்டு. முதலாவது, விதையை அமிழ்த்த பால் பிதுங்கும்.—இரண்டாவது, பால் முற்றி விதை ம்ருதுப்பட்டு தான்யம் நிறைந்திருக்கும்.—மூன்றுவது, பசுங்காய். இத் தருணமே விதைக்கும் அறுவடைக்கும் ஏற்ற காலம். உமியுந்தாளும் மஞ்சளாயும் தான்யம் அழுத்தமாயும் இருக்கும் நெல் பளபளப்பாக வும் கனதியாகவும் இருக்கும். முற்றல் பதத் தில் விதை எடுப்பதனால் அரிசி குத்துவதற் கும் உதவாது. மேல்கண்டவிதமாய் என் னுடைய அநுபோகத்தை விவரித்தேன்.

எம். வைத்தியநாதன்.

---

## THE TANJORE DISTRICT CONFERENCE.

## தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸ்.

நாளது நவம்பர்மீ 22உ யன்று பட்டுக் கோட்டையில் தஞ்சாவூர் ஜில்லா கான்ப ரென்ஸ் நடந்தது. அப்பொழுது சென்னை யில் ப்ரபல வைத்யரும், முனிஸிபல் கமிஷன ரும், இப்போது சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பராய் எலெக்ஷன் செய்யப் பெற்றவருமான டாக்டர் டி. எம். நாயர் அக் ராஸனம் வகித்து, தஞ்சாவூர் ஜில்லா நீர்ப்பா சனத்தைப் பற்றியும், அந்த ஜில்லாவிலிருந்து கூலிகள் அந்ய தேசங்களுக்குப் போவதைப் பற்றியும், படிப்பைப்பற்றியும், ஸ்தல சுய

ஆட்சியைப்பற்றியும் பேசினர். அதன்பிறகு கான்பரென்ஸில் பல தீர்மானங்கள் செய்யப் பட்டன. டாக்டர் நாயர் நீர்ப்பாசனத்தைப் பற்றிப் பேசினதையும் கான்பரென்ஸில் நடந்த தீர்மானங்களைப்பற்றியும் இந்த ஸஞ்சிகையில் யெழுதியிருக்கிறோம். டாக்டர் நாயர் பேசிய மற்ற விஷயங்களைப்பற்றி அடுத்த ஸஞ்சிகை யில் விவரிப்போம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் அநேக புத்திமான் கள் இருப்பது போலவே ராஜதானியிலுள்ள மற்ற ஜில்லாக்களை உத்தேசித்து தஞ்சாவூர் ஜில்லா நிலத்தின் வளப்பமும் ச்லாக்யமாயிருக் கிறது. ஆனால் நிலம் விளைவதும் விவஸாயம் கடைத்தேறுவதும் மழையையும் காவேரியில் வரும் ஜலத்தையும் பொறுத்திருக்கிறது.

ஆப்ரிக்காவில் இஜிப்ட் என்பதாக ஒரு தேசம் இருக்கிறது. அதில் நைல் என்பதாக ஒரு பெரிய நதி ஓடுகிறது. லார்ட் ரோஸ்பரி என்பர் ஒரு ஸமயம் இஜிப்ட் தேசத்தைப் பற்றி பேசியபோது இஜிப்ட் தேசமே நைல் நதியாகும், நைல் நதியே இஜிப்ட் தேச மாகும் என்றார். அப்படியே நாமும் தஞ் சாவூரே காவேரி நதியாகும், காவேரி நதியே தஞ்சாவூர் ஜில்லாவாகும் என்று சொல் வதும் ஸரியாகும். காவேரியில் ச்லாக்ய மான வண்டல் வருவதால் நாளது வரையில் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு தென்னிந்தியாவின் தோட்டம் என்று கௌரவம் இருந்து வருகி றது. இந்தக் காவேரி இல்லாவிட்டால் தஞ் சையின் நிலைமை மிகவும் குறைவு அடைந் திருக்கும். இந்த விஷயம் வெகுகாலமாகத் தெரிந்ததே. இதை உத்தேசித்தே ஹிந்து ராஜாக்கள் வெகுகாலத்துக்கு முன்னாலேயே காவேரியிலிருந்து பாசனத்துக்கான வேலை கள் ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார்கள். இங்கி லீஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்படுவதற்கு முன்னாலேயே இவை ஆரம்பிக்கப்பட்டன. அநேக ஆறுகளிலுள்ள ஜலத்தைத் தேக்கி பக்கத்திலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சுவதற் குக் கட்டிய பழைய கட்டிடங்கள் இன்னம் அநேகம் இருக்கின்றன. அவைகளால் தஞ்சா வூர் அரசர்கள் நீர்ப்பாசன விஷயமாய் எவ்வ ளவு ச்ரத்தை எடுத்துக்கொண்டிருந்தார்கள் என்பது தெரிகிறது. க்ராண்ட் அணைக்கட்டு என்று சொல்லப்படும் கல்லணையுங் கூட வெகுகாலத்துக்கு முன்னால் கட்டப்பட் டதே. சில வருஷங்களுக்கு முன்னால் சில மாறுதல்கள் மாத்திரம் செய்யப்பட்டு தூக்கு ஷட்டர்கள் போட்டிருக்கிறார்கள். உண்மை யில், 1836-ம் வருஷத்தில் ஸர் ஆர்தா காட்டன் என்பவர் அப்பர் அணைக்கட்டு என்று சொல்லப்படும் மேல் அணைக் கட்டுக் கட்டினவரையில், தஞ்சாவூரார்கள் ஹிந்து அரசர்கள் செய்த பாசன ஏற்பாட்டின் பலனையே அடைந்துவந்தார்கள். 1801-ம் வருஷத்தில் ப்ரிட்டிஷார் தஞ்சாவூரை தமது வசம் அடைந்ததற்கு முன் மாத்திரம் தேச மானது குழப்பமான நிலைமையில் இருந்ததால் காவேரி நீராரம்பங்களின் பாசனம் மிகவும் கெடுதலாயிருந்தது. கம்பெனியார் தஞ்சா வூரைக் கைவசப்படுத்திக் கொண்டவுடனே காவேரி நீராரம்பங்களின் பாசனத்தை வ்ரு த்தி செய்வதற்கு வேண்டிய ப்ரயத்னங்கள் செய்யப்பட்டன. ஆரம்பத்தில் காவேரியில் உள்ள அதிக மணலை அப்புறப்படுத்துவதி லேயே வெகுவாய் ப்ரயத்னங்கள் செய்யப் பட்டன. ஆனால் அந்த முயற்சிகளால் அதிக பலன் ஒன்றும் உண்டாகவில்லை. கொள் ளிடத்தின் தலைப்பில் அப்பர் அணைக்கட்டுக் கட்டினபிறகு தான் காவேரிக்கு நன்றாய் ஜலம் வரலாயிற்று.

இப்படி மேல் அணைக்கட்டுக் கட்டினதால் கொள்ளிடத்திலிருந்து பிரியும் வாய்க்கால்களு க்கு ஜலம் குறைந்துபோயிற்று. அதனால் வரும்

ஜலநஷ்டத்துக்கு ஈடு செய்ய லோயர் அணைக் கட்டு என்று சொல்லப்படும் கீழ் அணைக்கட்டு ஒன்று 70-மையிலுக்கு அப்பால் கட்ட வேண்டியதாயிற்று. அதன் பிறகு 1887-1889-ம் வருஷத்தில் கல்லணையில் காவேரி, வெண்ணாறு, ஹெட்ரெகுலேடர்கள் கட்டவே, காவேரி, வெண்ணாறு இந்த இரண்டு நதிகளிலும் ஜலம் போவதை ஒழுங்கு படுத்துவது ரொம்ப ஸுலபமாயிற்று. பிற்பாடு செய்த சீர்திருத்தங்களெல்லாம் வெள்ளகாலத்தில் ஜலத்தை சீர்ப்படுத்தவும் ஜலத்தை ஸரிவர வாய்க்கால்களில் பாய்ச்சவுமே செய்யப்பட்டவை.

இவைகளால் காவேரி பாசன ஏற்பாட்டுக்கும் இந்தியாவிலுள்ள மற்ற பாசன ஏற்பாடுகளுக்கும் ரொம்ப வித்யாஸமிருக்கிறது. காவேரி ஏற்பாடானது நிகரற்றதாயிருக்கிறது.

இந்தப் பாசன ஏற்பாட்டில் மனிதர்களால் வெட்டப்பட்ட சிற்றாறுகளாவது பெரிய மதகுகள் போன்றவைகளாவது கிடையாது. ஜலமெல்லாம் இயற்கையான சிற்றாறுகள் வழியாக நீராரம்பம் எங்கும் பாய்கிறது. ஜலம் ஸரியானபடி சிற்றாறுகளில் போகிறதா என்று பார்ப்பதிலும், ஒரு ஆற்றில் ஜலம் குறைந்து வயல்கள் காய்ந்து போகாமலும், இன்னொன்றில் ஜலம் அதிகமாய்ப் போய் வயல்கள் கெடுதலடையாமலும் இருக்கும்படி பார்ப்பதிலே மட்டும் இஞ்சினீர் இலாகா உத்யோகஸ்தர்கள் கவனம் செலுத்துகிறார்கள். கர்னல் ஸ்மார்ட் என்பவர் நீராரம்பங்களுக்கு ஜலம் ப்ரவேசிக்கு முன் ஜலத்தை ஒழுங்குப்படுத்த அவச்யமான சீர் திருத்தங்களை செய்து முடித்தார். ஜலம் ஸரிவர பாயவேண்டியதைக் குறித்தும், ஜலத்தை செட்டர்ப் பிரித்து விடுவதைக் குறித்தும் அவர் ப்ரேரணைகள் செய்தார். ஆனால் கவர்ன்மெண்டார் அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர யாதொன்றும் செய்யவில்லை. இந்தியா கவர்ன்மெண்டார் அடைப்பாறு, ஹரிச்சந்த்ர நதி, இந்த இரண்டு நதிகள் ஸம்பந்தமாய் சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று உத்திரவு செய்தும், அடைப்பாறு ஸம்பந்தப்பட்ட மட்டில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஹரிச்சந்த்ர நதி விஷயமாய் இன்னும் ஒன்றும் செய்யப்படவில்லை.

காவேரி நீராரம்ப பாசனமானது தஞ்சாவூர் ஜில்லாவுக்கு உயிர் போலிருக்கிறது. ஆகையால் இந்தக் கான்பரென்ஸானது காவேரி பாசன நிலைமையை நன்றாய் ஆராய்ந்து அதன் குறை குற்றங்களை அறிந்துகொள்ளவேண்டும். இந்தப் பாசன ஏற்பாட்டில் அநேக பெரும் குறைப்பாடுகள் இருக்கின்றன. அவைகள் விவஸாயிகளுக்கு அதிக நஷ்டமுண்டாக்குகின்றன. க்ராமவாஸிகள் இருபது முப்பது வருஷங்களாக அநேக குறைப்பாடுகளை எடுத்து சொல்லிக்கொண்டு வந்தும், அவைகளுக்கு இன்னும் இதுவரையில் ஒரு மோட்சத்தையும் காணோம்.

காவேரி நீராரம்பங்களிலுள்ள குறைகளில் முக்யமானவைகளாவன:—

1. முக்யமான ஆறுகளில் ஜலம் பக்கங்களிலுள்ள நிலங்களை அறுக்காமல் ஒழுங்காய் ஓட ஸரிவர ஏற்பாடுகள் செய்வதில்லை.

2. சிற்றாறுகள் ஸரிவர பார்வையில்லாமலும், அவைகளில் ஜலம் விடுவதும், காபந்து செய்வதும் இன்னார்வச மிருக்கிறதென்று தெரியாமலும், ரெவின்யூ டிபார்ட்மெண்டார் டி. பி. டப்ளியு ஆதினத்தில் இருக்கிறதென்றும், பி. டப்ளியூ டிபார்ட்மெண்டார் ரெவின்யூ டிபார்ட்மெண்டாரிட மிருக்கிறதென்றும் நினைத்து வருகிறார்கள்.

3. சிற்றாறுகளிலுள்ள மதகுகள் போன்ற அநேக சில்லரைக் கட்டிடங்கள் கவனமில்லாமல் பாழாகிக்கொண்டு வருகின்றன.

4. அநேக சிற்ருறுகளில் ஜலவாட்டம் ஸரியாக இல்லை.

5. அநேக இடங்களில், வெதுவாப் கடல் கரை தாலூக்காக்களில், வடிகால் வஸதிகள் ரொம்பவும் கேவல ஸ்திதியில் இருக்கின்றன.

கடல்கரை தாலூக்காக்களில் ஸரியான ஜல மில்லை என்ற ஒரு கஷ்டம் மட்டுமல்ல. உதாரணமாய் கடற்கரை தாலூக்காவாகிய சீயாழி தாலூகாவை எடுத்துக்கொள்வோம். முதலில், அதற்கு காவேரியிலிருந்து நேரே ஜலம் அநேகமாய் பாசனத்துக்கு வருவதில்லை என்னலாம். வடிகால் ஜலம் பாயும் பழவாற்றிலிருந்து கிடைக்கும் ஜலந்தான் அந்தத்தாலூக்காவுக்கு காவேரியிலிருந்து வரும் பாசனஜலமாகிறது. காவேரியிலிருந்து அந்தத் தாலுக்காவுக்குப் போதுமான ஜலம் வருவதில்லை யென்பது வெகு காலத்துக்கு முன்னேயே தெரிந்த விஷயம். 1866-ம் வருஷத்தில் கர்னல் ஒக்ஸ் என்பவர் எழுதிய ரிபோர்ட்டில் தெரிவித்திக்கிருர்: "காவேரி அணைமேல் 5-அடி ஜலம் ஓடினல் காவேரியை அனுஸரித்த சிற்ருறுகளில் போதுமானவும் பூர்த்தியானவுமான ஜலம் போக வேண்டும். ஆனல் காவேரி ஸரிவரயில்லாததால் காவேரி அணைமேல் 7 அடி ஜலம் ஓடினல், அல்லது, ஜில்லாவுக்கு வேண்டிய அளவுக்கு இரண்டு மடங்காக ஜலம் பாய்ந்தால் தான் மாயவரம் தாலூக்காவில் போதுமான ஜலம் கிடைக்கிறது. அப்பொழுதும், சீயாழி தாலூக்காவில் ஒருபாகத்தில் ஜலம் மிகவும்குறைவாக இருந்தது."

வேண்டும் காலத்தில் பாசனத்துக்குப் போதுமான ஜலமில்லாத கஷ்டம் மட்டுமல்ல. ஜூலை மாஸத்தில் ஜலம் கிடைக்காவிட்டால் விவஸாயம் ஆரம்பிக்காமல் வட கிழக்கு மழைக்காக காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அது வந்ததும் அதோடு பழவாற்றிலும் வேண்டாத அகாலத்தில் வடிகால் ஜலம் வந்து விடுகிறது. வடகிழக்குப் பருவ மழையாலும், தாமஸித்து வரும் பழவாற்று ஜலத்தாலும் சீயாழிக்கு வேண்டாத காலத்தில் அதிக ஜலம் வந்து ஒரே வெள்ளமாகி விடுகிறது. கடற்கரை ஓரமாய் பூமி அதிக வாட்டமா யிராததினல் ஸரியான வடிகால் ஏற்பட இடமில்லாமல் இருக்கிறது. அநேககெடுதல்களால் சீயாழியில் ஸரியான பாசனமில்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிருர்கள்.

சீயாழி தாலூக்காவில் மூன்று பாசன ஆதாரங்களான ஆறுகளில், கொள்ளிடத்திலிருந்து பிரியும் ராஜன் வாய்க்கால் 14,000 ஏகராவுக்குப் பாய்கிறது. காவேரி 6000 ஏகராவுக்குப் பாய்கிறது. பழவாறு 38,000 ஏகராவுக்குப் பாகிறது. கொள்ளிடத்திலிருந்து ராஜன் வாய்க்கால் வழியாக வரும் ஜலம் விவஸாயத்துக்கு போதுமானது. ஆனல் ஜலம் ரொம்பவும் வீணுகப் போய்விடுகிறதென்று குறைப்பாடாயிருக்கிறது. காவேரியிலிருந்தும், பழவாற்றிலிருந்தும் வரும் ஜலம் பயிரிடும் காலத்தில் மிகக் குறைவாயும், வட கிழக்கு மழை காலத்தில் வருவதில் கெடுதலுண்டாக்குவதாயு மிருக்கிறது. சீயாழி தாலூக்காவுக்கு ஸரியான வடிகால் ஏற்படுத்துவதைப்பற்றியும், தெற்கு ராஜன் வாய்க்காலையும், குமுக்கு மண்ணியாற்றையும் சீர்திருத்தி அவைகளின் வழியாக அதிக ஜலம் கொண்டுவந்து பழவாற்றிலும் புது மண்ணியாற்றிலும் விட்டு பாசனத்தை வ்ருத்தி செய்வதைப்பற்றியும் ப்ரேரணைகள் செய்யப்பட்டன. கொள்ளிடத்திலிருந்து கீழ் அணைக்கட்டுக்குமேல், பழவாற்றுக்கு அதிக ஜலம் விடுவதைப்பற்றியும் ஆலோசனை செய்தார்கள். என்ன யோசனை செய்தென்ன, என்ன ஆராய்ச்சிகள் செய்துபார்த்து மென்ன, நாளது வரையில், விவஸாயகாலத்தில் போதுமான ஜலம் இன்னம் வந்தபாடில்லை. காலாகாலத்தில் விவஸாயம் செய்யாத பட்சத்தில்

தகுந்த வேலையாட்கள் கிடைப்பதில்லை. விவஸாய வேலைகள் முடியும்வரையில் போதுமான ஜலம் கிடைப்பதும் கஷ்டமாகிவிடுகிறது. ஜூலைமாஸத்தில் போதுமான ஜலம் முதல் போக ஸாகுபடிக்குக் கிடைக்குமானால், மீயாழி மிராசுதார்கள் இரண்டாவது போகம் ஸாகுபடி செய்யக்கூட ஆசைப்படமாட்டார்கள். இப்படி காலாகாலத்தில் ஸாகுபடிசெய்ய முடியாமலும், வெள்ளம் பாழாய்ப்போய் மாஸூல் கிட்டாததாலும் கடற்கரை தாலுக்காக்களிலுள்ள ஜனங்கள் பயமடைந்து அதனால் அநேகர் அந்தத் தாலூக்காக்களிலிருந்து பிற விடங்களுக்குக் குடியேறிச் செல்கின்றார்கள்.

பட்டுக்கோட்டையிலுள்ளவர்களுக்கு இவைகளை யெல்லாம் பற்றி அவ்வளவு கவலை இல்லாமலிருக்கலாம். காவேரியிலோ அமராவதியிலோ அல்லது பவானியிலோ அல்லது வேறு எங்கேயோ அதிக ஜலம் தேக்கி வைத்து, பட்டுக்கோட்டை முதலிய இடங்களுக்கு ஜலம் வரும்படி ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கும் காவேரி ப்ராஜெக்ட்டைப் பற்றித்தான் அவர்கள் அதிகம் கவனிப்பார்கள். இப்பொழுது இருக்கும் பாசன வடிகால் ஏற்பாடுகளை திருத்தம் செய்துகொண்டால் காவேரி ப்ராஜெக்ட்கைகூடினாலும் அதிக பலனடையலாமல்லவா? மேலும், காவேரி பாசன விஷயமாய் மைஸூர் கவர்ன்மெண்டார் மதராஸ் கவர்ன்மெண்டைவிட முன்னாலே விழித்துக்கொண்டு விட்டார்கள். மைஸூர் பாசன ஸ்கீம் வந்து விட்டால் பட்டுக்கோட்டைக்கு வரும் காவேரி ஜலம் குறைவடைந்து விடுமாதலால், இப்பொழுது வரும் ஜலத்தை, சீர்திருத்திய வாய்க்கால் மூலமாகவும், வடிகால் மூலமாகவும் ஒழுங்குப்படுத்தி செட்டாய் பாய்ச்சவேண்டி வரும் என்பது நன்றாய் விளங்குகிறது.

இரிகேஷன் கமிஷன் ரிபோர்ட்டின்படி காவேரி நீராரம்ப பாசனவேலைகளுக்குப் போட்ட மூலதனத்துக்கு நல்ல லாபம் வருகிறது. 1900-01-ம் வருஷம் முடியும் ஐந்து வருஷங்களில் ஸராஸரி ஒவ்வொரு வருஷத்துக்கும் காவேரியின் பாசன நிலங்களில் வந்த ரிவின்யூ ரூபா 42,31,000. ஆனால் இதில் 32,91,000 ரூபா. பழைய பாசனத்தினால் வரும் வரும்படி போக பாக்கியாயுள்ளது ஸர்க்காரால் செய்யப்பட்ட பாசன வேலைகளின் பயனாகும். இந்த பாக்கியானது ஜலத்தை ஸரிவரப் பிரித்துக் கொடுப்பதற்கு போட்ட ஸ்வல்ப முதலுக்கு நூற்றுக்கு முப்பத்தேழு விகிதம் வட்டி கட்டுகிறது. கீழ்க்கொள்ளிட பாசனத்தால் வந்த வரும்படி ரூ. 4,26,000. இதில் 1,50,000 ரூபா பழைய பாசனத்தால் வந்த ரிவின்யூவாகும். புது ரிவின்யூ போட்ட முதலுக்கு 100-க்கு 25 வீதம் வட்டி கட்டிவருகிறது. இப்படி நூற்றுக்கு 37-ம், 25-ம், வட்டிகட்டும் துறைகளில் பணம் போடுவது மிகவும் இன்பகரமானதே. ஆனால் கவர்ன்மெண்டார் இப்பொழுது வ்யாபாரம் செய்யும் கம்பெனியாயில்லை. அப்படியே கம்பெனியாயிருந்தாலும், வ்யாபார முறையில் இப்பொழுது நல்ல வரும்படி வரும் வேலைகளை இன்னம் நல்ல ஸ்திதியில் வைத்திருப்பது இன்னம் அந்த வ்யாபாரத்துக்கு ஒத்ததாகவே யிருக்கும். இந்த ராஜதானியில் உள்ள பாசன ஏற்பாடுகளின் நிர்வாகச் செலவுகளில் காவேரிப்பாசன நிர்வாகச் செலவுதான் மிகவும் குறைவானது என்று தெரியவருகிறது. கணக்குகள் பின்வருமாறு.

பாசன ஏற்பாடுகள்:—பத்து வருஷத்துக்கு ஸராஸரி பாசன நிலத்தில் ஒரு ஏகர் நிர்வகிக்கச் செலவு.

| | | |
|---|---|---|
| கோதாவரி நீராரம்பம் | ... | 5·37 அணா |
| க்ருஷ்ணா ஷை | ... | 6·51 ,, |
| பெண்ணையாற்றுப் பாய்ச்சல் | ... | 5·58 ,, |

| | | |
|---|---|---|
| பெரியாறு | ... | 9·84 அணு |
| ஸ்ரீவைகுண்டம் | ... | 5·00 ,, |
| காவேரி நீராரம்பம் | ... | 1·80 ,, |

ராஜதானியில் உள்ள மற்ற பாசன ஏற்பாடுகளை உத்தேசித்து காவேரி நீராரம்பத்தை ஸரியாக வைத்துக்கொள்ளப் பணம் ஸ்வல்பமாகச் செலவழிக்கப்படுகிறது. அதோடுகூட ஜலத்தைப் பங்கிடுவதற்கும் மேம்பார்வையிடுவதற்கும், தக்க விப்பந்திகளும் ஏற்படுத்தப்படவில்லை. பட்டுக்கோட்டையில் நீராரம்பமல்லாத இடங்களில் பாசன ஏரிகள் நல்ல ஸ்திதியில்லை என்பது தெரிந்த விஷயமே. ஏரிகளை சீர்திருத்தம் செய்யவேண்டும். நீராரம்ப பாசனவேலைகள் தக்க மேம்பார்வையுடனிருக்கவேண்டும். அவைகள் விஷயத்தில் இன்னம் அதிகப் பணம் செலவழிக்கவேண்டும்.

இரிகேஷன் கமிஷன் ரிபோர்டில் எழுதியிருக்கிறார்கள்:—"புதியவையான பாசன வேலைகள் ஆரம்பிக்க தகுந்த இடங்கள் அதிகம் இல்லாவிட்டாலும், ஏற்கனவே இருப்பவைகளை அதிகப்படுத்தவாவது, சீர்திருத்தவாவது அதிகப் பணம் செலவழிக்க ஒவ்வொரு மகாணத்திலும் ஹேதுவுண்டு. இது விஷயமாய் ஏற்படும் செலவை பாசன வேலைகளின் மூலதனச் செலவாக எண்ணினாலும் அநேகமாய் தக்க வட்டி கட்டுமென்பதில் ஸந்தேகமில்லை" என்று எழுதியிருக்கிறார்கள். கமிஷன் மெம்பர்களும் லாபம் வரத்தக்க வேலைகளில் அதிகப் பணம் செலவழிக்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ராஜதானியில் கவர்ன்மெண்டார் பாசனவேலைகள் செய்வதில் ரொம்பவும் மெதுவாயிருக்கிறார்கள். காவேரி நீராரம்ப விஷயத்தில் பாசன வேலைகளுக்கு பணம் கொடுப்பதா யிருந்தாலும் வேலையாட்கள் அகப்படுவது அரிதாயிருக்கிறது என்று எப்பொழுதும் சொல்லி வருகிறார்கள். ஸரியானகூலி கொடுத்தால் இந்தியாவில் வேலையாட்கள் கிடைப்பார்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து பர்மா லங்கை, ஸ்ட்ரெய்ட் ஸெட்டில்மெண்டுகள் இவைகளுக்கு வேலையாட்கள் குடியேறிப்போகிறார்கள். ஸரியான கூலி கொடுத்தால் வேலையாட்களை தஞ்சாவூரிலேயே இருக்கும்படி செய்துவிடலாம். கூலி வித்யாஸப்படுவதால்தான் கூலியாட்கள் ஊர்விட்டு போகிறார்கள். தஞ்சாவூர் பாசன ஏற்பாட்டில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அதோடு வேலையாட்கள் வேறு நாடுகளுக்குப் போகிறார்கள் என்றும், அதை நிறுத்த ஏதாவதுசெய்து ஜில்லாவில் ஜனத்தொகை குறைவதைத் தடுக்க வேண்டுமென்றும், கூச்சல்பாடு உண்டாகியிருக்கிறது. இந்த இரண்டு குறைகளையும் ஒரே வழியில் நிவர்த்திசெய்யலாம். பாசன ஏற்பாடுகளை சீர்திருத்த வேலை தொடங்கி வேலையாட்களுக்கு தக்க கூலி கொடுக்கவேண்டும்.

பாசன வேலைக்கு வேண்டிய மூலதனமும் வேலையாட்களையும் தவிர, பாசன சீர்திருத்த ஏற்பாட்டில் இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. நீராரம்பங்களில் பாசன வேலைகளை சீர்திருத்தவேண்டுமானால் டெல்டாவிலுள்ள ஜனங்களையும் கலந்து யோசனை செய்யவேண்டும். அவர்கள் நாளது வரையில் அந்தப் பாசன விஷயத்தில் அவரவருக்குத் தக்கபடி ஒருவகை பாத்யத்தை அனுபவித்துவருகிறார்கள். அவர்களுக்கு நஷ்டமுண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துமுடிக்க கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாட்டுடன் ஆரம்பிக்கவேண்டும். அதனோடு ஜனங்களுடைய அபிப்ராயத்தையும் அறிந்து அதை அனுஸரித்து சீர்திருத்தங்கள் செய்யவேண்டும்.

கான்பரென்ஸில் அக்ராஸனுதிபதி பேசிய பிறகு பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. காலஞ்சென்ற மிஸ்டர் ஹ்யூம், ஆர். ரகுநாதராவ், வி. க்ருஷ்ணஸாமி அய்யர், இவர்களுடைய மரணத்துக்காக அனுதாபங்காட்டித் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

2. ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் நிர்வாக ஸபையில் மெம்பராக நியமிக்கப்பட்டதைப் பற்றி ஸந்தோஷங்காட்டி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

3. தஞ்சாவூர் ஜில்லாவில்உள்ள ஸிவில் கோர்ட்டுகளின் ஜுரிஸ்டிக்ஷனை அதாவது, அதிகாரப்ரதேசத்தை மாற்றப் போவதாகத் தெரிகிறது. அதனுல் ஜனங்களுக்கு அஸௌகரியமும் செலவும் ஏற்படாதபடி செய்யவேண்டும். அதற்கு மாற்றப் போகும் ஜுரிஸ்டிக்ஷன் ரெவினியூ தாலூக்காவை அனுஸரித்திருக்கவேண்டும். ரெயில், ஸாதாரண ரோட்டுகள், இவைகளின் ஸௌகரியங்களை அனுஸரித்து மிருக்கவேண்டும். ஜுரிஸ்டிக்ஷனுக்குள்படும் ஒவ்வொரு இடத்திலும் வழக்குகள் இருக்கும் நிலைமையை உத்தேசித்து ஜுரிஸ்டிக்ஷனை மாற்றவேண்டும்.

4. இந்தக் கான்பரென்ஸினுடைய நிர்வாகக் கமிட்டியாரும் இன்னம் சில குறிப்பிட்ட மெம்பர்களும் சேர்ந்து ஒரு கமிட்டியாக ஏற்படவேண்டும். அவர்கள் வேண்டுமானுல் இன்னும் மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். அந்தக் கமிட்டி இந்த ஜில்லாவில் கோர்ட்டுகளின் ஜுரிஸ்டிக்ஷனை மாற்றுவதைக்குறித்து நல்லவழிகளை ஆலோசித்து ஒருரிபோர்ட் எழுதி ஸ்பெஷல் கமிஷனர் தமது ஆலோசனைகளைச் சொல்லுமுன் அந்த ரிபோர்ட்டை தக்க அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும்.

5. கவர்ன்மெண்டார் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் நடவடிக்கைகளை ஸ்வதேசபாஷைகளில் ப்ரசுரம்செய்து ஜில்லாகெஜட்டிலும் அவைகளை வெளிப்படுத்தவேண்டும். அப்படிச் செய்வதனுல் நேரிடும் பணச்செலவைக் காட்டிலும் நன்மை அதிகமாயிருக்கிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் தங்கள் அபிப்ராயத்தை மறுபடியும் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

6. இந்திய நாட்டுக் கைத்தொழில்களை ஜனங்கள் ஆதரிக்கவேண்டுமென்று இந்தக் கான்பரென்ஸ் ஜனங்களை வேண்டிக்கொண்டது.

7. இந்தியாவிலிருந்து தென்னுப்பிக்ரிகாவுக்குப்போன இந்தியர்களுக்கு ஸௌகர்யமுண்டாக்கும் பொருட்டு கனம் கோக்லே அவர்கள் அங்கு சென்றதற்காக கான்பரென்ஸ் அவருக்கு வந்தனம் அளித்தது.

8. சென்ற ஸெட்டில் மெண்டின்போது கவர்ன்மெண்டார் தஞ்சாவூர் நீராரம்ப நீர்ப்பாசனத்தை சீர்திருத்துவதாகவும், வடிகால்களை ஸரிப்படுத்துவதாகவும் சொன்னுர்கள். நாளது வரையில் தக்க ஏற்பாடுகள் ஒன்றும் செய்யவில்லை. ஆகையால் கவர்ன்மெண்டார் இதைப்பற்றி சீக்ரம் கவனிக்கவேண்டும்

9. வேறு தேசம் போக விரும்புகிறவன் தான் போகும்போது தன்னிருப்பிடத்தில் ஒருவருடனும் வேலைசெய்ய ஒப்பந்தம் செய்திருக்கவில்லை என்று வில்லேஜ் மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்து ஒரு ஸர்டிபிகேட் கொண்டு வரவேண்டும். அதை ப்ரொடெக்டரிடமாவது ரெஜிஸ்டர் செய்யும் உத்யோகஸ்தரிடமாவது காட்டவேண்டும் என்று 1908-ம் வருஷத்து 17-வது ஆக்டின் படிக்கு கவர்ன்மெண்டார் சட்டம் ஏற்படுத்தவேண்டும்.

10. நிலவரி:—(1) நிலத்திலிருந்து ஸர்க்காருக்குச் சேரவேண்டிய நிலவரி எவ்வளவு என்பது சட்டத்தால் நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

(2) 60 வருஷத்துக்கு ஒரு தடவை தான் நிலவரியை சட்டத்தால் அதிகப் படுத்தவேண்டும்.

(3) டிமார்க்கேஷன் கல்லுகள் நடுவதைக் குறித்த ரூல்கள் மிராசுதார்களுக்கு கஷ்டமாயிருக்கின்றன வாகையால் அவைகளை மாற்றிவிடவேண்டும்.

(4) க்ராமத்துக்கு வெளியே வாய்க்கால்களுள்ள இடங்களில் கவர்ன்மெண்டார் வாய்க்கால் வெட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) புறம்போக்கு நிலங்களை ஆடுமாடு மேய்வதற்காக ரிஸெர்வ் செய்யவேண்டும். கூடிய மட்டில் ஜனங்கள் ஒதுங்குவதற்கும் பசுந்

தாள் எருவுக்கும் வேண்டிய ஸௌகர்யங்கள் கவர்ன்மெண்டார் செய்துகொடுக்கவேண்டும்.

(6) சென்னை லாண்டு என்க்ரோச் மெண்ட் ஆக்ட் ஏற்படுவதற்கு 12 வருஷத்துக்கு முன்னால் உள்ள என்க்ரோச் மெண்டுகளை ஒன்றும் தொந்தரை செய்யக்கூடாது.

(7) ரெமிஷ்ஷன் கேட்க பெட்டிஷன் வேண்டுமென்று நிர்பந்திக்க வேண்டுவதில்லை.

(8) ஏப்ரல்மாதம் முப்பதாந் தேதிக்குள் எந்த க்ராமத்து ஜனங்களாவது பாசன வாய்க்காலை வெட்டுதல் முதலியன செய்யாவிட்டால் ரெவின்யூ உத்யோகஸ்தர்கள் குடி மராமத்து ஆக்டை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். மேற்சொன்ன யோசனையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர அந்தக் குடி மராமத்து ஆக்ட்டை தகுந்தபடி மாற்ற வேண்டும்.

(9) க்ராம பஞ்சாயத்துகள்—க்ராம பஞ்சாயத்து விஷயமாய் டீஸென்ட்ரலைஸேஷன் கமிஷனுடைய ஆலோசனைகளை கவர்ன்மெண்டார் சீக்ரம் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டும். தங்கள் க்ராமத்திலுள்ள பாசன வாய்க்கால்களை ரிபேர் செய்தும், ஸரிபார்த்தும் வர பஞ்சாயத்துக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

(11) ஸ்தல சுய ஆட்சி.—(a) லோகல் போர்டு ஸபந்தமான நிர்வாக ரிபோர்ட்டுகள், வரவு செலவு கணக்குகளுடன், தமிழில் கெஜட்டுகளில் ப்ரசுரம் செய்யப்படவேண்டும்.

(b) தாலூக்கா போர்டுகளுக்கு வரவு செலவுகளில் அதிகாரம் அதிகமாகக் கொடுக்கப் பட வேண்டும்.

(c) ஜில்லா போர்டு தாலூக்கா போர்டு வைஸ் ப்ரெஸிடெண்டுகள் உத்யோகஸ்தர் அல்லாதவர்களாய் எலக்டு செய்யப்படவேண்டும்.

(d) டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு தாலூக்கா போர்டுகளால் எலெக்ட்செய்யப்படும் மெம்பர்களின் தொகை எவ்வளவு அதிகப்படுத்தலாமோ அவ்வளவு அதிகப்படுத்தவேண்டும்.

(e) ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஒவ்வொரு போர்டு வேண்டும்.

(f) க்ராமாந்தர ரோட்டுகளில் அதிகச் செலவு செய்யப்படவேண்டும்,

(g) ஒவ்வொரு ஆற்றின் கரைகளிலும் ரஸ்தாக்கள் போடவேண்டும்.

(h) சூலமங்கலம் பாபநாசம் ரோட்டை கொள்ளிடம் வரையில் போடவேண்டும்.

(i) நாகப்பட்டணத்தில் ஒரு ஸத்ரம் கட்ட வேண்டும்.

(11) முனிஸிபல் சுய ஆட்சி.—(a) தஞ்சாவூர் கும்பகோணம் இரண்டிற்கும் சேர்மன் எலெக்ட் செய்து கொள்ள அனுமதி கொடுக்கவேண்டும்.

(b) கும்பகோணம் மன்னார்குடியில் எலெக்டெட் மெம்பர்களின் தொகையை மொத்தத்தில் முக்கால்பங்கு வரையில் உயர்த்த வேண்டும்.

(c) எந்த முனிஸிபாலிடியிலும், கௌன்ஸிலர்கள் மூன்று வருஷத்துக்கு ஒரு தடவை வார்டுகளால் ஏககாலத்தில் தெரிந்தெடுக்கப் படவேண்டும். பழைய கௌன்ஸிலர்கள் விலகும் முன்னமேயே புது கௌன்ஸில்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

(d) ஒவ்வொரு கௌன்ஸிலிலும் ஒரு வைஸ்சேர்மன் இருக்கவேண்டும். அவருக்குப் ப்ரத்யேகமான சில வேலைகள் கொடுக்கப் படவேண்டும்.

(e) முனிஸிபல் கௌன்ஸில்களுக்கு இன்னம் அதிக செலவு செய்வதற்கு அதிகாரம் கொடுக்கவேண்டும்.

(f) முனிஸிபல் கௌன்ஸில்கள் வருஷாந்த்ர நிர்வாக ரிபோர்ட்டுகளையும் வரவு செலவு கணக்குகளையும் தமிழிலும் வெளியிட்டு வரி செலுத்துவோருக்குக் கொடுக்கவேண்டும்.

(g) சேர்மன் எலெக்ட் செய்ததை, விசாரிக்காமல் ஆக்ஷேபிக்கும் அதிகாரத்தை, கவர்ன்மெண்டார் விட்டு விடவேண்டும்.

12. கௌன்ஸிலில் டிவிஷனல் ஆபிஸர்:-டிவிஷனல் ஆபிஸர் முனிஸிபல் கௌஸிலில் மெம்பராயிருப்பது அனுவச்யம்; உசிதமானதுமல்ல. ஏனென்றால் உத்யோகஸ்தர்கள் அல்லாதமெம்பர்கள் தங்களிஷ்டப்படி தங்கள் அபிப்ராயத்தைச் சொல்வது அஸௌகரியமாயிருக்கிறது. என்று இப்படிப் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

### WHY WE EAT?
### நாம் உண்பதேன்

ஒருமாடு நான்கு கால்களையும் நீட்டிக்கொண்டு பார் வைக்குப் பிணம்போற் படுத்திருந்தால் நாம் அதற்கு உயிர் இருக்கிறதா, இல்லையா என்பதை அறிந்து கொள்ளச் சிலகுறிகள் இருக்கின்றன. காலால் மெது வாய் அதை உதைத்து அது நகருகிறதாவென்றும், குனிந்து சுவாசம் விடுகிறதாவென்றும், விழியைக் கூட்டுகிறதாவென்றும், இவைபோன்றபிறகாரியங்கள் அதனிடம் இருக்கின்றனவா வென்றும் ஆராய்கி ரேம். இக்குறிகள் தான் அதற்கு ஜீவனிருக்கிறது என்று சதா நம்மை ஊகிக்கச் செய்வன. இவ்விதக் குறிகளில் யாதொன்றும் புலப்படாவிட்டால் நாம் இன்னும் நுட்பமாகக் கவனித்துப்பார்த்து மூச்சு விடுகிறதா என்று கையை மூக்கில் வைத்துப்பார்க்கி ரேம். மனிதனுயிருந்தால் நாடியைப் பிடித்துப் பார்க்கிரேம். மாடாயிருந்தாலுஞ் சரி, மனிதனுக விருந்தாலுஞ்சரி, நாடி போகாவிட்டால் உயிரில்லை என்று உடனே தீர்மானிக்கிரேம். நாம் ஒவ்வொரு வரும் ஸதாஸர்வகாலமும் விழித்துக்கொண்டிருந்தா லும், தூங்கிக்கொண்டிருந்தாலும் ஏதாவது வேலை செய்துகொண்டேதானிருக்கிரேம். சும்மாவிருக்கி ரேமென்று சொல்லுதல் உண்மையன்று. ஏனெ னில், நாம் எதைப்பற்றியாவது யோசித்துக்கொண் டிருக்கலாம். மனதைக் கட்டுவது அசாத்தியம். அதைக் கட்டுகிறவன் மஹானுவான். கைகால்கள் அசையக்கூடும் சுவாசம் எப்பொழுதும் விடுகிரேம். இவ் 'வேலைகள்'செய்ய சாதாரணமாக "பலம்" வேண் டுமென்று யாவருக்கும் தெரியும். நோயாளியை நோக்கி "நீ ஏனப்பா தள்ளாடித் தள்ளாடி நடக்கிரு" யென்று கேட்டால் 'பலம்' இல்லை யென்று சொல்லு கிறுன். ஆதலால் 'பலம்' தான் வேலை செய்வதற் குக் காரணமென விளங்குகிறது. இப் 'பலம்' எங் கிருந்து உண்டாகிறது? இதன் உற்பத்தி ஸ்தானம் யாது? நாம் எப்பொழுதும் விழித்துக்கொண்டிருந்தா லும் தூங்கினுலும் பகலிலும் இரவிலும் சுத்தமான வாயுவை (முக்கியமாகப் பிராணவாயுவை) உட் கொள்ளுகிரேம். அவ்வாயு நம் சரீரத்தினுள் நாலா பக்கங்களிலும் பரவி, நமது சரீரத்திலுள்ள மாமிச முதலிய கருவிகளுடன் சேர்ந்து ஓர்வித "ஈர எரிச் சல்" எப்பொழுதும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு ஜ்வாலை கிடையாது. அவ்விதமாக எரிந்து கொண்டிருத்தலைத்தான் நாம் 'ஜீவாக்கினி' என்று சொல்லுகிரேம். நமது வைத்தியர்கள் இவ்வக்கினி தான் யாவற்றுக்கும் காரணமென்று சொல்வர். இவ் வீர எரிச்சல் தான் 'பலம்' என்பதற்குக் காரணம். இவ்வெரிச்சல் குறைந்தால் 'பலம்' என்பது குறை யும். 'பலம்' குறைந்தால் வேலைகளில் லோபம் உண் டாகிறது. இவ்வாறு உண்டாவதினின்றும் நாம் இவ் வீர எரிச்சல் இன்றியமையாதது எனத் தெரிந்து கொள்ளுகிரேம். அவ்வெரிச்சலும் குறைவின்றி ஒரே விதானமாயிருத்தல் வேண்டும். ஜாஸ்தி 'பலம்' வேண்டிய காலத்தில் ஜாஸ்தியான எரிச்சலிருத்தல் அவசியம். இல்லாவிடில் பலம் பெறமுடியாது. எல் லாம் நீராவி யந்திரம் போன்றுதான். இவ்வீர எரிச் சல் எப்பொழுதும் இருந்தால் நமது சரீரத்தில் 'கழிவு' உண்டாகிறது. எப்படி சாதாரண எரிச்ச லில் கட்டைகள் செலவழிகின்றனவோ அப்படி நமது சரீரத்தில் எரிந்துகொண்டிருக்கும் ஈர எரிச்ச லாற் கழிவு உண்டாகிறது. இக்கழிவு சுமார் ஒரு குறித்த அளவுக்கு வந்தவுடனே, இயற்கை என்று ஒன்று உளதல்லவா? அது பசி, தாகம் என்னும் இரண்டு தடுத்தற்கரிய உணர்ச்சிகளால் நமக்கு அவ் விஷயத்தைத் தெரிவிக்கிறது. உடனே நாம் அதை அறிந்து உணவை உட்கொண்டு பசியைத் தீர்த்துக் கொள்ளுகிரேம். அதாவது நாம் பசியைத் தீர்த்துக் கொள்ள உட்கொள்ளும் உணவு ஜீரணமாகி உடம் போடு ஒத்துக் கழிவைச் சரிப்படுத்துகிறது. எரிச்ச லுக்கும் யாதொரு ஹானியும் நேரிடுகிறதில்லை. பலத்துக்குக் குறைவுமில்லை. ஜீவாதாரவேலைகளும் யாதொரு கலக்கமில்லாமல் நடக்கும். இவைகளே நாம் உணவு உண்பதற்குக் காரணம். சட்டையின்றி நெருப்பில்லை; நெருப்பின்றிப்பலமில்லை ; பலமின்றி ஜீவாதாரவேலைகள் நடவா. உணவுதான் கட்டை யென்று வைத்துக்கொள்ளலாம். ஆனுல் ஒரு விஷ யம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். உணவுதான் கட்டை என்முல் உணவு அப்படியே பிராணவாயு

வுடன் சேர்ந்து எரிந்து பலத்துக்குக் காரணமாகிற தென்று சற்றேனும் எண்ணலாகாது. எனெனில், உணவு அப்படிப் போவதல்ல. முதலில் ஜீரணமாகி சரீரத்தோடு சரீரமாய் இரண்டறக் கலக்கிறது. பிறகு பிராணவாயுவுடன் சேர்ந்து எரிச்சல் உண்டாகிறது. இவ்வித்தியாசம் மனதில் வைக்கவேண்டிய முக்கிய கவனிப்பு. அவ்விதமான பசிதாக மென்பதைக் கவனிக்காவிட்டால் 'கழிவு' மேன்மேலும் நடந்துகொண்டிருக்கும். கழிவைச் சரிப்படுத்த உணவு இல்லை. நாளடைவில் உடம்புமெலிந்து நோய் உண்டாகும்.

இவ்வெரிச்சலைத்தான் ஆங்கிலேய ஜீவதத்துவ சாஸ்திரிகள் 'பிராணுதார விளக்கு' என்று சொல்லுகிறார்கள். இவ்விளக்கில் எண்ணெய் குறைந்து ஜ்வாலைகொஞ்சம் நடுங்கினால் பலம் என்பதும் குறைந்து நடுங்கும். இவ்விளக்கு நிறைந்தே யிருக்கவேண்டும் வெளிச்சம் குறையக்கூடாது. அப்பொழுது பலமும் குறையாது. இவ்விளக்குதான் பிராணன். இவ்விளக்கை அணையாது வைக்கவே நாம் உணவை உட்கொள்ளுகிறோம்.—வித்தியாபாநுவில் என். சோமசுந்தரையர்.

---

## THE TRAVANCORE MATCH FACTORY.

## திருவாங்கூரில் ஒரு தீக்குச்சி சாலை.

திருவாங்கூரின் காட்டிலாகா அதிகாரியாகிய மிஸ்டர் ராமராவ் திருவாங்கூர், கொச்சி, மைஸூர் முதலான பல சமஸ்தானங்களில் தீக்குச்சிசாலை ஸ்தாபிக்க நல்ல வஸதிகள் இருப்பதாகவும், அந்தக் காடுகளில் தீக்குச்சி செய்வதற்கு உபயோகமாகும் ம்ருதுவான நல்ல மரங்கள் வேண்டியமட்டும் அகப்படக்கூடு மென்றும், ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்தால் நல்ல லாபம் கிடைக்குமென்றும், விபரமாக கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு குறிப்பு எழுதிப் பிரசுரித்தார். அவர் பிரசுரித்த குறிப்புக்கு ஒத்தபடி இப்போது ஒரு கம்பெனியார் திருவாங்கூரில் தீக்குச்சித் தொழிற்சாலை யொன்று ஸ்தாபிப்பதாக முன் வந்திருக்கிறார்கள். இந்தக் கம்பெனி ஸௌத் இன்டியன் மாட்ச் பாக்டரி, லிமிடெட், என்று சொல்லப்படும். இதற்கு முன் திருவாங்கூர் திவானாயிருந்த திவான் பகதூர் கே. க்ருஷ்ணஸ்வாமி ராவ் ஸி. ஐ. இ. அதன் டிரெக்டர்களில் ஒருவர்.

இந்தக் கம்பெனிக்குச் சில ஸாதகங்கள் செய்ய வேண்டுமென்று அந்த சமஸ்தானக் கவர்ன்மெண்டை வேண்டிக்கொண்டதற்கு, அந்த கவர்ன்மெண்ட் அநேகமாய் இசைந்திருக்கிறார்கள். அந்தக்கம்பெனியார் கேட்டுக்கொண்ட ஸாதகங்கள் இன்னவை என்பதையும், கவர்ன்மெண்டினுடைய மறுமொழியையும் எழுதுகிறோம். முதலாவது அவர்கள் கேட்டுக்கொண்டது, தொழிற்சாலை கட்டுவதற்காகவும், மரங்கள் போட்டு வைப்பதற்காகவும், இன்னும் பல கட்டிடங்கள் கட்டி வேலை நடத்துவதற்காகவும், 50 எக்கரா நிலம் தகுந்த இடத்தில் கவர்ன்மெண்டார் இனமாகவும் வரியில்லாமலும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப்பதிலாக, பாரஸ்ட் கன்ஸர்வேட்டர் மிஸ்டர் ராம ராவோடு ஆலோசனை செய்து, கவர்ன்மெண்டார் 25 எக்கரா நிலம் போதுமென்று நிச்சயித்து, எரூர் ரிஸர்வில் இந்த விஸ்தீரணமுள்ள நிலத்தைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலத்தைக் கம்பெனி 20 வருஷம் தீர்வையில்லாமல் அனுபவிக்கலா மென்றும், ஆயினும் தற்காலத்தில் இந்தக் கம்பெனி மேற்படி நிலத்துக்கு உடையவர்களாக விரும்பும்பட்சத்தில், விலையார்த்தமாக எக்கராவுக்கு 50 ரூபாயும் வரியாக எக்கராவுக்கு 2 ரூபாயும் கொடுத்தால் கவர்ன்மெண்டார் அந்த நிலத்தைக் கொடுத்துவிடச் சம்மதிப்பார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலையைக் கட்டப் பிடிக்கும் மரத்தை யெல்லாம் இனமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டதற்கு, மரத்தை வெட்டவும் கொண்டு போகவும் பிடிக்கும் செலவைமட்டும் கொடுத்தால் கொண்டு போகலாமென்று சொல்லியிருக்கிறார்கள். தீக்குச்சிக்காகவும் பெட்டிகள் செய்வற்காகவும் 60,000 முதல் 1,80,000 கன அடி வரையில் தகுந்த மிருதுவான மரங்களும், தீப்பெட்டிகளை யடைத்து அனுப்புவதற்காகப் பெரும் பெட்டிகள் செய்வதற்கு 12,000 முதல் 36,000 கன அடி வரையில் மரங்களும், இந்த மரங்களை முதல் மூன்று வருஷத்துக்கு இனமாகவும், பிறகு சிறிது சிறிதாய் விலையை அதிகப்படுத்தியும் கொடுக்கவேண்டும் என்று கேட்க, அதற்கும் கவர்ன்மெண்ட் 12-வருஷம் வரையில் கொடுப்பதாகச் சம்மதித்து இருக்கிறார்கள். ஆனால் சில காலத்துக்குப் பிறகு கம்பெனி கண்ட்ராக்டர்கள் மூலமாய் இந்த மரத்தைக் குறைந்தவிலைக்குப்பெறக்கூடுமானல்

அவர்கள் மூலமாய் மூன்று வருஷத்துக்குப்பிறகு ஒரு கன அடிக்கு மூன்று பைசா விழுக்காடு கவர்ன்மெண்டுக்குக் கொடுத்துப் பெறலாம். நாலாவது, இவர்கள் கேட்ட தென்னவெனில், முதல் மூன்று வருஷத்துக்கு, தொழிற்சாலைக்கு வேண்டிய விறகை இனமாய்க் கொடுக்கவேண்டுமென்றும், அப்புறம் 20-வருஷம் வரையில் டன்னுக்கு 3 ரூபாய் விகிதம் கொடுக்கவேண்டுமென்றும், கேட்டதற்கு கவர்ன்மெண்ட் டன் ஒன்றுக்கு $3\frac{1}{2}$ ரூபாய் முதல் $4\frac{1}{4}$-ரூபாய் வரையில் விலை வைத்துக்கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தீக்குச்சி செய்து வெளித்தேசங்களுக்கு அனுப்பினால் அதற்குக் கவர்ன்மெண்ட் வரி விதிக்கக்கூடாது. இதற்கு செயற்கைச் சாமான்கள் வெளியில் அனுப்பும்போது அதற்குக் கவர்ன்மெண்ட் வரி விதித்தால் நலமல்லவாகையால் அப்படிச் செய்யப்பட மாட்டாதென்று சொன்னார்கள். தொழிற்சாலையை அடுத்துச் சமீபத்திலுள்ள டாங்கியிலிருந்து மெட்ராஸ் பாங்கிக்கும் அதிலிருந்து இந்த பாங்கிக்கும் பில்கள் சார்ஜில்லாமல் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்க அதற்கும் ஒப்புக்கொண்டார்கள்.

அடுத்த 25 வருஷங்கள் வரையில் இந்தக்கம்பெனியே தீக்குச்சி செய்யவும் விற்கவும் வெளியேற்றவும் சுதந்திரம் பெறவேண்டுமென்று கேட்க, அப்படிக் கேட்டபடி கவர்ன்மெண்ட் ஒப்புக்கொள்ளா விட்டாலும் அது நன்றாய் வேலை செய்து போதுமான மிருதுவான மரங்களை வாங்கும் பட்சத்தில் வேறொரு கம்பெனி ஆதரிக்கப்படமாட்டாதென்று சொல்லப்பட்டது. கடைசியாக இந்தக் கம்பெனி போட்ட மூலதனத்துக்கு நூற்றுக்கு 4 டிவிடண்ட் கொடுக்க கவர்ன்மெண்ட் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அல்லது பங்கு ஒன்றுக்கு 25 ரூபாய் விகிதம் 1000-பங்குகள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் கவர்ன்மெண்டைக் கேட்க, கம்பெனியில் வியாபார சம்பந்தம் எதுவும் வைத்துக்கொள்ள மாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். இப்படி கம்பெனி கேட்டதெல்லாம் அநேகமாய்க் கிடைத்துவிட்டபடியால், இது தகுந்த மூலதனத்துடன் ரிஜிஸ்தராவது தான் பாக்கி.—சுதேசமித்திரன்.

---

## THE LAW OF THE TEACHER.

## உபாத்யாயருக்குரிய விதிகள்.

உபாத்திமைத்தொழில் மிகவும் மேலான தொழிலாதலால் அது மேலானவகையாக நடத்தப்பட வேண்டியதாம். அதைச் சிறந்தவகையாக நடத்துவதற்குரிய விதிகள் சிலவுள.

உபாத்தியாயர் அப்பிரமாணங்களை யநுசரித்து நடப்பதே அத்தொழிலின் அநுகூல இரகசியமாம். தான் கற்றுக்கொடுக்கப் போவதை உபாத்தியாயர் தாமே கசடற அறிந்திருக்க வேண்டியது முதலாம் இலட்சணமாம். உபாத்தியாயர் கிரியை நடத்துவதற்கு வேண்டிய கருவி அறிவே. அறிவில் பல அளவுகளுண்டு. (1) யாரோ ஒருவர் சொல்லும் போது அதைக் கிரஹித்தக்கதாக மாத்திரம் ஒன்றைப் பற்றி யறிந்திருத்தல். (2) நாம் நினைவுகூரத்தக்கதாக அல்லது பொது அளவாக அதைப் பிறருக்கு விவரிக்கத் தக்கதாக ஒன்றை யறிந்திருத்தல். (3) நாம் எடுத்தபடி அதை விளங்க வைத்துத் திருஷ்டாந்தப்படுத்தி வெளிப்படத்தக்கதாக ஒன்றை யறிந்திருத்தல், அல்லது (4) ஆழமான கருத்தோடும் விரிவான ஸம்பந்த சார்புகளோடும் அதின் முக்கியமும் மேன்மையும் நம்மிற் பதிந்து எழுப்பிக் கொண்டிருக்கத்தக்க வகையாக ஒன்றையறிதல்.

தன் மாணக்கரை அருட்டிவிடத் தக்க திறமை உபாத்தியாயரின் இரண்டாம் இலட்சணம். அவருடைய அறிவு மட்டுப்பட்டதாயிருந்தாலும் மாணக்கன் ஆனமட்டும் பிரயாஸப்பட்டு வேலை செய்யத் தக்கதாக அவனைத் தூண்டிவிடும் திறமை உபாத்தியாயருக்கு மிகவும் அவசியம். அதுவே அவருடைய அநுகூலத்துக்கு அஸ்திவாரம். இது அவருடைய அறிவின் தீர்க்கத்துக்கும் தெளிவுக்குந் தக்க அளவாகவே யிருக்கும்.

கற்றுக்கொடுக்கும் விஷயங்களை மற்ற விஷயங்களோடு ஸம்பந்தப்படுத்தித் தானுங் கண்டு தன் மாணக்கருங் காணச்செய்யும் திறமை உபாத்தியாயரின் மூன்றாம் இலட்சணம். ஒரு உண்மை அதனோடு ஸம்பந்தப்பட்டவைகளால் தெளிவாக உறுத்தப்படும். ஸம்பந்தசார்புகளோடு அறியப்படாத எதுவும் அரைக்கூறு அறிந்ததாகும். ஆகையால் இவ்வாறான உதாரணங்கள் சம்பந்தக்குறிப்புகளால் மாத்திரமே மேலான விரிந்த உண்மைகள் எளிதிற் தெளிவுற அறியப்படும்.

ஆழ்ந்த உணர்வை எழுப்பிவிடுந் திறமை உபாத்தியாயரின் நான்காம் இலட்சணம். ஒரு விஷயத்தை நன்குணர்ந்தோர் அதில் உற்சாக முடையோராவார். மனோகாட்சியின் தெளிவாற் புலமைச் சிறப்பு, பேச்சலங்காரமாகிய இவைகளுண்டாகின்றன. அக்கினி அக்கினியை யுண்டாச்குவதுபோல உணர்வின் உற்சாகம் பிறரிலும் அதை யுண்டாக்கும்.

மாணுக்கர் பூரண நம்பிக்கை வைக்கச்செய்யும் நிறைந்த அறிவு உபாத்தியாயரில் ஐந்தாம் இலட்சணம். உண்மையைக்குறித்த நிச்சயத்தால் மாணுக்கரின் சிந்தனைகளுக்கு உறுதியான வழிகாட்டி, இடறல்களை நீக்கி, ஏற்ற குறிப்புகளால் அவர்களுக்குத் தைரியத்தை யுண்டாக்கி முன்னேறிச் செல்லச்செய்தல் அவருக்கு இயல்பாகும். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லா விஷயங்களிலும் மாணுக்கர் அமைவர். ஆகையால் உபாத்தியாயரால் எப்போதும் கைக்கொள்ளப்படவேண்டியவைகளாகப் பின்வரும் பிரமாணங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன:—

1. ஒவ்வொரு பாடத்தையும் புதிதாக ஆயத்தப்படுத்து. அப்போதுதான் உற்சாகமுண்டு.

2. ஒவ்வொரு பாடத்திலுள்ள வேறு ஸத்தியங்களுக்குரிய சார்புகள் ஸம்பந்தங்களைத் தேடிப்பிடி. இவைகளால் விஷயத்தைத் தெளிவாக்கும் உதாரணங்கள் கண்டுபிடிக்கப்படும்.

3. பாடத்திற் கருத்துகள் செம்பாகமும் தெளிவான பாஷையில் அமையத்தக்கதாக வரும்வரைக்கும் அதைப்படி.

4. பாடத்தில் ஸத்தியங்களுக்குரிய இயல்பான ஒழுங்கையும் தொடர்பையுங் கண்டுபிடி. ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வொரு பாடத்திலும் ஸாதாரணமானவைகளிலிருந்து மேலான கருத்துகளுக்கு ஏறிச்செல்லும் இயல்பான படிகளுண்டு.

5. கற்போரின் ஜீவியத்திற்கும் கடமைக்கு முரிய கருத்துகளைப் பாடத்திற் தேடிப்பிடி.

6. எல்லா எத்தனங்களையும் தாராளமாக உபயோகி. காணப்படும் சாட்சிபோல ஸத்தியம் மனதின் முன்வரும் வரைக்கும் சோராதே.

7. பலதொடர்புகளை யாராய்ந்தாலும் ஒன்றையாவது தீர்க்கமாயறியப்பார். பலவற்றை அரைகுறையா யறிவதிலும் ஒன்றை நன்கறிவதே உத்தமம்.

8. பாடத்தைப் படிப்பிப்பதற்குரிய ஒரு ஒழுங்கு வைத்துக்கொண்டு அதின்படிசெய்.—உதயதாரகை.

## THE MAIZE.
## மக்காச் சோளம்.

மக்காச்சோளமானது மாதுளம் பழத்தின் விதைகளின் பருமனுள்ள ஒருவகைச் சோளம். இந்தச்செடியானது சாதாரணமாய்ச் சோளப்பயிர் போலவே இருக்கும். ஆனால் இதன் தண்டும் இலைகளும் பெரிதாயிருக்கும். மக்காச்சோளம் 8 அல்லது 10 அடி உயரம் வளரும். சோளத்துக்கும் இந்தப் பயிருக்கும் முக்கியமாகக் கதிரில்தான் வித்யாஸம். ஸாதாரண சோளத்தின் கதிர் செடியின் உச்சியில் உண்டாகுமல்லவா? ஆனால் மக்காச்சோளத்தின் கதிர்கள் உச்சியில் உண்டாகாமல் அச்செடியிலுள்ள இலைகளுக்கும் தண்டுகளுக்கும் மத்தியில் உண்டாகின்றன. சாதாரண சோளத்தின் ஒரு பயிரில் ஒரே ஒரு கதிருண்டாகிறது. ஆனால் மக்காச்சோளத்திலோ ஒரே செடியில் வளத்திற்குத் தக்கபடி 2 முதல் ஐந்து கதிர்கள் உண்டாகின்றன. சோளக்கதிரில் தானியம் வெளியே தெரியும். மக்காச்சோளத்தின் கதிரானது கம்பங்கதிர்போல் ஒரு மிருதுவான தண்டில் விதைகள் வரிசை வரிசையாய் அடுக்கியிருக்கும். கதிர்கள் 5-முதல் 12 அங்குல நீளம் இருக்கும். இதில் சிவப்பு, மஞ்சள், வெள்ளை, கறுப்பு, கலப்பு நிறம், வரியுள்ளது, இப்படி அனேக தினுசுகளுண்டு. கதிர்களில் தாழம்பூவின் புறவிதழ்கள் போன்றதும் சற்று அகன்றும் பெரிதுமாயிருக்கின்ற புறவிதழ்கள் தானியத்தை மூடிக்கொண்டிருக்கும். பட்டுநூல் திரள்போன்ற ஒருவித உரோமக்கொத்து கதிரிலிருந்து தொங்கும்.

இந்தத் தானியம் எல்லாத் தேசங்களிலும் பயிராக்கப்படுவதற்கும், அங்குள்ள சகல ஜீவராசிகளுக்கும் அளவிறந்த உபகாரப்பொருளாய் ஏற்படுவதற்கும் முதல் காரணமாயிருந்த அமெரிக்காத் தேசத்தவர்களுக்கு இவ்வுலகம் முழுவதிலுள்ள ஜனங்கள் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் பூர்வகாலத்தில் இந்தத் தானியமானது அமெரிக்காக் கண்டத்தில் பெருவியா, மெக்ஸிகோ என்னும் தேசங்களில் வசித்துவந்த பூர்வீசர்களால் கொஞ்சமாகப் பயிரிடப்பட்டு வந்தது. கி. பி. 1492௵ ஆங்கிலேயர் அமெரிக்காக் கண்டத்தில் புதிதாய் குடியேறியபொழுது இதன் பற்பல உபயோகங்களைக் கண்டறிந்து தாங்களும் கொஞ்சந் தானியத்தைச் சம்பாதித்துக் கொஞ்சங் கொஞ்ச

மாய்ப் பயிராக்கி வ்ருத்தி செய்தார்கள். இப்படியே அமெரிக்கா தேசமெங்கும் இந்தத் தானியமானது கொஞ்சங் கொஞ்சமாகப் பரவிற்று. 15-ம் நூற்றாண்டின் முடிவிலும் 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஐரோப்பாவுக்கும், சீனா, ஜப்பான், இந்தியா முதலிய அன்னிய தேசங்களுக்கும் இந்த முக்கியமான தானியம் கொண்டுவரப்பட்டது. ஜிஹாங்கீர் என்னும் மகமதிய அரசன் காலத்தில் போர்த்துகல்தேசத்து வர்த்தகர்களால் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு அன்னாசிப்பழமும், மக்காச்சோளமும் முதல் முதல் கொண்டுவரப்பட்டதாகச் சில ஆங்கிலேய பண்டிதர்கள் யூகிக்கிறார்கள்.

மக்காச்சோளமானது பூர்வத்தில் நமது தேசப் பயிரல்லவென்று தீர்மானமாய்ச் சொல்லலாம். எப்படியெனில் நமது தேசத்துப் பூர்வீகக் கிரந்தங்களில் எதிலாவது மக்காச்சோளப்பயிரைப்பற்றிய பிரஸ்தாபமே இல்லையெனத் தெரிகிறது. அந்தப் பயிருக்கு வடமொழியில் பெயர் எதாவது ஏற்பட்டிருப்பதாகவும் காணப்படவில்லை. ஆங்கிலேய ஸம்ஸ்கிருத வித்வான்கள் சிலர் மக்காச்சோளத்துக்கு 'யவாநாளம்'' என்றும், "சஸ்ய விசேஷம்'' என்றும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பெயர்கள் புதிதாய் கொடுக்கப்பட்டதாய்த் தோன்றுகின்றனவேயன்றிப் புராதன நாமங்களாய்த் தோன்றவில்லை. இந்தத் தானியத்துக்கு இந்துஸ்தானியில் மக்கா அல்லது பாராஜுவார் என்றும், தெலுங்கில் மக்கஜொன்ன என்றும், வடமேற்கு மாகாணங்களில் மக்கை என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. இவைகளெல்லாவற்றிலும் மக்க என்ற பதம் தவறாமலிருப்பதால் இந்தத் தானியம் அரேபியா தேசத்திலுள்ள மெக்கா என்னுமிடத்திலிருந்து முதல் முதல் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இந்து தேசத்தவர்களெல்லாம் நம்பினார்களென்று தோன்றுகிறது. மகமதிய அரசன் காலத்திலும் அந்த இராஜாங்கத்தார் மூலமாயும் இந்தத் தானியம் முதல் முதல் கிடைக்கப்பெற்றதால் மகமதியருக்கு ஓர் விசேஷ ஸ்தலமான மெக்கத்திலிருந்து அது கொண்டுவரப்பட்டதாகக் குடிகள் நம்புவதற்கு ஏஷ்யமுண்டாயிற்றென்று நாம் யூகிக்கலாம்.

சென்னை இராஜதானியிலுள்ள ஜனங்களுக்குச் சில இடங்களில் நெல்லும், சில இடங்களில் கேழ்வரகு, சோளம் முதலியனவும் முக்கியமான போஜன தானியங்களாய் உபயோகப்பட்டு வருவது போலவே இவ்வுலகத்திலுள்ள அநேக தேசங்களுக்குப் பிரதான போஜன தானியமாக உபயோகப்படுவது மக்காச்சோளம். அமெரிக்கா தேசத்தில் இந்தத் தானியம் கோடிக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி செய்யப்படுகிறது. 1902-ம் வருஷத்தில் கணக்கெடுத்ததில் அமெரிக்காதேச ஐக்கிய மாகாணங்களில் மட்டுமே 9,44,88,000 ஏக்கர் நிலங்களில் மக்காச்சோளம் பயிராயிருந்தது. அந்த வருஷத்தில் இந்தப் பயிரிலிருந்து * 2,556,311,000 புஷல் தானியம் விளைந்ததாகவும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அந்தத் தேசத்தில் இவ்வளவு அதிக விஸ்தீரணத்தில் வேறெந்தத் தானியமும் பயிர் செய்யப்படவில்லையென்று தெரியவருகிறது.

அமெரிக்கா தேசத்தில் விளையும் மக்காச்சோளப் பயிரின் அளவை அவ்விடத்து விவசாய பத்திரிகை ஒன்று நன்றாய் விவரித்துப் பின்வருமாறு காட்டியிருக்கிறது. 1888-ம் வருஷத்தில் பயிர் செய்து அறுவடை செய்த மக்காச்சோளத்தை மாத்திரம் வண்டிகளில் ஏற்றி, வண்டி ஒன்றுக்கு ஒரு டன் நிறை (சுமார் நாலரை பாரம்) பளுவேற்றி, வண்டி நிற்பதற்கும் மாடுகள் அவைகளில் பூட்டி நிற்பதற்குமாய் ஒரு வண்டிக்கு 30 அடி நீளம் விட்டு, வண்டிகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாய் நிறுத்தினால் இந்த நீளம் சுமார் 284,000 மைல் தூரம் வரை இருக்குமென்று கூறுகிறது. அந்தத் தேசத்தில் பயிர்த்தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் அதிகப்பாகம் மக்காச்சோளச் சாகுபடியினாலேயே கிடைக்கிறதாம். இந்தக் காரணத்தையிட்டே உயர்ந்த தரமுள்ள நிலங்களெல்லாவற்றையும் இந்தப் பயிருக்கே விட்டுவிடுகிறார்களென்றும் தெரியவருகிறது. மேலும் இந்தப் பயிருக்கு ஒரு சிலாக்கியமான தன்மையுண்டு. சில பயிர்கள் பனி பெய்யும் குளிர்ந்த தேசங்களிலேயே உண்டாகும். சில பயிர்கள் உஷ்ணதேசத்திலன்றிக் குளிர் அதிகமாயுள்ள தேசத்தில் விளையா. மற்றும் சில பயிர்கள் மலைப்பிரதேசத்திலேயே விளையும்; சில பயிர்கள் பள்ளத்தாக்குகளிலேயே யுண்டாகும். இப்படிக்கின்றி மக்காச்சோளமானது உஷ்ணதேசங்களிலும், குளிர்ந்த தேசங்களிலும், பள்ளத்தாக்குகளிலும், சமபூமிகளிலும் மலைப்பிரதேசங்களிலும், பனியிலும், மழை

* மக்காச்சோளம் புஷல் ஒன்றுக்கு பட்டணம் படி 20 அல்லது 56 இராத்தல்.

யிலும், வெயிலிலும், எவ்விதமான காலதேச பேதங்களிலும் விளைவுக்கு வரும். ஒரு தேசத்திலிருந்து இந்த விதையை மற்றொரு தேசத்துக்குக் கொண்டு போய் விதைத்தால் அந்தத் தேசத்தின் சீதோஷ்ண பேதங்களுக்குத் தக்க விதமாய் வெவ்வேறு தினிசு தானியமாக விசற்பித்துக்கொள்ளும் குணம் மக்காச்சோளத்துக்கு உண்டு. உஷ்ண தேசத்தில் உண்டாகும் உயர்ந்த தட்டையும் பருமணிக் கதிர்களுமுள்ள ஓர் தினுசின் விதையைச் சீதளதேசத்திற்குக்கொண்டு போய் விதைத்தால் அதிலுண்டாகும் பயிர் முதல் முதல் வெகு சேவலமாயிருக்கும். சில வருஷங்களுக்கு விடாமல் தொடர்ந்து சாகுபடி செய்து வந்தால் கட்டைத் தட்டையும் பொடிமணி நிறைந்த பல நிறக் கதிர்களும் வரவர விளையும். முதல் முதல் கொண்டுவந்து விதைத்த வித்து ஒருவித மிருக்க அந்த வித்திலிருந்து விருத்தியாகி அனேக வருஷங் கழித்து அந்நாட்டில் விளையும் தானியம் வேறு நிறமும் பருமனும் வேறுகுணமும் உடையதாக ஏற்படும். உஷ்ண தேசத்தில் $\frac{1}{2}$ அல்லது 3-மாதத்தில் விளையும் வித்து சீதளதேசத்தில் விளைவுக்கு வர 6-மாதக் காலஞ் செல்லும். இப்படி வரவர வித்தின் பூர்வ குணங்கள் முற்றிலும் மாறி வேறு குணங்கள் அதற்கு ஏற்படுவது ஒரு முக்கியமான விசேஷம்.

இந்தியாவுக்கு முதல் முதல் கொண்டுவரப்பட்ட மக்காச்சோளத்தின் வித்து ஒரு தினுசாகவே யிருந்திருக்கவேண்டும். அப்படி யிருந்தும் நாளாவட்டத்தில் சீதோஷ்ண பேதங்களுக்குத் தக்கபடி அந்தப்பயிரானது குணம் மாறி இப்போது வங்காளத்தின் கீழ்ப் பக்கங்களிலுள்ள சதுப்பு நிலங்களிலும் செழிப்பாய் வளர்ந்து பலன் கொடுக்கிறது; மத்திய மகாணங்களிலும் இராஜபுதனத்திலுமுள்ள பாலை நிலங்களிலும் மணல் தரைகளிலும் உண்டாகிறது; ஆனி மாதத்துக்கும் புரட்டாசி மாதத்துக்கும் இடையே 52-செவி மழைபெய்யும். சிம்லாமலைப் பிரதேசத்திலும் விசேஷமாய்ப் பயிராகின்றது; அதே காலத்தில் 5-செவி மழைக்கதிகம் பெய்யாத பெஷாவார் நாட்டிலும் பயிராகின்றது. மழை சுமாராய்ப் பெய்கிற ஹிமகிரி பர்வதத்தின் கீழ்ப் பக்கங்களிலும், குளிர் அதிகமாயுள்ள எற்கண்டு, ஹீரத்து, தீபேத்து முதலான மேற்குப் பிரதேசங்களிலும் விளைகின்றது. சமுத்திர மட்டத்துக்கு 9000 அடி உயரத்துக்கு மேற்படாத இடங்களில் மக்காச்சோளம் விளைவுக்கு வருகின்றது. அதற்கு மேற்பட்ட மலையுச்சிகளில் பலன் கொடாது. மேலும் இந்தியாவிலுங்கூட சில இடங்களிற் மக்காச்சோளம் $2\frac{1}{2}$ அல்லது 3 மாதத்தில் விளைவுக்கு வந்தும், பின்னும் சில இடங்களில் விளைய 6 மாதம் செல்லுகிறது. இது புன்செய்த் தானியமாகவு மிருக்கிறது; சிற்சில இடங்களில் நன்செய் நிலங்களிலும் விளைகிறது. அமெரிக்கா தேசத்து ஜனங்களில் 100-க்கு 60 பேர்கள் மக்காச்சோளத்தையே உணவாக உபயோகிக்கிறார்கள். அதுபோலவே ஐரோப்பாவில் போலெண்டா வென்று சொல்லும் மக்காச்சோளத்தின் குருநொய்யும் "மைசேனா" வென்று சொல்லும் மாவும் வியாதியஸ்தருக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற ஆகாரமாக விசேஷமாய் உபயோகப்பட்டு வருகிறது. இதைப் போலவே நமது தேசத்திலும் பஞ்சாப், அயோத்தியா, வடமேற்கு மாகாணங்களில் மக்காச்சோளத்தை உடைத்து அரிசிபோல் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். அத்தேசத்தவர்களுக்கு இதுதான் பிரதானமான போஜன பதார்த்தம். பஞ்சாப் தேசத்திலும் வடமாகாணங்களிலும் இதை மாவாகத் திரித்து ரொட்டி செய்து சாப்பிடுகிறார்கள். வங்காளத்திலும் சூட்டியா நாகப்பூர் என்னும் மாகாணத்திலும் மக்காச்சோளத்தை அரைத்துக் கூழ் காச்சிக் குடிக்கிறார்கள். சென்னை இராஜதானியிலும், இன்னும் சில இடங்களிலும் பச்சைக் கதிர்களைக் கொய்து வேவித்தும் வறுத்தும் சாப்பிடுகிறார்கள். திருச்சினாப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்த புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருக்கும் குடியானவர்கள் மக்காச்சோளத்தை இறவைப் பயிர்செய்து அதை உடைத்து மாச்சாதம் செய்து சாப்பிடுவதுடன் அதைத் தங்களுடைய கால்நடைகளுக்கும் சில வேளைகளில் கஞ்சியாக உபயோகிக்கிறார்கள். இந்தத் தானியத்தின் அருமை பெருமை இவர்களுக்கு அனுபோகத்தில் நன்றாய் புலப்பட்டிருப்பதினால் அவர்கள் கூலிவேலை செய்யும்போது அவர்களுக்குத் தானியத்தைக் கூலியாய்க் கொடுக்கும்போது நெல், சோளம், ராகி முதலாகிய தானியங்களைவிட இதைச் சிலாக்கியமாய்ப் பேசி இதையே கொடுக்கும்படி கேட்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் விளையும் மக்காச்சோளம் அநேகமாய் புதுக்கோட்டைக்குத்தான் கொண்டு போய் விற்கப்படுகிறது. கங்காநதி தீரத்திலுள்ள, அநேக இடங்களிலும், தென்னிந்தியாவிலுள்ள பட்

டணங்களிலும், மக்காச்சோளக் கதிர்களைப் பச்சையாகக் கொய்து காய் கறி சமைப்பதுபோல் சமைக்கிறார்கள். மேலும் விளைந்த தானியத்தைப் பொரியாகப் பொரித்து மத்திபான போஜனமாக உபயோகிக்கிறார்கள். பொரியை மாவாக்கிச் சருக்கரை கலந்து "சத்துமா" வாகவும் சாப்பிடுகிறார்கள். ஆமெரிக்கா ஐரோப்பா தேசங்களில் குதிரை, மாடு, ஆடு, பன்றி முதலிய மிருகங்களையும் கோழி, வாத்து முதலிய பக்ஷிகளையும் கொழுக்கச்செய்வதற்கு மக்காச்சோளத்தின் பச்சைக்கதிர்களை விசேஷமாக உபயோகிக்கிறார்கள்.

மக்காச்சோளத்தின் தட்டையை மென்றால் இனிப்பாயிருக்கும். அதில் சருக்கரைச் சத்து இருக்கிறது. கரும்புக்கு அரைவாசி சத்து. இந்தத் தட்டையை ஆலையில் நசுக்கிப் பிழிந்து எடுத்த ரசத்தைக் காய்ச்சினால் சர்க்கரைப் பாகு உண்டாகிறது. ஆனால் அதை அதிகமாகக் காய்ச்சினால் கெட்டுப்போகிறதே ஒழியக் கட்டிச் சருக்கரையாகவில்லை. சர்க்கரைக்குப் பதிலாக மக்காச்சோளப்பாகை உபயோகிக்கலாம். இந்தச் சருக்கரை சத்து இருப்பதால் அந்தத் தட்டைகளைக் கதிர் கொய்தவுடன் வெட்டிப் பால் பசுக்களுக்கும் வேலை செய்யும் கால்நடைகளுக்கும் போட்டால் அவைகளுக்கு நல்ல தீவனமாகின்றன. தட்டைகளை வெட்டிக் கத்திசொண்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டி மற்றத் தீவனங்களுடன் கலந்து போட்டால் கால்நடைகள் நன்றாய்த் தின்னும். தட்டைகள் அதிகமாய்க் காய்ந்துபோனால் கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகப்படமாட்டாது.

மகமதிய வைத்தியர்கள் மக்காச்சோளமானது அதிக சத்துள்ள போஜனம் என்றும், க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட ஜனங்களுக்கு அது தகுந்த ஆகாரமென்றும், அதிசாரபேதியால் அவஸ்தைப்படுகிறவர்கள் அதைச் சாப்பிட்டுவந்தால் வியாதிகுணமாய் விடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். கிரேக்க தேசத்திலும் அமெரிக்காவிலும் மக்காச்சோளக் கதிரில் தொங்கும் பட்டுநூல் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயம் வைத்துக்கொடுத்தால் நீரடைப்பு, நீர்சுறுக்கு முதலான வியாதிகள் குணமாவதாகச் சொல்லுகிறார்கள். மக்காச்சோளக் கதிரில் உள்ள தானியத்தை உதிர்த்த பின்னுள்ளகத்தையை எரித்த சாம்பலுடன் சாதாரண உப்புக் கலந்து கொடுத்தால் நெஞ்சுச்சளியும், அதனாலுண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகிறதாம். ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி தேசங்களில் மக்காச்சோளக் கதிர்களின் புறவிதழ்களைக்கொண்டு அதிகப் பலமுள்ளதும் நேர்த்தியானதுமான ஒருவகைக் காகிதம் செய்யப்படுகிறது. அந்தக் காகிதத்தில் பாங்கிநோட்டுகள்கூட அச்சடிக்கிறார்கள். கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகப்படுத்த உதவாத காய்ந்த தட்டையை வீட்டுக்கூரைகள் வேயவும், அடுப்பெரிக்கவும் உபயோகிக்கிறார்கள். நம்மிராஜதானியில் அநேக இடங்களில் குடிகள் மக்காச்சோளத்தைத் தோட்டப்பயிர்களுக்கு ஊடே ஊடே ஒவ்வொரு விதையாகப் போட்டுவைப்பது வழக்கம். ஒரு புலத்தில் மக்காச்சோளம் மட்டும் சாகுபடி செய்வது வெகு சொற்ப இடங்களில்தான். வட ஆற்காடு ஜில்லாவில் வேலூரிலும், பால்மனேரிலும், கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களிலும் இந்தத் தானியம் அதிகமாகப் பயிராகின்றது. மொத்தத்தில் சென்னை இராஜதானியில் சுமார் 1,22,686-ஏகருக்குமேல் மக்காச்சோளம் சாகுபடியாக வில்லையென்று சொல்லலாம். கிருஷ்ணா, வடஆற்காடு ஜில்லாக்களில் மட்டும் இதைப் புன்செய்ப் பயிராகச் சாகுபடி செய்கிறார்கள். மற்ற ஜில்லாக்களில் இறவை நிலங்களிலேயே கலப்புப் பயிராகச் சாகுபடி செய்கிறதாகத் தெரியவருகிறது.

பஞ்சாப்பில் 12,29,114-ஏக்கர் நிலங்களில் மக்காச்சோளம் பயிராகின்றது. அதில் மூன்றில் ஒருபாகம் மட்டும் நீர்பாய்ச்சப்படுகிறது. மற்றது புன்செய் நிலங்களில் பயிராகிறது. வடமேற்கு மகாணங்களில் 4,37,330-ஏக்கர்களிலும், பம்பாயில் 162,266-ஏகர்களிலும், மத்தியமாகாணங்களில் 1,43,291-ஏக்கர்களிலும், இந்தப் பயிர் சாகுபடியாகிறதாகக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி மற்ற இராஜதானிகளில் ஏராளமான நிலங்களில் இந்தப் பயிர் சாகுபடியாகி வந்தும், நம்முடைய இராஜதானியில் மட்டும் இது விருத்தியடையாமலிருப்பது விசனிக்கத்தக்க விஷயமாயிருக்கிறது. தென்னிந்தியாவில் சோளப்பயிர் எந்தெந்த நிலங்களில் பயிராகுமோ அந்தந்த நிலங்களிலெல்லாம் மக்காச்சோளமும் பயிராகும். மேலும் குறைந்த ஜலாதாரமுள்ள மானுவாரிக்குள நஞ்சைகளில் நெல் சாகுபடி செய்வதைவிட மக்காச்சோளத்தைப் பயிரிட்டால் அதிக ஜலம் பாய்

ச்சவேண்டிய அவசியமிராது. சால்வரத்துக் குளங்களிலும் சில வருஷங்களில் கோடை மழைகள் குறைந்து போவதால் கார்நெல் பயிரிடப்போதுமான ஜலாதாரமில்லாமலும் ஒருவேளை பயிரிட்டாலும் தீவு கறிவும் அரை குறை மணிபிடியும் நேரிடக்கூடியதாகவுமிருப்பதால் அந்த நிலங்களிலும் கார்நெல் பயிருக்குப்பதிலாய் மக்காச்சோளம் சாகுபடி செய்வது மெத்த நலம். இதனால் மனிதர்களும் கால்நடைகளும் பட்டினியின்றிக் காலங்கழிக்கக் கூடியவர்களாகார்கள்.—கிருஷிகனில், ஜே. செல்வரங்கராஜு.

---

## TECHNICAL EDUCATION.

## வித்யா விஷயம்.

### டெக்னிகல் எடுகேஷன் அல்லது தொழிற்படிப்பு.

டெக்னிகல் எடுகேஷன், அல்லது தொழிற் படிப்பு, என்னவிதமாய் அமைத்தால் வேலை வாங்கும் முதலாளிகளுக்குத் தொழில்களை நடத்துவதில் ஸௌகரியமாய் வேலைக்காரர்கள் கிடைப்பார்களென்று விசாரணை செய்து ஆலோசனைகள் சொல்ல சில காலத்துக்குமுன்னால் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்தார்கள். அந்தக் கமிட்டியில் கர்னல் அட்கின்ஸனும், டி. எஸ். டாஸனும் மெம்பர்களாயிருந்து சிபார்சுகள் செய்திருப்பதைக் கவர்ன்மெண்டார் இப்போது பிரசுரம் செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகளிற் சில பின்வருமாறு. ஸிவில் எஞ்ஜினீரிங் தொழில் செய்ய விரும்புவோருக்கு இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் எஞ்ஜினீரிங் காலேஜ்கள் போதும். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டில் இவர்கள் ஒரு வருஷம் அப்ரெண்டிஸ்களாயிருந்து வேலை கற்றுக்கொள்ளும்படி கவர்ன்மெண்ட் செய்ய வேண்டும். மெக்கானிகல் எஞ்ஜினீரிங்கிலும் எலெக்டிரிகல் எஞ்ஜினீரிங்கிலும் உயர்ந்த சாஸ்திரப் படிப்புக்கு இப்போது அவசியம் தோன்றவில்லையாயினும், இந்தத் தொழில்களில் மிதமானபயிற்சிக்கு அவசியம் தோன்றியிருக்கிறது. இவர்கள் ஒரு தகுந்த வித்தியாசாலையில் பயிற்சிபெற்று அப்ரெண்டிஸாயிருந்து அனுபோகத்தில் வேலை கற்றுக்கொள்ளப் பிரியமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இவர்கள் ஜீவனத்துக்குப் போதும்படியான கூலி பெற்று, கையினால் வேலைசெய்து தொழிற்சாலைகளிலுள்ள மணிக்கணக்குப்படியும் ஒழுங்குகளின்படியும் வேலை கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்கிறவர்களுக்கு அவர்கள் ஜாதி மத அந்தஸ்து கல்வி எதுவானாலும் உத்தியோகம் கிடைக்க விசாலமாய் இடமிருக்கின்றது. பிறகு அவர்களுடைய ஸொந்த குணத்தையும் யோக்கியதையையும் பற்றி உயருவார்கள். ஆகையால் மெக்கானிகல் (இயந்திரங்கள் ஸம்பந்தமான) எலெக்டிரிகல் (மின்ஸார ஸம்பந்தமான) தொழில் வித்தியாசாலைகள் பெரும் மாதிரியாய் ஸ்தாபித்தல் அவசியம். தொழில்கள் விசேஷமாய் ஸ்தாபிக்கப்பட்டிராத இடங்களில் கீழ்த்தரமான இன்ஸ்டிட்யூட்டுகளில் ஸ்தாபிக்கவேண்டும். இந்த இன்ஸ்டிட்யூட்டுகளில் சொல்லிக்கொடுக்கும் வாத்தியார்களாய் நியமிக்கப்படுகிறவர்கள் சாஸ்திரத்திலும் அனுபோகத்திலும் பயிற்சி பெற்றவர்களாயிருக்க வேண்டும்.

சுரங்கத் தொழிலில், சுரங்கங்களில் இறங்கி பூமியின்கீழ், பகலெல்லாம் வேலை செய்வோர்களுக்கு முன்னதாகவே படிப்பும் அனுபோகமும் அவசியம். இவர்கள் பகலெல்லாம் வேலை செய்கிறவர்களாகையால் மாலைப் பொழுதில் வகுப்புகள் வைத்துச் சொல்லிக்கொடுக்கவேண்டும். தற்காலம் குறிப்பிட்ட ஆறு இடங்களில் மாலை ப்ரஸங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். கல்கத்தாவுக்கு ஸமீத்திபவுள்ள அஸன்ஸாலில் ஒரு சுரங்க ஸ்கூல் ஸ்தாபிக்க வேண்டும். மைனிங் எஞ்ஜினீரிங்கில் 3 வருஷமும் ஸர்வேயர்களாகவும் டிராப்ட்ஸ்மென்னாகவும் ஒரு வருஷமும் கற்கவேண்டும். நெசவுத் தொழிலிலும் நூற்றல் நெய்தல் இரண்டிற்கும் தனித்தனியே பயிற்சி அவசியம். தகுந்த இடங்களில் பிற்பகல் ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளில் நெசவு மேஸ்திரிகள் பயிற்சி பெறவேண்டும். இம்மாதிரி இந்த கமிட்டி பல சிபார்சுகள் செய்து தொழிற்சாலைகள் நடத்தும் முதலாளிகளுக்கும் தொழில் செய்யும் வேலைக்காரர்களுக்கும் நெருங்கின ஸம்பந்தம் இருக்கும்படியாக ஒரு மேல்விசாரணைசெய்யும் கண்ட்ரோலிங் ஆபிஸரையும், உத்தியோகம் ஸம்பாதித்துக் கொடுப்பதில் உதவும்படியான எம்பிளாய்மெண்ட் பியூரோ என்ற ஸங்கத்தையும் ஸ்தாபிக்கவேண்டும். இப்படிச் செய்திருக்கும் சிபார்சுகளை இனிக் கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்து அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயலுவார்கள்.—சுதேச மித்திரன்.

# AGRICULTURE.
## விவஸாயம்.

**Sheep Breeding Experiments.**

ஆடு வளர்ப்பதில் பரீட்சைகள்.—ஐக்கிய மாகாணங்களில் ஆடு வளர்ப்பதைப்பற்றி சில பரீட்சைகள் செய்யப்போகிறார்களாம். அதன் தாத்பர்யம் என்னவென்றால், இப்பொழுது அகப்படும் ஆட்டு ரோமம் ஜாஸ்தியாயும் மேல்தரமாயும் அகப்படுமா வென்று அறிவதே.

**Biphosphate.**

பைபாஸ்ப்பேட்.—நார்வே தேசத்தில் பைபாஸ்ப்பேட் என்னும் ஒரு புதிய செயற்கை உரம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது ரொம்ப மலிவாய் விற்பனைக்கு வருமாம்.

**Cambodia Cotton seed.**

கம்பேரடியாப் பருத்தி விதை.—திருநெல்வேலி ஜில்லா கோவிற்பட்டி ஸர்க்கார் விவஸாயப் பண்ணை ஆபீஸில் அமெரிக்கன் பருத்தி விதை யென்று முக்கமாய்ச் சொல்லப்படுகிற 'கம்பொடியா'ப் பருத்தி விதை கிடைக்கும். அதன் விலை விவரம் முதலியவற்றை திருச்சினாப்பள்ளியில் தென்டிவிஷன் டிப்டி டைரெக்டருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

**Entomologist.**

ஒரு புழுச்சோதனை நிபுணர்.—இந்திய விவஸாய இலாகாவுக்கு விவஸாயப் புழுச்சோதனை சாஸ்திர நிபுணர் ஒருவரை இங்கிலாந்தில் தெரிந்தெடுத்தனுப்பும்படி இந்தியா கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டிருக்கிறார்களென்றும், இந்தியா மந்திரியால் தெரிந்தெடுத்தனுப்பப்படும் நிபுணர் ப்யூஸா விவஸாயச் சோதனைப் பண்ணைக்கு வந்து சேர்வாரென்றும் தெரியவருகிறது.

**Revenue Money Order System.**

ரெவினியூ மணியார்டர் ஏற்பாடு.—சென்னை கவர்ன்மெண்டார் ஸ்தலத்தி லில்லாத நிலஸ்வான்தார்கள் தங்கள் நிலத்துக்குச் செலுத்த வேண்டிய கிஸ்தியை மணியார்டர் செய்து ட்ரெஷரிக்கு அனுப்பி விடலாமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டினால் அதிக ஸௌகரியத்தைக் காணவில்லை யென்று சில கலெக்டர்களும், அதனால் ஒரு பிரதிகூலமும் விளைகிறதில்லையென்று வேறு சில கலெக்டர்களும் ரிபோர்ட்செய்ய, ரெவினியூ போர்டார் அந்த ஏற்பாட்டை இன்னும் 3 வருஷம் அனுஷ்டித்துப் பார்க்கலாமென்று சிபார்சு செய்தார்கள். அந்த சிப்பார்சை கவர்ன் மெண்டார் ஸரியென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

**Sprouting of Onions.**

வெங்காயம் முளை விடுதல்.—நல்ல வெங்காயத்தை விளைவிப்பது அதிக கடினமாக வில்லா விட்டாலும் அதன் விதைகளை முளைக்கவைக்காமலிருப்பது மிகவும் அவசியம். ஏனெனில்,முளையுள்ள வெங்காய விதைகள் நல்ல பலனைத்தரா. வெங்காய விதைகள் முளைக்காமலிருப்பதற்கு ப்ரான்ஸ் தேசத்தில் சில பரீக்ஷைகள் செய்ததில் ஓர் வித வகையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஸல்பேட் ஆவ் பொட்டாஷ் என்ற உரத்தை வெங்காயம் போடக்கூடிய நிலங்களில் போட்டால், அந்நிலங்களிலிருந்து உண்டாகும் வெங்காயம் நல்ல விதைகளைத் தரக்கூடியதாகவிருக்கும். ஒரு ஏகரா நிலத்திற்கு 112 பவுண்டு ஸல்பேட் ஆவ் பொட்டாஷ் போடவேண்டும். வெங்காய ஸாகுபடி செய்பவர்கள் இதை கவனிக்கவேண்டும்.

**A Rice Museum.**

அரிசிக்காட்சி சாலை.—அரிசி பலவகைப்பட்டதென்னும் ரகஸ்யம் இந்நாட்டில் யாருமறிந்ததே. தென்னிந்தியாவில் விளையும் நெல்லு தினுஸுகளை மட்டுமே யெடுத்துக்கொண்டாலும், எத்தனையோ டஜன் காணலாம். உலகத்திலுள்ள தேசங்களிளெல்லாம் 'நெல்லுயர்ந்த' நாடு இந்தியாவாகும். அடுத்தபடி பர்மா; என்றாலும் இந்த தேசங்களில் நெல்லுக் கண்காட்சி கூடுவதேயில்லை யென்பது அற்புதம். ஏனெனில் சீயம் தேசத்தில் இந்தியாவைவிட நிலவளம் குன்றியிருந்தாலும், அவ்விடத்திய குடித்தனக்காரருக்கு இம்மாதிரிக் கண்காட்சி விசேஷத்தினால், அவரவர் யுக்தியை யனுஸரித்துப் பரீக்ஷைசெய்து, அதன் பலனாக, இப்பொழுது வெகுதூரம் சிறந்த சில தினுஸுகள் அத்தேசத்தில் தான் விளைகின்றனவாம்.

ஆதலால் இத்தேசத்தில் விவஸாய டிபார்ட்மென்டார் இவ்விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தி, சென்னை ராஜதானியில் 4-5 இடங்களில், நெல்

தினுஸுகளைக் காட்சிக்காகச் சேர்த்து, அவற்றின் தார தம்மியங்களை விளக்கி, துண்டுப் பத்திரிகைகளும் பிரசுரித்தால், சீக்கிரம் ஆதாயம் கூடுமென்பதில் ஆக்ஷேபமில்லை என்று வித்யா விகாரிணிப் பத்திரிகை எழுதுகிறது.

**Extraordinary Growth of Sugar-cane.**

**ஜாஸ்தி உயரமாய் வளர்ந்த கரும்பு.**—கோதாவரி ஜில்லாவைச் சேர்ந்த ஸாமல் கோட்டை விவஸாயப்பண்ணைக்கு ஸுமார் 8 மைல் தூரத்திலுள்ள காத்திர்வல்பல்லி கிராமத்தில் ஒரு குடியானவனுடைய கரும்புப்பயிர் ஸராஸரியில் 20 அடி உயரம் வளர்ந்திருந்ததாகவும், அதில் நன்ருய் வளர்ந்திருந்த கரும்பை வெட்டி அளந்து பார்த்ததில் ஜாதி அடிக்கு 29 அடி உயரமிருந்ததாகவும், அதில் தோகை 6 அடி உயரம் போனல் கரும்புக்கணுக்கள் 23 அடி உயரமிருந்ததாகவும், தெரிகிறது. இந்தக்கரும்பு வளர்ந்த நிலம் நல்ல இருமண் சேர்ந்த வடிகாலுள்ள மணல் பாங்கான நிலமென்றும், அந்தப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1660 ராத்தல் கொட்டை முத்துப் பிண்ணுக்கு எரு, பயிர் $3\frac{1}{2}$ மாதமாகும்போது போட்டு மண் அணைக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

**Assafœtida and the Drumstick.**

**பெருங்காயமும் முருங்கையும்.**—வி எஸ். மகாதேவன் என்பவர் பின் வருமாறு எழுதுகிருர்.—மூன்று மாதத்திற்கு முன்பு நான் கோடை லீவுக்கு ஊருக்குப்போயிருந்தேன். அங்கே எங்கள் வீட்டுச் சிறிய கொல்லையில் ஒரு முருங்கை மரம் இருக்கிறது. இம்மரம் ஸுமார் பதினைந்தடி உயரம் இருக்கும். இது நல்ல ஜாதி மரமில்லையாதலால் வருஷத்திற்கு பத்துமுதல் பதினைந்து காய்கள் வரையில்தான் காய்க்கும். அவ்வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கிற ஒரு கிழவி அம்மரத்தை சில வாரங்களுக்குள் காய்க்கச் செய்கிறதாக என்னிடம் சொல்லி ஒரு எலுமிச்சங் காய்ப் பிரமாணம் பெருங்காயத்தைக்கொண்டுவந்து, அம்முருங்கை மரத்தைச் சேர்ந்தாற்போல் பூமியில் ஆறங்குலம் நீளமான ஒரு குழியைப்பறித்து, அதில் மேற்சொன்ன பெருங்காய உண்டையை "காய்த்தால் காய் அறுக்கிறேன், இல்லாவிட்டால் வேர் அறுக்கிறேன்" என்று சொல்லிப் புதைத்தாள். இது நடந்த ஒரு மாதத்திற்கெல்லாம், மரம் நிறைய பூக்கள் பூத்து நாளடைவில் அப்பூக்கள் பிஞ்சுகளாக மாறி, பெருங்காயம் புதைத்த இரண்டு மாதத்திற்கெல்லாம் ஸுமார் 150 காய்கள் மரத்தில் தொங்குவதைப்பார்த்தேன்.

பெருங்காயத்தில் முருங்க மரத்திற்கு உபயோகமான உணவு இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். இதை எவரேனுங் கண்டுபிடித்து தயவுசெய்து தெரிவிப்பீர்களா? எத்தனை மாமரங்கள், தென்னை மரங்கள், இன்னும் அநேக ஜாதி கனி மரங்கள் காய்த்துப் பலன் தராமல் நம்முடைய தேசத்தில் இருக்கின்றன. பெருங்காயம் மேற்சொன்ன முருங்கை மரத்தைக் காய்க்கச் செய்தாற்போல், காய்க்காத மற்றெல்லா கனி மரங்களையும் காய்க்கச் செய்யுமா, செய்யாதா, என்பதை எவரேனும் கண்டு பிடித்துச் சொன்னல் நலம்.

**The Chittore District Conference.**

**சித்தூர் ஜில்லா 11-வது கான்பரன்ஸ்.**—இது நவம்பர்மீ 23 தேதிகளில் கூடிற்று. அப்பொழுது அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) விவஸாயத்துக்கு உபயோகப்படும் கால்நடைகள் ரிஸெர்வ் காடுகளில் இனமாக மேய அனுமதி கொடுக்கப்பட வேண்டுமென்றும், வெள்ளாடுகள் மேய்வதற்காக ரிஸெர்வ் காடுகள் இப்பொழுதைக் காட்டிலும் பெரிதாயிருக்க வேண்டுமென்றும், அவற்றில் மேயும் வெள்ளாடுகளுக்கு வாங்கும் கட்டணத்தை 4 அணுவாகக் குறைக்கவேண்டு மென்றும், ஸாகுபடிக்கு வேண்டிய மரத்தையும் வேலிக்கு வேண்டிய முள்ளையும், உரத்துக்கு வேண்டிய தழையையும், கிருஷிகர்கள் இனமாகப் பெறவேண்டுமென்றும், ரிஸெர்வ் காடுகளுக்கு அடுத்துள்ள கிராமங்களில் அக்காடுகளின் ஸம்ரக்ஷணைக்காக கிராம பஞ்சாயத்தார்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

(2) விவஸாயக் கல்வி அவசியமாகையால், கிராமங்களிலுள்ள மூலாதரப் படிப்புப் பள்ளிக்கூடங்களில் விவஸாயக்கல்வி கட்டாயமாய்ச் செய்யப்படவேண்டு மென்றும், ஜில்லாவில் விவஸாயச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டியது அவசியமென்றும், விவஸாய மாதிரிப் பண்ணைகளை உண்டுபண்ணவேண்டியது அவசியமென்றும், விவஸாயக் கால் நடைகளின் பொருட்டு லைப் இன்ஷியூரென்ஸ் என்ற ஏற்பாடு அவசியமென்றும், இந்தக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

(3) நிலவரி நிரந்தர திட்டமாய் ஏற்படுத்த வேண்டியது அவசியமென்று இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது. எஸ்று இப்படி தீர்மானங்கள் செய்யப்பட்டன.

# COMMERCE.

## வியாபாரம்.

### Empire Trade and Industry.

ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில், வியாபாரமும் கைத்தொழிலும்.—இப்பொழுது ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் வியாபாரம் கைத்தொழில் இவைகளை விருத்திசெய்யவும், லகுவாய் நடத்தவும், "ராயல் கலோனியல் இன்ஸ்டிட்யூட்" என்னும் சங்கத்தார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட பல விடங்களில் மேற்சொன்ன "கமிட்டியின்" வேலை ராஜாங்கத்தாரால் மெச்சப்பட்டிருக்கிறதாம். இந்த கமிட்டியின் முக்கிய நோக்கம் என்னவென்றால்:— கம்பெனிகளைப்பற்றி சட்டத்தை ஒன்றுபோல் எல்லா தேசங்களிலும் அமைத்தல், இங்கிலீஷ் வியாபார ப்ரதிநிதிகள் வேலை செய்யவேண்டிய விதத்தை விருத்தி செய்தல், இங்கிலாந்துக்கும் இந்தியா, வேறு குடியேற்றநாடுகள், ஆகிய இவைகளுக்கும் நடக்கும் வியாபாரத்தை விருத்திசெய்தல், முதலியவையாம். இதுவரையில் மேற்சொன்ன கமிட்டியால் கொஞ்சம் பலனிருப்பதாகத் தெரிகிறது.

### Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஆகஸ்டு, ஸப்டம்பர் மாஸங்களில் அடியில் கண்ட விபரப்படி கம்பெனிகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டன.

| | ஆகஸ்டு. | முதல் ரூ. |
|---|---|---|
| 4 | பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும் | ... 5,25,000 |
| 6 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 1,10,000 |
| 1 | ரெயில்வே ட்ராம்கம்பெனி | ... 1,00,000 |
| 8 | வியாபாரக்கம்பெனிகள் (மேற்சொன்னவைகளைத்தவிர) | ...58,40,000 |
| 1 | மில் கம்பெனி | ... 5,00,000 |
| 5 | தேயிலை முதலியதோட்ட வேலை சம்பெனிகள் | ... 8,70,000 |
| 1 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | ... 1,75,000 |
| 1 | கம்பெனி (மேற் சொன்னவைகளைத் தவிர) | ... 2,25,000 |
| 27 | ஆக மொத்தம் ரூ. | 83,45,000 |

| | ஸப்டம்பர். | முதல் ரூ. |
|---|---|---|
| 7 | பாங்கிகளும் லேவாதேவிகம்பெனிகளும் | 2,36,20,000 |
| 7 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி | ... 2,80,000 |
| 1 | கப்பல் நடத்தும் கம்பெனி | ...10,00,000 |
| 5 | வியாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்ன வைகளைத்தவிர) | .. 11,90,000 |
| 1 | பருத்தி மில் கம்பெனி | ... 5,50,000 |
| 1 | பருத்தி, சணல், இவைகளை மூட்டைகளாக்கும் கம்பெனி | 1,00,000 |
| 1 | மா அரைக்கும் மில் கம்பெனி | ... 5,00,000 |
| 2 | மரம் அறுக்கும் கம்பெனி | ... 7,00,000 |
| 2 | தேயிலை முதலிய தோட்ட வேலை கம்பெனி | ... 2,50,000 |
| 1 | நிலக்கரி சுரங்கக் கம்பெனி | ... 50,000 |
| 1 | சுரங்கக்கம்பெனி (மேற்சொன்ன வைகளைத் தவிர) | ... 50,000 |
| 1 | கம்பெனி (மேற்சொன்னவைகளைத் தவிர) | ... 2,00,000 |
| 30 | ஆக மொத்தம் ரூ. | 2,84,90,000 |

### Audit of Customs Accounts.

கஸ்டம் ஹவுஸ் கணக்குகளின் தணிக்கை— இந்த தேசத்தில் கஸ்டம் ஹவுஸ் (ரேவ் ஆபீஸ்) கணக்குகளைத் தணிக்கை செய்ய ஒரு ஆடிட்டர் நியமிக்கப்படுவதை இந்தியா மந்திரி ஸாங்க்ஷன் செய்திருக்கிறார். அந்த உத்யோகஸ்தர் கடற்சுங்கம் வாங்கப்படும் பட்டணங்களாகிய சென்னை, பம்பாய், கராச்சி, கல்கட்டா, ரங்கூன், சிட்டகாங்க், இப்பட்டணங்களுக்குச் சென்று அந்தந்த ஊர்களிலுள்ள கஸ்டம் ஹவுஸ்களின் (கடற்சுங்க வரி ஆபீஸ்களின்) கணக்குகளைத் தணிக்கை செய்வார். அந்த உத்தியோகத்துக்கு முன்னே கல்கட்டா கஸ்டம் ஹவுஸ் ஆடிட்டராயிருந்த மிஸ்டர் ஸாண்ட்போர்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஏற்கனவே பம்பாய் கஸ்டம் ஹவுஸில் கணக்குகள் வைக்கும் முறைகளில் திருத்தங்கள் செய்திருக்கிறாரெனப்படுகிறது. இப்போது அவர் கராச்சி கஸ்டம் ஹவுஸ் அக்கவுண்ட்ஸ் இலாகாவை சீர்திருத்தி வருகிறார்.

# INDUSTRY.

## கைத்தொழில்.

**Gold in India.**

இந்தியாவில் பொன்.—இந்தியாவில் உற்பத்தியாகும் பொன்னில் நூற்றுக்கு 96 பங்கு கோலாரில் உற்பத்தியாகிறதாம்.

**A New Mill in Bombay.**

பம்பாயில் ஒரு புதிய நெசவுசாலை.—பம்பாயில் இன்னொரு தொழிற்சாலை ஸ்தாபிக்கப்படுவதாய் விளம்பரம் ப்ரவித்தமாயிருக்கிறது. இந்தத் தொழிற்சாலை நூல் நூற்கவும் நெய்யவும் ஸ்தாபிக்கப்படுகிறது. அதன் பெயர் 'பெர்ல்மில்ஸ்' லிமிட்டெட். மூலதனம் 20-லட்சம் ரூபாய். ஆரம்பத்திலேயே முப்பதாயிரம் ராட்டணங்கள் வேலை செய்யும். மிகவும் நேர்த்தியான புதிய யந்திரங்களைக்கொண்டு வேலை நடத்தப்படும். கம்பெனியின் டிரெக்டர்களும் ஏஜண்டுகளும் மூலதனத்தில் பாதி பெறுமானத்துக்குள்ள பங்குகளை வாங்கிவிட்டார்கள். மெஸர்ஸ் கரிம்பாய் இப்ராகிம் கம்பெனியார் தான் ஏஜண்டுகள். ஸர் ஸாஸூன்டேவிட், ஸர்ஜேம் ஸட்ஜி ஜீஜீபாய், ஆனரெபில் பஸல்பாய் கரிம்பாய், ஸர் கரிம்பாய் இப்ராகிம் முதலிய அநேக நெசவுசாலைத் தலைவர்கள் இந்தத் தொழிற்சாலையின் டிரெக்டர்கள்.

**Dried Mangoes.**

மாம்பழவற்றல்.—மாங்காய் பழுத்து நிறம் மாறுவதற்குமுன் பறித்து அதன் மேல்தோலை உரித்துவிடவேண்டும். அந்த நிறத்தில் அது செங்காயாக இருக்குமாதலால், உள்சதை கெட்டியாகவும், சற்று மங்கின மஞ்சள் நிறமாகவும் இருக்கும். பழங்களைப் பெரிய கத்தியால், துண்டு துண்டாக நறுக்கவேண்டும். துண்டுகள் ஸுமார் 2-அங்குல நீளமும், 1-அங்குல அகலமும், $\frac{1}{3}$-அங்குலம் கனமும் உள்ளவையாக இருக்கவேண்டும். இவைகளை வெயிலில் போட்டு காயவைத்தால், 3, 4, நாளைக்குள் நன்ருய்க் காய்ந்துபோகும். காயும்போது ஒருதரம் துண்டுகளைத் திருப்பிவிடவேண்டும். நன்ருய்க் காய்ந்த துண்டுகள் வெளுத்த மஞ்சள் நிறமாகவாவது, அல்லது பழுப்பு நிறமாகவாவது இருக்கும். இவைகளை ஸரியான அளவில் நறுக்கினல் காய்ந்த அப்பில் பழத்துக்கும் இவற்றிற்கும் வித்யாஸம் தெரிவதில்லையாம். நன்ருய்க் காய்ந்த துண்டுகளை கண்ணடி ஜாடிகளிலும் வாயகன்ற டப்பிகளிலும் (பாட்டில்) போட்டு காற்றுப் புகாதபடி தேன் மெழுகால் அடைத்துவிடவேண்டும். இப்படிச் செய்வதால் வெகுகாலம் வற்றல் கெடாமல் இருக்கிறது.

**A Chemical and Pharmaceutical Company in Mysore.**

மைஸூரில் ரஸாயன வஸ்துக்கள் மருந்துகள் செய்யும் கம்பெனி.—மைஸூரில் ரஸாயன வஸ்துக்களும், மருந்துகளும் செய்ய ஒரு கம்பெனி ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. ரஸாயனப் பொருள்கள், மருந்துகள், எண்ணெய்கள், ஸோப்புகள், செயற்கை உரங்கள், வாஸனை திரவியங்கள் முதலிய இன்னும் பலவும் செய்வது அந்தக் கம்பெனியின் நோக்கம்.

பம்பாய்க்குத் தெற்கே இந்தக் கைத்தொழில் நடத்தும் கம்பெனிகள் இல்லை. சென்னைத் துறைமுகத்தில் 1908-1909 ம் வருஷத்தில் இறக்குமதியான மருந்துகளும், ரஸாயனப்பொருள்களும் 12,38,548 ரூபாயாகின்றன. இந்த சரக்குகளின் உபயோகம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அன்றியும், மைஸூரில் 1912-13-ம் வருஷத்துக்கு மருந்தும் ரஸாயனப்பொருள்களும்வாங்க பட்ஜட்டில் 1,10,000 ரூபாய் ஏற்பட்டிருக்கிறது. அவற்றில் ரூ. 65,000 பெறுமான ரஸாயனப்பொருள்கள், மருந்துகள் இவைகளை இந்தக் கம்பெனியே ஸ்தாபித்த ஆறுமாஸத்திற்குள் செய்து கொடுக்கமுடியும். மைஸூர் கவர்ன்மெண்டார் இந்தக் கம்பெனிக்கு அநேக ஸாதகங்கள் செய்வார்களாம்.

கம்பெனிக்கு வேண்டிய விறகை வரியில்லாமல் வெட்டிக்கொள்ள அனுமதி கொடுப்பார்கள். கவர்ன்மெண்டார் தங்களுடைய உபயோகத்துக்கு வேண்டிய மருந்துகள், ரஸாயனப்பொருள்கள், இவைகளை விலைக்கு வாங்கும்போது இந்தக் கம்பெனியில் வாங்குவார்கள். கம்பெனிக்கு வேண்டிய நிலங்களை ஸௌகர்யமான ஏற்பாட்டில் கவர்ன்மெண்டார் கொடுப்பார்கள். தொழிற்சாலையிலிருந்து ரெயில்வேக்கு நல்ல ரஸ்தா போட்டுக் கொடுப்பார்கள். கம்பெனியார் தமது கைத்தொழிலுக்கு வேண்டிய ஆல்கஹாலை (சாராயத்தை) வரியில்லாமல் உபயோகிக்க அனுமதி கொடுப்பார்கள். கம்பெனியில் ஒரு ரஸாயன சாஸ்த்ரி வேலைக்கு அமர்த்தப்படுவார். அவருக்குக் கொடுக்கும் சம்பளத்தில் பாதி கவர்ன்மெண்டார் கொடுத்து உதவுவார்கள். இந்தக் கம்பெனியின் மூலதனம் 5-லக்ஷம் ரூபாய். பங்கு ஒன்றுக்கு 100-ரூபாயாகிறது.

# ECONOMICS.
## பொருளாதாரம்.

### Some Census Figures.

சில ஸென்ஸஸ் கணக்குகள்.—இந்தியாவில் லக்ஷத்தில் 26 பேர் பித்தர்கள், 64 பேர் செவிடர்கள், 142 பேர் குருடர்கள், 35 பேர் குஷ்டரோகிகள். பைத்தியமாயும், செவிடாயும் இருக்கும் ஸ்திரீகள், புருஷர்களில் மூன்றில் இரண்டு பங்கு இருக்கிறார்கள். குஷ்டரோகியான ஸ்திரீகள் புருஷர்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்குதான் இருக்கிறார்கள்.

### Material Progress and Mental Improvement.

செல்வ அபிவிருத்தியும், மனோபிவிருத்தியும்.—ஜனங்களுக்கு செல்வ அபிவிருத்தியுண்டானால் அதனால் மனோபிவிருத்தி ஏற்படுமா? 'ஸோஷலிஸ்டு ரிவ்யூ' என்னும் பத்திரிகையில் ஒருவர் இந்தக் கேள்வியைக்கேட்டு அதற்குப் பதிலும் எழுதி யிருக்கிறார். "அதிக செல்வம் ஏற்பட்டு சில காலமான பிற்பாடு, செல்வம் அடைந்தவர்களுடைய மனோ சக்தியும், நன் நடத்தையும் சீக்கிரம் கெட்டுப்போய் விடுகின்றன. ஆனால் அநேக ஜனங்கள் அதிக செல்வ முடையவர்களாயிருந்தாலும், அவர்களுடைய மனோ சக்தி குறைவடைவதில்லை. எடிஸன் போன்ற சாஸ்திர நிபுணர்களும், பால்பர் போன்ற ராஜ தந்திரிகளும், கல்விமான்களும், நூலாசிரியர்களும், ஜன நன்மைக்காக உழைக்கிறார்கள். பொதுவாய் அதிக தனமுள்ளவர்களுக்கு ஞான அபிவிருத்தி ஏற்படுவதில்லை; யௌவனதசையிலுள்ளவர்கள் ஏராளமான ஸொத்துக் கிடைத்தவுடன் அந்த ஸொத்தை அபிவிருத்தி செய்யாமல் இருந்து விடுகிறார்கள். சும்மா உட்கார்ந்தபடியே அவர்களுக்குப் பணம் கிடைத்தபடியால் அவர்கள் கிடைத்ததை விருத்தி செய்யாமலும், புத்திக்கு யாதொரு வேலையையும் கொடுக்காமலும் இருந்து விடுகிறார்கள்.

### The Work of Indian Mints.

இந்தியாவில் தங்கசாலைகளின் வேலை.-வெள்ளி நாணயங்கள்.--பம்பாயிலும் கல்கத்தாவிலுமுள்ள தங்கசாலைகளின் கடந்த வருஷத்திய வேலைகளைப் பற்றி இந்தியா கெஜட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளி நாணயங்களில், 1845—1840-ம் வருஷத்திய ரூபாய்கள் மாத்திரம் உருக்கி புது நாணயங்கள் அச்சிட எடுத்துக்கொள்ளப்பட்டன. முந்தின வருஷத்தைக் காட்டிலும் கடந்த வருஷத்தில் $73\frac{1}{3}$ லக்ஷம் ரூபாய் வெள்ளி நாணயங்கள், அதிகமாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

நிக்கல் நாணயங்கள்.—கடந்த வருஷத்தில் 412,00,000 நிக்கல் ஒரு அணா நாணயங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. அதாவது 26,11,000. ரூபாய் மதிப்பாகும். இந்த நிக்கல் நாணயத்தால் கவர்ன்மெண்டாருக்குக் கிடைத்த லாபம் ரூபாய் 24,35,338 ரூபாய். அதற்கு முந்தின வருஷத்தைவிட 558,247 ரூபாய் அதிகலாபம் கிடைத்திருக்கின்றது.

செம்பு நாயணங்கள்.—925,625 ரூபாய்க்கு காலணா, அரைக்கால் அணா, பைசா ஆகிய செம்பு நாணயங்கள் கடந்த வருஷத்தில் இந்தியாவிலுள்ள தங்கசாலைகளில் அச்சிடப்பட்டன. இவற்றில் 39,920 ரூபாய்க்கு விலோனுக்கு "ஸெண்ட்" நாணயங்கள் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. புதுக்கோட்டை ஸமஸ்தானத்திற்காக அச்சிடப்பட்ட அம்மன் காசுகளின் தொகை ரூபா 1971.

### Indian Economic Situation.

இந்தியாவின் பொருளாதார நிலைமை.—ஸமீபத்தில் மிஸ்டர் கோபால மேனன் என்பவர் "இந்தியாவின் பொருளாதார நிலைமை" என்பதைப்பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். அப்பொழுது ஜஸ்டிஸ் ஸர் வி. சங்கரன் நாயர் அக்ராஸனம் வகித்து இரண்டொரு விஷயங்களைச் சொன்னார்.

"தேசத்தில் வியாபாரமும் தொழில்களும் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் விவஸாயம் முதன்மையாக அபிவிருத்தி அடையவேண்டும். விவஸாயம் செழிப்படைந்தால்தான், மற்ற தொழில்கள் மேன்மைக்கு வரக்கூடும். ஆகையால் ஒவ்வொரு வரும் தம்தம் கிராமத்தை எவ்விதம் சீருக்குக் கொண்டுவரலாமென்று ஆலோசித்து அதன்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஐக்கிய நாணயச் சங்கங்களை ஸ்தாபிக்க முயலவேண்டியது கடமை. தான்யங்களுக்குத் தக்க விலை விவஸாயிகளுக்குக் கிடைக்கிறதில்லை. தரகர்கள் ஏராளமாக லாபமடைகிறார்கள். ஐக்கியச்சங்கங்கள் ஏற்பட்டால் தானியங்களுக்கு நல்ல விலை கிடைக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் கல்வி அபிவிருத்தியைச் செய்யவேண்டியதும் அவசியம். ஒவ்வொருவரும் குற்றமற்ற வாழ்வினராக இருக்கவேண்டியதும் அவசியம். ஸுகாதார முறைகளை கிராமங்களில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டியதும் கடமை" என்று பேசினார்.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

**The Tanjore Co-operative Conference.**

தஞ்சையில் ஐக்கிய நாணய கான்பரேன்ஸ்.— டிஸம்பர்௴ 7உயன்று தஞ்சாவூரில் கூடப்போகிற ஐக்கிய நாணய கான்பரென்ஸுக்கு ஆனரெபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் ஸபாநாயகராக வீற்றிருப்பார்.

**Co-operation and School.**

கோவாபரேஷனும் ஸ்கூலும்.—காஞ்சிபுறத்தி லுள்ள சில வைசியர்கள் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் என்று ஒரு பண்டகசாலை சென்றமாதம் ஏற்படுத்தி னார்கள். அதில் வரும் வரும்படியை ஆதாரமாகக் கொண்டு தர்ம பாடசாலை ஒன்று ஏற்படுத்தினார்கள். பாடசாலை ஏற்படுத்த இதுவும் ஒரு ஸுலபமானவழி தான்.

**Progress in Co-operation.**

ஐக்கிய நாணயத்தின் முன்னேற்றம்.— இந்தியா வில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஆரம்பத்தில் அதா வது 1906-ம் வருஷத்தில் 843-ஆயிருந்தன. இப் போது 8,177-ஆக அதிகமாயிருக்கின்றன. மெம் பர்கள் 91,000-மாயிருந்து இப்போது 403,000ஆக அதிகமாயிருக்கிறார்கள். இத்துடன் மூலதனமும் தகுந்தாற்போல் அதிகமாயிருக்கிறதென்றால் இந்த ஸொஸைடிகள் வளப்பமாய் வளருகின்றன என்ப தற்கு என்ன ஸந்தேகம் ? இந்த சங்கங்களால் விவ ஸாயிகள் கடன் வாங்குவதில் பெறும் நன்மையைக் காட்ட ஸிம்லாவில் நடந்த கோவாபரேடிவ் கான்ப ரென்ஸ் ப்ரஸிடெண்டாகிய மிஸ்டர் மெக்ளாகன் ஒரு திருஷ்டாந்தம் சொன்னார். இந்த ஸொஸைடிகள் மெம்பர்களுக்குக் கோடி ரூபாய் கடன் கொடுக்குமா னால் அவர்கள் மற்ற இடங்களில் கடன் வாங்குவதை விட 10-லக்ஷரூபாய் வட்டியில் லாபமாக கடன் வாங்குகிறார்கள். இந்த ஸொஸைடிகள் கொடுக்கும் கடன் இப்போது கோடிக்கணக்காய் அதிகரித்துவிட் டது. இப்படிக் கடன்வாங்குவதில் லாபம் பெறுவ தோடு கூட இந்த ஸொஸைடிகளின் செல்வாக்குக் குட்பட்ட கிராமவாஸிகள் ஒழுக்கம், கல்வி, கச்சேரி வழக்குகள், இவைகளிலும் நன்மை பெறுகிறார்கள். ஒரு ஜில்லாவில் ஒரு வருஷத்தில் ஸிவில் வழக்கு கள் 1,100 குறைந்து போயிற்றென்றும், அப்படிக் குறைந்ததற்குக் காரணம் முக்கியமாய் இந்த சங்கங் களென்று அதிகாரிகள் சொல்லுகிறார்களென்றும் சொன்னார்.

**The Conference of the Registrars of Co-operative Credit Societies.**

ஐக்கியநாணயச்சங்க ரெஜிஸ்டிரார்களின் கான் பரேன்ஸ்.— ஸிம்லாவில் நடந்த ஐக்கிய நாணயச் சங்க ரெஜிஸ்ட்ரார்களின் கான்பரென்ஸில் இந்தி யா கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஆனரபில் ஸர் ராபர்ட் கார்லைல் ஒரு ப்ரஸங்கம் செய்தார். "இந்தச் சங்கங்கள் எவரும் எதிர் பாராத வண்ணம் விர்த்தி யாகி வருகிறபடியால், அவைகளை நாம் அவஸரப் பட்டு அதிகமாக ஸ்தாபித்து, அவைகளின் திறமை யைக் கெடுத்துவிடக்கூடாது. ஐக்கிய நாணய விதி களை யறிந்து நிதானமாயும், லாபகரமாயும் வேலை செய்யும் ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் அப்படி வேலை செய்யாமலிருக்கும் 12 ஐக்கிய நாணயச் சங்கங்களை விட நல்லது. இந்தியாவில் இப்போது நடக்கும் நானாவித நிகழ்ச்சிகளில் இந்த ஐக்கிய நாணயச் சங் கங்கள் முக்கியமானவை. இந்த சங்கங்களுக்கு கவர்ன்மெண்ட் பணவுதவி எவ்வளவு குறைகிறதோ அவ்வளவும் நல்லது. க்ஷாமகாலத்தில் ஐக்கிய நாண யச் சங்கங்கள் எவ்வளவோ நல்லது செய்யக்கூடும். அந்தக் காலத்தில் கவர்ன்மெண்டார் ஐக்கிய நாண யச்சங்கங்களுக்குப் பணம் உதவிசெய்ய மறுக்கமாட் டார்கள். ஆனால் பொதுவாய் இவைகளுக்குப் பணம் ஜனங்களிடமிருந்தே வரவேண்டும். கவர்ன்மெண் டுக்கும் ஐக்கிய நாணய முயற்சிகளும் ஸம்பந்தம் விட் டுப் போகக்கூடாதென்று நாம் எவ்வளவு கவலைப் பட்டபோதிலும், இவைகளை யெல்லாம் உத்யோகஸ் தர்கள் மேல்விசாரணை செய்தல் ஸாத்தியமல்ல. உத் யோகஸ்தரல்லாத ஜனங்களின் ஒத்தாசை இந்த சங்கங்களுக்கு இன்றியமையாதது. இதுவரையில் அவர்கள் முன்னின்று இந்த சங்கங்களின் அபி விர்த்திக்காக உழைத்ததுபோல இனியும் உழைக்க வேண்டும். அவர்கள் தேசாபிமானத்தாலும் தங்கள் ஊரார் நல் வாழ்வில் கவலை வைத்தும் செய்யும் முயற்சிகள் இல்லாவிட்டால் இந்த சங்கங்கள் நிறை வேறுதல் ஸாத்தியமல்ல. இவர்களுடைய ஒத்தாசை மிகுதியாகவும், கவர்ன்மெண்டின் மேல்விசாரணையும், பணவுதவியும் குறைவாகவும், இரண்டும் சேர்ந்து அமையுமானால், அப்போதுதான் இந்த சங்கங்கள் இடையூறில்லாமல் வளப்பம் பெறும்'.

# BANKING.

## பாங்கி வியாபாரம்.

### The Bombay Provincial Bank.

பம்பாய் ப்ரோவின்ஷ்யல் பாங்கி.—இந்த பாங்கி 25 லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் ஏற்பட்டிருக்கிறது. பங்கு ஒன்றுக்கு 25 ரூபாயாக லக்ஷம் பங்குகள் ஆகும். இந்த பாங்கிக்கு ஜீவபூதராய் இருப்பவர் மிஸ்டர் பாலுபாய் காஹன்தாஸ் என்பவர். இவர் பம்பாய் ராஜ்யத்து பாலன்பூர் நவாப்புக்கு பம்பாய் ஏஜண்டு. அவர் தமது பெயரால் ஒரு கம்பெனி ஒன்றும் நடத்தி வருகிறார். ஆகவே மெஸ்ஸர்ஸ் பாலுபாய் காஹன்தாஸ் அண்ட் கம்பெனியே இந்த பாங்கிக்கு ஏஜெண்டுகளாகும். டிரெக்டர்கள் போர்ட்டுக்கு சேர்மனாயிருப்பவர் பம்பாயில் ப்ரஸித்திபெற்ற ஸர் பாலசந்திர க்ருஷ்ண என்பவர். விம்படி மகாராஜா, ஆனரபில் ஸர்தார் முதலியார் (பூனா) முதலிய தக்க கனவான்கள் டிரெக்டர்களாயிருக்கிறார்கள். டிரெக்டர்கள் மிகவும் செல்வாக்குள்ளவர்கள் என்று தெரியவருகிறது. பம்பாய் ஸ்வதேச வ்யாபார சங்கத்தின் சேர்மன் பம்பாயில் போதுமான பாங்கிகள் இல்லை யென்கிறார். அவர் சொல்லுவது ஸரியாயிருக்குமானால் இந்த பாங்கியும் நன்றாய் நடக்கலாம்.

### What is a Bank ?

பாங்கி என்றால் என்ன ?—ஜர்மெனியிலுள் இம்பீரியல் கோர்ட்டில் பாங்கி என்ற பதத்தை அக்ரமமாய் உபயோகிப்பதைப்பற்றி ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னது பாங்கி என்பதை வ்யாபாரிகளின் பொது அபிப்பிராயத்தைக் கொண்டு நிச்சயிக்கவேண்டும். இதன்படி ஒரு சிறிய வ்யாபாரி பாங்கி வ்யாபாரி யாகமாட்டான். ஒரு ஸாதாரண லேவாதேவிக்காரனும் பாங்கி வ்யாபாரியல்ல. இந்த வ்யாபார அபிப்ராயத்துக்கு விரோதமாய் எவனாவது தான் பாங்கிவ்யாபாரி என்று சொல்லிக்கொண்டு வெளியிலாவது, ஜனங்களுக்கு எழுதும் கடிதங்களிலாவது பாங்கி வ்யாபாரி யென்று காட்டிக்கொண்டால் அவன்வாஸ்தவமானபாங்கிகளோடு அக்ரமமாய் போட்டி போடுவதாகிய குற்றத்துக்குள்ளாவான். வ்யாபாரச்சட்ட ஸம்பந்தமான புஸ்தகங்களின்படி ஒருவன்தான் பாங்கி வ்யாபாரி என்று காட்ட முடியுமானாலும் அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

### An Important Rule for Co-operative Banks.

ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு ஒரு அவசியமான விதி.—இந்த விஷயமாக அ. ஸேதுராமய்யர் சுதேசமித்திரனுக்கு எழுதுகிறதாவது :—ராஜதந்திர வரையறை செலவு கணக்கு சாஸ்திரம் அல்லது செல்வநூல் சாஸ்திரப்படி எந்த தேசத்தில் ஜனங்களுக்கும், ஸொத்துக்களுக்கும் பந்தோபஸ்து ஏற்பட்டுப் போயிருக்கிறதோ அந்த தேசத்தில் நடைமுதல் வட்டி ஸ்வல்பமாயிருக்கும். இங்கிலண்டு முதலிய நாடுகளில் ஜனங்கள் சுயர்ச்சிக்கும் ஸொத்து பந்தோபஸ்துக்கும் குறைவே யில்லாததினால் அவ்விடங்களில் 100-க்கு 4-க்குமேல் வட்டி கிடையாது. ப்ரிட்டிஷ் இந்தியாவிலே, ஜனங்கள் சுயர்ச்சிக்கும், ஸொத்துகளுக்கும் பந்தோபஸ்து இருந்தும் ஏன் வட்டி விகிதம் ஜாஸ்தியா யிருக்கவேண்டும் என்பது கேள்வி? இந்தியாவில் 12, 18, 24, 36, 50, இப்படி வட்டி விகிதங்க ளிருப்பானேன்? இதற்குப் பதில், என்ன சொல்லப்படுகிற தென்றால், ஐக்கிய நாணயச் சங்கங்கள் $\frac{3}{4}$ வட்டிக்குக் கடன் கொடுத்தபோதிலும், ஜனங்கள் ஒழுங்காய்க் கடன்களைச் செலுத்துகிறதில்லை. கொடுத்த கடனை ஒழுங்காய்த் திருப்பிக்கொடுத்தல் என்கிற ஸ்வபாபம் நமது ஜனங்களுக்குப் படிகிறவரையில், வட்டி விகிதம் ஜாஸ்தியாகவே யிருக்குமென்று சொல்லப்படுகிறது. இது ஒரு விதத்தில் ஸரிதான். நமது ஜனங்கள் வாங்கின கடனைக் குறித்த காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்கிற பொறுப்பை அறியவேண்டும். அப்படி அறிந்து ஒழுங்காய் திருப்பிக்கொடுத்தல் என்கிற குணத்தைத் தெரிந்துகொண்டு விட்டால் நமது தேசத்திலும் வட்டி விகிதம் நாளடைவில் குறைந்துவிடும். இதற்காக ஒவ்வொரு ஐக்கியச் சங்கமும் பின்வரும் விதியை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதாவது ஒரு கோ-ஆப்ரேடிவ் வருஷத்தினுடைய கணக்கு பரிசீலனை ரிஜிஸ்திராரிடமிருந்து வந்த பிற்பாடு அந்த வருஷத்தில் ஒங்கல் வட்டி யல்லாமல் ஒரு வருஷத்தில் கூடுதலாகும் மொத்த வட்டியில் 10-ல் 1 பாகத்திற்கு அதிகப்படாத ஒரு தொகையைக் குறிப்பிட்டு நிர்வாக சபையார் பின் வருமாறு அந்த வருஷத்தில் வட்டி செலுத்தியிருக்கிற மெம்பர்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம். அப்படி பிரித்துக் கொடுக்கையில் அந்த வருஷத்தில் வட்டியிலாவது, கடன் தவணையிலாவது ஒருநாள்கூடத் தவக்கமின்றி செலுத்தி யிருக்கவேண்டும். மேலும் பிரித்துக்கொடுக்கிற தொகையானது அந்த வருஷத்தில் அந்த மெம்பரால் செலுத்தியிருக்கும் வட்டியில் 5-ல் ஒரு பாகத்துக்கு அதிகப்படவும் கூடாது.

# INSURANCE.
## இன்ஷ்யூரென்ஸ்.

### Bachelors and Married Men.

**ப்ரம்மச்சாரிகளும், கலியாண மானவர்களும்.**—ப்ரம்மச்சாரிகளைவிட கிரஹஸ்தர்கள் நீண்ட ஆயுளு டையவர்களாயிருக்கிறார்கள். குற்றவாளிகளில் பிரம மச்சாரிகளைவிட கிரஹஸ்தர்கள் குறைவு. இக் காரணங்களால் ஜனஸமூக நன்மையைக் கருதுகை யில் கிரஹஸ்தாச்ரமமே விரும்பத்தக்கது என்று ஒரு ஜெர்மன் சாஸ்திரியார் அபிப்பிராயப்படுகிறார்.

### A Dog Insurance Company in Paris.

**பாரிஸில் நாய் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி.**—பாரிஸில் நாய்களுக்கு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி யொன்றிருக்கிறது. நாய்களை இன்ஷியூர் செய்து அதற்குரிய கட்டணத்தை அவைகளின் ஜீவதசையில் கட்டிவந்தால் அவை இறக்குங்கால் ஷை கம்பெனி யார் கொடுக்கும் பொருளைக் கொண்டு நாய்களை ஸமாதிசெய்து அதன்மேல் நேர்த்தியான கல்லறை கட்டப்படுமாம்.

### Insurance Education of the Public.

**பொது ஜனங்களுக்கு இன்ஷ்யூரென்ஸைப் பற்றிய விஷயங்களைத் தெரிவித்தல்.**—ஜனங்களுக்கு இன்ஷ்யூரென்ஸைப்பற்றி அவ்வளவாகத்தெரியாது. இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளும் இன்ஷ்யூரென்ஸ் விஷயத்தைப்பற்றி விசேஷமாய் தெரிவிப்பதில்லை, பொதுவாய், வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விளம் பரம் செய்யும்போது, அந்தந்தச் சரக்குகளை வாங்கு வதனால் என்ன நன்மை உண்டாகும், ஏன் அவை களை வாங்கவேண்டும், என்று இவைபோன்ற பல அரிய விஷயங்களை ஜனங்களுக்குத் தெரிவிக்கிறார் கள். ஆனால் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் மாத் திரம் அப்படித்தெரிவிக்க ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. அநேக இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி கள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கின்றன. கம் பெனி இன்ன இடத்தில் இருக்கிறது, ரிஸர்வு பண்டு இவ்வளவு, சொத்து இவ்வளவு, ப்ராஞ்சுகள் (கிளை) ஆபீஸ்கள் இன்ன விடத்தில் இருக்கின்றன என்ற விஷயங்களை விளம்பரம் செய்கின்றனவே ஒழிய, இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியால் இன்ன ப்ரயோஜனம் என்று ஒருவரியாவது எழுதுவதில்லை. ஏஜெண்டுகள் மாத்திரம் ஜனங்களிடத்தில் இன்ஷ்யூ ரென்ஸ் விஷயமாய்ப் பேசுகிறார்கள். கம்பெனிகளும் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு இன்ஷ்யூர் செய்வ தாலுண்டாகும் பலா பலன்களை எடுத்துச்சொன்னால் மிகவும் நன்மை உண்டாகும்.

### Long Lives of Women.

**ஸ்த்ரீகளின் நீண்ட வயது.**—ப்ரான்ஸ் தேசத்து இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளின் கணக்குகளின்படி புருஷர்களைவிட ஸ்திரீகள், அதிக காலம் ஜீவித்திருக் கிறார்களென்று தெரியவருகிறது. இப்படி அதிக காலம் ஜீவித்திருப்பது சில மாதம் அல்லது சில வரு ஷம் மாத்திரம் அல்ல. இந்த ஆயுள் வித்யாஸம் அநேகமாய் மூன்றில் ஒரு பாகமாயிருக்கிறது. ஒரு கம்பெனியின் கணக்குப்படி ஸ்திரீகள் ஸராஸரி 70-வது வயதில் இறக்கிறார்கள். புருஷர்கள் வயது 50 தேறுவது அரிதாயிருக்கிறது. ஒரு கம்பெனியில் இன்ஷ்யூர் செய்தவர்களில் அநேகர் சிரஞ்சீவிகளா யிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் ஸ்திரீகளே. இந்த அதருஷ்டசாலிகள் தாங்கள் கட்டிய தொகை யைவிட ஏற்கனவே ஐந்தாறு பங்கு அதிகப்பணம் வாங்கியிருக்கிறார்கள். இந்தக் கம்பெனியார் தங்களு டைய ரேட்டுகளை புருஷர்களுக்கு ஒருவிதமாயும் ஸ்திரீகளுக் கொருவிதமாயும் மாற்றுவதைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஸ்திரீ புருஷர்களுடைய வயதில் வித்யாஸம் ஏற்படுவதைப் பற்றி ஒரு ப்ரபல வைத்யரைக் கேட்டதில் அவர் இரண்டு வகுப்பாரும் ஜீவிக்கும் விதத்தில் வித்யாஸம் இருப்பதால் இப்படி நேரிடுகிறது என்றார். "மனி தர்கள் ரொம்ப ச்ரமப்பட்டு ஜீவிக்கிறார்கள். அவர் கள் அதிகமாக சுருட்டுக் குடிக்கிறார்கள். அவர்கள் அதிகமாக மது பானம் செய்கிறார்கள். வேலையும் அதிகமாகச் செய்கிறார்கள். ஸ்திரீகளோ அப்படி யல்ல. நாற்பதாவது வயதில் ஸ்திரீகளுக்கு அதிக தேக வலிமையுண்டு. அதே வயதில் புருஷர்களுக்கு தேக பலம் குறைந்து ஆயுளுக்கு பயம் ஏற்படு கிறது."

# EDUCATION.
# வித்யா விஷயம்.

## An Industrial School at Katpadi.

காட்பாடியில் ஒரு தொழிற் பள்ளிக்கூடம்.—காட்பாடியில், அமெரிக்கன் ஆற்காட் மிஷன் தொழிற் பள்ளிக்கூடக் கட்டிடத்துக்காக கவர்ன்மெண்டார் 2565-ரூபாய் கட்டிட க்ராண்டு ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

## Grants for Technical Education.

தொழிற் படிப்புக்கு பொருளுதவி.—இந்தியா கவர்ன்மெண்டார் இந்த மாகாணத்தில் தொழிற் படிப்பின் அபிவ்ருத்திக்காக செலவுசெய்யக் கொடுத்த ரூபாய் 12,000-த்தையும் சில பள்ளிக்கூடங்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதைப் பற்றி வித்யாதிகாரி அனுப்பிய பிரேரணைகளை மாகாண கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். அத்தொகை கோயமுத்தூர், கரூர், சென்னை, திண்டிவனம், நாஸரத்து, தஞ்சாவூர், புத்தூர் (திருச்சி),. வேலூர், நாயுடுப் பேட்டை, இவ்விடங்களில் பாதிரிமார்களாலும், மகமதியர்களாலும், ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தொழிற் பள்ளிக்கூடங்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. சென்னை செங்கல்வராய நாயக்கர் தொழிற் பள்ளிக்கூடமும் அத்தொகையில் ரூபா 200 பெறுகிறது. கோயமுத்தூர் ஸெயிண்ட் ஜோஸப் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் அத்தொகையில் ரூபா 2600 பெறுகிறது. நாஸரெத் ஆர்ட் இண்டஸ்டிரியல் ஸ்கூல் ரூபாய் 2100 பெறுகிறது.

## Technical Education of Indians.

இந்தியர்களின் டெக்னிகல் படிப்பு.—இஞ்ஜினீயரிங் முதலிய தொழில்கள் கற்கப்போகும் இந்திய வாலிபர்கள், தாங்கள் மாணுக்கர்களாகையால் தங்களுக்கு எல்லா ஸௌகரியங்களும் ஏற்படவேண்டுமென்றும், தாங்கள் வேலைக்காரர்களோடு சேர்ந்து வேலை செய்வது ஹீனமென்றும் கருதுகிறார்கள். வேலைக்காரர்களைப்போல கஷ்டப்படாமல் உடனே நல்ல பதவியை அடைய முடியாதா என்றும் எண்ணுகிறார்கள். தொழிற்படிப்பில் பயிற்சியாவதற்காக எடுத்துக்கொள்ளும் பாக்டரி மானேஜர்கள் இப்படிப் பட்டவர்களைக் கண்டால் விரும்புவதில்லை. இந்த வாலிபர்களுடைய ஸ்நேகிதர்கள் தொழிற் கல்வி பரவுதற்காக எவ்வளவோ உதவிசெய்ய ச்ரமப்பட்டும் இந்த மாணுக்கர்கள் பாக்டரிகளில் போய் வேலை செய்து தேர்ச்சியடைவதென்றால் பின் வாங்குகிறார்கள்.

ஆனால் இவர்கள் இந்தியாவைவிட்டு வேறு தேசங்களுக்குப் போய்விட்டால் அங்கே காலேஜிலாவது பாக்டரியிலாவது போய் வேலை செய்யப் பின்வாங்குவதில்லை. அவர்களிடத்தில் ஒரே ஒரு குறைதான் இருக்கிறது. அதாவது ஒரு தொழிலை அப்பியஸிப்பதிலேயே உழைத்து அதில் தேறுவதை விட்டுவிட்டு பல தொழில்களை மேல் போட்டுக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். இப்படி பம்பாய் பத்திரிகை யொன்று எழுதுகிறது.

## Agricultural Education in the Punjab.

பஞ்சாப் மகாணத்தில் விவஸாயப் படிப்பு.—லையால்பூரிலுள்ள பஞ்சாப் விவஸாய கலாசாலையில் தேச பாஷையில் விவஸாயம் கற்பிக்க, சென்ற அக்டோபர்மீ முதல் தேதியில் ஒரு க்ளாஸ் ஏற்படுத்தப்பட்டது. அந்த விவஸாய கலாசாலையில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பாடங்களில், ஸாதாரண விவஸாயிகளுக்குச் செய்துகாட்டுவதற்கு ஏற்ற ஒரு ஏற்பாடும் இல்லை. பாட ஜாப்தாவில் தேச பாஷையில் விவஸாய பாடமும் இப்பொழுது சேர்ந்திருப்பதால் விவஸாய ஞானத்தை வ்ருத்தி செய்துகொள்ள விரும்புவோர்கள் எல்லாருக்கும் தக்க யறிவு புகட்ட ஸாதகமாயிருக்கிறது. பாடங்கள் ஸுலபமாயிருக்கும். விவஸாய ஸம்பந்தமான விஷயங்களெல்லாம் அநேகமாய் செய்துகாட்டப்படும்.

அந்த காலேஜில் வாசித்து டிப்லோமா (ஸர்டிபிகேட்) வாங்கிய ஒருவரின் மேல்பார்வையில் இந்த க்ளாஸ் நடத்தப்படும்.

(1) தங்கள் நிலங்களை விருத்திசெய்ய விரும்பும் மிராசுதார்கள்.

(2) கோர்ட் ஆப் வார்ட்ஸில் உள்ள பூஸ்திதிகளுக்கு ஏஜெண்டாகவும் மானேஜராகவும் இருக்க விரும்புகிறவர்கள்.

(3) டிப்டி கமிஷனர்களால் தெரிந்தெடுத்து அனுப்பப்படும் ரெவின்யூ உத்யோகஸ்தர்கள்.

(4) நார்மல் ஸ்கூல் உபாத்தியாயர்கள்.

(5) ப்ரைமரி பரீக்ஷையில் தேறிய சிறிய ஜமீன்தார்கள் ஆகிய இவர்களுக்காக இந்த வகுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

# ECONOMIC PRODUCTS.
# விலையுள்ள பொருள்கள்.

**Cocoanut Fibre.**

தேங்காய் நார்.—பிலிப்பைன் தீவின் முக்கிய பட்டணமாகிய மானில்லா நகரத்திலுள்ள வ்யாபாரிகளின் சங்கத்தார் தேங்காய் நாரை வீண்போக்காமல் உபயோகிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து வருகிறார்கள். அந்தத் தீவிலிருந்து தேங்காய் மட்டைகள் ஏராளமாய் ஏற்றுமதியாகிறதைத் தடுத்து, அந்த மட்டைகளிலிருந்து நாரை எடுத்துப் பக்குவஞ்செய்து துணிகள் நெய்வதற்காக ஆலோசனை செய்து வருகிறார்கள். ஒரு வருஷத்தில் ஸுமார் நாலு கோடியே எட்டு லக்ஷம் தேங்காய் விளைகின்றனவென்றும், அவைகளிலிருந்து 4000 டன் நிறையுள்ள நார் எடுத்து நெசவுக்கு உபயோகிக்கலாமென்றும், உத்தேசம் செய்திருக்கிறார்கள்.

**Pearls from Silkworm.**

பட்டுப்பூச்சிகளிடத்தும் முத்துக்கள்.—நாம் நூல்களிற் கண்டமட்டில் முத்துக்கள் மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக் கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, நன்னங்கையர் கண்டம் இவற்றில் உண்டாவதாகத் தெரிகிறது. இப்போது ஸமுத்திரங்களில் பின்னு என்ற ஒருவிதப் பட்டுப்பூச்சிகளிருக்கின்றனவென்றும், அவைகளில் பட்டிருக்கிறதோடுங்கூட ஏராளமான கரு முத்துக்களிருக்கிறதாகவும் டாக்டர் பெஞ்சமின் எச். க்ரேவுக்குத் தெரியவந்தது. அவர் சில பட்டுப்பூச்சிகளைக் கொண்டுவந்து பார்த்ததில் ஐந்துக் கொரு முத்து இருந்ததாகவும் ஒவ்வொரு ஒட்டில் 10 முத்துக்களிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

**"Nendram" Plantains.**

நேந்திர வாழைக்காய்.—இப்போது நேந்திர வாழைக்காய்களை ஏராளமாய் இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். அவைகளிலிருந்து மா முதலிய வர்க்கங்களை நூதனமாய்யுண்டாக்கி, மறுபடியும் நமது இந்தியாவுக்கே கொண்டுவரப்பட்டு செலவாக்கப்படுகிறது. இந்தியர்கள் இப்படிப்பட்ட விசேஷ கைத்தொழில்களை விட்டுவிடுகிறபடியினால் தான், நமது ஏழை ஜனங்கள் பிழைக்க மார்க்கமின்றி ஸொந்த தேசத்தை விட்டு விட்டு, ஸிலோன், மோரீஸ், நெட்டால், மலேயா முதலிய தூரதேசங்களுக்குப் போய் பலவிதமான நிந்தை, அவமானம், கஷ்டமெல்லாம் பட்டு, கண்ணீர் சொரிந்து ஜீவனம் செய்து வருகிறார்கள் என்று ஒரு பத்திரிகை எழுதுகிறது.

**Banana Flour.**

பனனு மாவு.—'பனானன்' என்று வழங்குவது ஒருவித வாழைக்காயின் மாவேதான். அது மிகுந்த ப்ரயோஜனத்தைத் தரக்கூடியது. அதில் ஆஹார ஸத்து மிகுதியாயிருக்கிறது. அது சரீரத்திலுள்ள அக்னியால் சீக்கிரம் பஸ்மமாகி விடுகிறது. உமிழ் நீரிலேயே அது கரைந்துவிடுகிறது. நூறுபாகம் பனனுவில் ஜலம் 14·6, தாதுவர்க்கம் 2·2, ப்ரோடீன் 19·22, கொழுப்பு 2·0, கார்போஹைட்ரேட் 61·98.

மேலும் அந்த மாவானது புதிதாய்ப் பறித்தெடுத்த பழத்தைப்போலவே வாஸனையிலும் ருசியிலும் இருக்கிறது. பனனுவில் அப்பமும், ரொட்டியும் செய்கிறார்கள். கோதுமை மாவைக்காட்டிலும் இதில் ஸத்து ஜாஸ்தியாயிருக்கிறது. ஆகையால் இதை ஸாப்பிட்டால் உடம்பிற்கு பலம் ஏற்படும். இங்கிலீஷ் மெடிகல் ஸங்கத்தில், டாக்டர் ரீரிக் ப்ரிச்சார்ட் என்பவர் குழந்தைகளுக்கு பால்போட்வதில் இதை உபயோகிக்கலாமென்று சொன்னார். அது உபயோகிக்கும் விதம் என்னவென்றால், ஒருபைண்ட் சூடான பாலில் ஒரு அவுன்ஸ் பனனுமாவை சேர்க்கவேண்டும். இதை குழந்தைகளுக்குக் கொடுப்பதால் செலவு மட்டாவதுவுமன்றி உடம்புக்கு ஆரோக்யமும், பாலை சீக்கிரத்தில் ஜீரணப்படுத்தி உடம்புக்கு பலமும் கொடுக்கிறது.

டொமினிகாதீவில் வாழை மாவெடுத்து ஸாப்பிடுவதுண்டு. முற்றிய வாழைக்காயை தோலுரித்து கத்தரித்து வெயிலில் மூன்றுநாள் போட வற்றலாகிறது. இதை மரஉரலில் இடித்து சலிக்க மாவாகிறது. இதை கஞ்சி செய்வதுமுண்டு. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் மேன்மைபட்டது. ரொட்டியும் செய்யலாம். 10 காயிலிருந்து ஒரு ராத்தல் மாவு கிடைக்கும். ஒரு நாளுக்கு ஒரு ஆள் 5 ராத்தல்மாவு இடிப்பதுண்டு. பாலுடன்சேர்த்தும், கோதுமைக்குப் பதிலாகவும் உபயோகமாகிறது.

# BUSINESS METHODS.

## வியாபார முறைகள்.

### Quality of Goods.

**சரக்குகளின் தரம்.**—புத்திசாலியான வ்யாபாரி லாபத்தையே உத்தேசிக்கிறவனாய் அதையே அடைய வேண்டினன்றால் அவன் தன் சரக்குகள் எப்படிப் பட்டவை என்று விளம்பரம் செய்கிறானோ அதே மாதிரி உயர்ந்த சரக்குகளையே விற்கவேண்டும். வ்யாபாரத்தில் நல்ல பேரெடுத்து அந்தப்பேர் சாச்வதமாக இருக்கவேண்டுமென்றால் சரக்குகளும் எப்போதும் நல்லவைகளாகவே இருக்கவேண்டும்.

### The Price of Experts.

**நிபுணர்களின் சம்பளம்.**—ஒரு விஷயத்தை நன்றாய் அறிந்திருப்பவனுக்கு எப்போதும்கிராக்கிஉண்டு. அவனை எவரும் அமர்த்த விரும்புவார்கள். அதே விஷயத்தை இன்னம் நன்றாக அறிந்திருந்தால் அவனுக்கு இன்னம் அதிக கிராக்கி ஏற்படுகிறது. ஏனென்றால் எவ்வளவுக்கு அவனுக்கு ஞானத்தில் அபிவிருத்தி ஏற்படுகிறதோ அவ்வளவுச்கு அவன் போன்ற ஞான முள்ளவர்கள் குறைந்து கொண்டே வந்து கடைசியில் ஜனங்கள் அபூர்வமான படம் போல மனஸுக்குத் தோன்றிய சம்பளம் (கூலி) அவனுக்குக் கொடுக்க ஸம்மதிக்கிறார்கள்.

### Advertising.

**விளம்பரம் செய்தல்.**—விளம்பரம் செய்வதால் வ்யாபாரம் விருத்தியாகி நிலைபெறுகிறது. விளம்பரமென்றால், அதிக வ்யாபாரம், அதிகலாபம் வ்யாபாரிக்கு விளம்பரத்தைப்போல் நன்மை பயக்கக் கூடியது ஒன்றுமில்லை. அநேக வ்யாபாரிகள் விளம்பரத்தால் குபேரர்களாகி யிருக்கிறார்கள். ஸரிவர விளம்பரம் செய்துவந்தால் அதனால் வரும் லாபம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. ஆனால் விளம்பரங்கள் ஜனங்களுடைய கவனத்தைக் கவரக்கூடியனவா யிருக்கவேண்டும். முதலில் ஜனங்களுடைய கண்ணைக் கவரத்தக்கதாய் விளம்பரம் செய்யவேண்டும். கண்தான் மனதின் காவல்காரன். காவல்காரனை வசப்படுத்திவிட்டால் மனஸை வசப்படுத்திவிடலாம். கண்போன வழியெல்லாம் மனமும் போகும். கொஞ்சமேனும் சோராமலும், இடைவிடாமலும், பார்ப்பவர்கள் வாங்க மாட்டேன் என்று ஒருபோதும் சொல்லாதபடி எப்பொழுதும் ஜனங்கள் கண்ணில் படும்படி விளம்பரம் செய்தால்தான் வியாபாரம் வ்ருத்தியாகும்.

### Competition in Business.

**வ்யாபாரத்தில் போட்டி.**—வ்யாபாரத்தில் லாபம் அடைவதற்கு ராஜபாட்டை ஒன்றும் கிடையாது. இந்த தேசத்தில் செய்யும் ஸாமான்களை விற்று லாபம் அடையவேண்டு மென்றால், மற்ற தேசத்தில் ஸாமான் செய்கிறவர்கள் என்னென்ன ஸாதனங்களைக் கையாடுகிறார்களோ அவைகளை யெல்லாம் கையாட வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு தேசத்து வ்யாபாரிகளும் தங்கள் தேசத்தில் ஸுலபமாய்ச் செய்து ஒவ்வொரு தேசத்திலும் போய் போட்டிபோட்டு வ்யாபாரம் செய்கிறார்கள். பணம் ஸம்பாதிக்க எந்த வழியை அனுஸரிக்சலாமென்றாலும் அதில் போட்டி பலமாய் இருக்கிறது. ஸுலபமானதும் அதிக லாபம் வரக் கூடியதுமாக இருக்கும் துறைகளில் ஏற்கனவே அநேகர் இறங்கி வ்யாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

### Evening Bazaars in Japanese Towns.

**ஜப்பான் பட்டணங்களில் அந்திக் கடைகள்.**—டோகியோ பட்டணத்தில் பெரிய தெருக்களில் அந்திக்கடை வைத்திருக்கிறதற்கு நடுவேபோகும் அகன்ற ரஸ்தாவுக்கிரண்டு பக்கமும் ஆள்நடமாடும் அகன்ற பாதைகளில், கடை வைக்கிறவர்கள் இடம் தேடுவார்கள். ஸாயங்காலம் 3-மணிக்கே வந்து, வேண்டிய அளவுநீளம் ஆணிகளை அறைந்து கயிறுகளைக்கட்டி நீண்ட தோர் சட்டையைக் கிழித்தோ அல்லது பழம்பாய்களை விரித்தோ இடம் போடுகிறார்கள். ஸூர்யன் அஸ்தமித்தால் அனேக லாந்தல்களைக் கொளுத்தி வைத்துக் கொண்டு ஜப்பானில் பேர்பெற்ற ஸாமான்களை யெல்லாம் விற்பனை செய்கிறார்கள். தெருவின் மற்றொருபக்கம் நடைப்பாதையில் பார்த்தால் ஆயிரக் கணக்கான விளக்குகள் கொளுத்தி வைத்துக்கொண்டு பலதினுஸான மரங்களும், அலங்காரச் செடிகளடங்கிய தொட்டிகளும், புஷ்பங்க ளடங்கிய செடிகளும் சிறியது, பெரியது, மிகப்பெரியது, முதலிய பலவித செடிகளை வரிசை வரிசையாய், அலங்கரித்துப் பிரகாசமான வெளிச்சங்களின் மத்தியில் பல வர்ணப் புஷ்பங்களடங்கிய தொட்டிகளை வைத்து விற்பனை செய்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஜப்பானிய ஸ்திரீகளும், பெண் குழந்தைகளும், இந்த ஸாயங்கால சிங்காரப் பூங்காவனத் தோட்டத்திலே பிரவேசித்து வேண்டியவைகளை வாங்கி கையில் வைத்துக்கொண்டு போகிறார்கள்.

# FRAUDS AND FAKES.
## மோசங்களும் பித்தலாட்டங்களும்.

### Sale of Milk in Calcutta.

கல்கத்தாவில் பால் விற்றல்.—கல்கத்தாவில் ஜனங்களுக்கு விற்கப்படும் பால் சுத்தமாயிராமல் பல வியாதிகளுக்கு இடமாகிறதென்று அதைப்பற்றின சட்டத்தை மாற்றி புதுச்சட்டம் செய்யவேண்டுமென்று கல்கத்தா கார்பொரேஷனின் ஸ்பெஷல் கமிட்டி தீர்மானித்திருக்கிறார்கள். முக்கியமான மார்க்கெட்டுகளில் பால் விற்குமிடங்கள் அமைத்து ஜனங்களுக்கு சுத்தமான பால் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும் பிரேரேபித்திருக்கிறார்கள். இம்மாதிரி புதுச்சட்டம் இந்தியாவிலுள்ள பெரிய பட்டணங்களிலெல்லாம் செய்யப்படவேண்டும். மாடுகள் பட்டணத்தின் ஒதுக்குப்புறங்களில் கட்டப்பட்டு, அவ்விடங்களிலிருந்து சுத்தமான பால் மார்க்கெட்டுகளுக்கு காலை நேரத்தில் வந்துவிட, அங்கு ஜனங்கள் அதை வாங்க வேண்டும். பால் சுத்தமாயிருக்கிறதா வென்று முனிசிபல் அதிகாரிகள் சோதிக்கவேண்டும். மாடுகள் நன்றாய்ப் போஷிக்கப்படுகின்றனவா, வியாதிகளில்லாமல் இருக்கின்றனவா என்று அதிகாரிகள் சோதிப்பதும் அவசியம். இந்த ஏற்பாட்டினால் பால் விலை சிறிது அதிகமாகக்கூடும். ஆனாலும், அதைப் பொருத்து அசுத்தமான பாலின் உபயோகத்தாலுண்டாகும் பல வியாதிகள் வராமல் தடுக்கவேண்டும்.

### Counterfeit Coins.

ஈய நாணய ஏமாற்றம்.—நம்மவர்கள் அனைவருக்கும் இதனால் ஒரு எச்சரிக்கை கொடுக்கிறோம். கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் இவைகளில் ஈய நாணயங்கள் எவர்களாலோ செய்யப்பட்டு செலாவணியாகிக் கொண்டிருக்கின்றன. விசேஷமாக ஒரு அணா நிக்கல் நாணயத்தில் ஈய நாணயம் அதிகமாயிருக்கிறது. ஏமாந்துப்போய்ப்பெற்ற ஒருவன் அதை எப்படியேனும் மாற்றிவிடப்பார்த்து செலாவணியாக்கி விடுகிறான். இதனால் ஏமாந்த இடத்தில் ஜனங்கள் இந்த நாணயத்தைப் பெற்று பிறகு வெகுவாய் வியாகூலிக்கிறார்கள். இந்த ஈய நாணயங்களை மாற்ற வருபவர்களைப் பிடிக்கலாமோ வென்றால் அதுவும் ஸரியல்ல. யோக்கியஸ்தர்களிடமும் இது கிடைத்து அதை அவர்கள் அறியாமலே மாற்றவும் நேருகிற தருணங்கள் பல. ஆனதால் ஜனங்கள் ஒவ்வொரு நாணயத்தையும் நன்றாகப்பார்த்து வாங்க வேண்டும். ஈய நாணயம் பளபளப்பற்று மங்கலாகவும், சற்று வளையக்கூடும் போலவுமிருக்கும். இதை கவனிக்கக் கோறுகிறோம்.

### Pure Food and Clothes.

சுத்த உணவும் உடையும்.—இங்கிலாந்தில் லோகல் கவர்ன்மெண்ட் போர்டு ப்ரெஸிடெண்டவர்கள் சுத்த உணவு மசோதா ஒன்று சட்டமாக்கக் கொண்டு வருவார். அந்த மசோதாவில் சாப்பாட்டுப் பொருள்கள், முக்கியமாய் ரொட்டிகள், இவ்வளவு சுத்தமுள்ளவை களாயிருக்கவேண்டுமென்று ஏற்படுத்தப்படும். இதுவரையில் ரஸாயன வஸ்துக்களாலும், மின்ஸார ப்ரயோகத்தாலும், மாவை வெண்மை யாக்குவதில் மா கெட்டுப்போய் அபாயத்துக் கிடமாயிருந்தது. இனிமேல் அப்படிச் செய்ய முடியாது.

அமெரிக்காவில் இதற்கு மேலும் செய்கிறார்கள். ஏற்கனவே அவர்களுக்கு சுத்த உணவுப் பொருள் சட்டம் ஒன்று இருக்கிறது. இப்பொழுது சுத்த உடைகள் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்போகிறார்கள். இந்தச் சட்டத்தின்படி உடைகளுக்கு வேண்டிய துணிகள் செய்யும் கம்பெனிகள் தாங்கள் செய்யும் துணிகள் இன்ன தரமும் அளவும் கொண்டவை என்று தெரிவிக்கவேண்டும். ஆகையால் இனி, துணியில் பித்தலாட்டம் செய்யமுடியாது.

வ்யாபார வழக்கத்தில் சில வார்த்தைகள் தப்பு அர்த்தம் கொள்ளும்படியாக உபயோகிக்கப்படுகின்றன. இது கம்பளி வஸ்திரங்களில் தான் அதிகமாக இருக்கிறது. பழைய கம்பளி நூலையும் புதியதையும் கலந்து ஷாடி என்று ஒரு துணி செய்கிறார்கள். ஆனால் அதை ஷாடி என்று சொல்லாமல் வேறு பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்தப் புதுச்சட்டத்தால் ஷாடி செய்கிறவர்கள் அதை ஷாடி யென்றே சொல்லவேண்டும். மெரினோ வஸ்திரங்களிலும் சுத்த கம்பளம் என்னும் வஸ்திரங்களிலும் எவ்வளவு பருத்தி நூல் கலந்திருக்கிறது என்பதை ஸரியாய்க் குறிப்பிடவேண்டும். இப்படிச் செய்வதால் ஜனங்கள் மோசம் போகாமலிருக்கலாம். இதனால் யோக்யமான வ்யாபாரி எவனும் பயப்படமாட்டான். இதற்கு முன்னால் நெய்பவருக்குத் தக்கப்படி வஸ்திரத்தின் நயம் வேறுபட்டிருந்தது. இனிமேல் துணிகளின் நயமும், சுத்தமும் ஒரேமாதிரியாக இருக்க ஹேது உண்டு.

# MACHINERY AND INVENTION.

## யந்திரங்களும் நூதன கற்பிதமும்.

### Wasted Smoke.

வீணகப்போதும் புகை.—பாக்டரிகளில் புகைக் கூண்டுகளில் கரி ஏறுவது அநேக இடங்களில் விறகுகள் நன்ருய் எரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்கிறது. புகையில் எரியக்கூடிய கெட்டி வஸ்துக்களின் துணுக்குகள் இருக்கின்றன. அவைகள் எரிந்து உஷ்ணம் உண்டாக்கக் கூடியதால் அதை அறிந்து உபயோகப் படுத்தாமல் நஷ்டமடைகிருர்கள். ஆனல் புகையுடன் சில எரியக்கூடிய வாயுக்கள் எரியாமல் தப்பிச் செல்லுவதால் உண்டாகும் நஷ்டம் முன் கூறிய நஷ்டத்தைவிட ரொம்ப அதிகமாயிருக்கிறது. ஏனெனில், விறகில் உஷ்ணம் உண்டாக்கக்கூடிய பாகத்தில் 100-க்கு 20 பாகம் வரையில் அந்த வாயுக்களில் இருக்கிறது. இப்படிப் புகை அதிகம் உண்டாவதால் யந்திரத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அதை நடத்துபவருக்கு மாத்திரம் நஷ்டம் உண்டாகிற தென்பதில்லை. வண்ணன் கூலியும், கரியைத் துடைப்பதற்கும், விளக்கைத் துடைப்பதற்கும் செலவாகும் பணமும், ஸாமான்கள் நாசமடைவதாலுண்டாகும் நஷ்டமும், புகையாலுண்டான நஷ்டங்கள் என்றே சொல்லவேண்டும். இங்கிலாந்திலுள்ள லீட்ஸ் என்னும் நகரத்தில் பாக்டரி முதலியவைகளிலிருந்து உண்டாகும் புகையானது மேகம்போல் ஒன்றுசேர்ந்து ஸூர்யனை மறைப்பதால் அந்த நகரத்தில்விழும் ஸூர்ய வெளிச்சத்தில் 100க்கு நாற்பது பங்கைத் தடுத்து விடுகிறதென்று அந்த நகரத்து யூனிவர்ஸிடி வித்வான் ஒருவர் சொல்லியிருக்கிருர். ஸமீபத்தில் நடந்த ஆராய்ச்சிகளின்படி அநேகவித செடிகள் வளராமல் பட்டுப் போவதற்குக்காரணமாயுள்ள அம்சங்களில், இவ்விதமாய் ஸூர்ய வெளிச்சம் குறைதலும், ஒன்ருகும். சில நகரங்களில் இந்தக் காரணத்தாலும், இலைகளில் கரிபடிவதலாலும், சில மரங்களையும் செடிகளையும் வைத்துப் பயிர் செய்வதே முடியாத காரியமாயிருக்கிறது. சிலவற்றை ரொம்ப ச்ரமப்பட்டுப் பயிர் செய்யவேண்டியிருக்கிறது.

இவைகளையெல்லாம் உத்தேசித்து (1) பாக்டரிகளின் புகைக்கூண்டுகளையும், உபகரணங்களையும் திருத்தமான மாதிரியில் செய்து வருகிருர்கள்.

(2) நிலக்கரி முதலியவைகள் ஸரியாய் எரிக்கப்படுகின்றனவா என்று புத்திசாலித்தனமாய் மேம்பார்வையிடவேண்டும் என்றும், நன்ருய் விறகு எரிக்கத் தெரிந்தவர்கள் வேலைசெய்ய வந்து அவ்வேலையிலே தங்கியிருக்கும்படி நெருப்பு அறைகள் நன்ருயிருக்க வேண்டுமென்றும் தெரிந்து கொண்டிருக்கிருர்கள்.

(3) புகையைக் குறைப்பதைப் பற்றியும், புகை உண்டாசாமல் தடுப்பதைப்பற்றியும் செய்யும் முயற்சிகளைப் பற்றி ஜனங்களுடைய நல்ல அபிப்பிராயம் அதிகரித்து வருகிறது.

(4) புகை யுண்டாவதை அடக்குவதைப்பற்றி சட்டம் ஏற்படுத்தி அனுஷ்டானத்துக்குக் கொண்டு வர வேண்டிய முயற்சிகள் செய்யப்படுகின்றன.

### Reviving the Dead.

இறந்தவனைப் பிழைப்பிக்கக் கூடுமாம்.—இறந்தவர்களுடைய சரீரத்திலிருந்து, ஜீவாதாரத்திற்குரிய சில பாகங்களை யெடுத்து, இறந்துபோன வேருெருவனுடைய சரீரத்தில் புகவைத்து ஜீவனுண்டு பண்ணிவிடுவது ஸாத்தியமென்றும், கூடிய சீக்கிரத்தில் அவ்வாறு நடக்கப் பார்க்கலாமென்றும், டாக்டர் ரோஸ்வல் பார்க் என்பவர் கூறுகிருர். அவர் அப்படிச் செய்து காண்பிக்க முயற்சிசெய்து வருகிருரென்றும் தெரிகிறது. அவர் சொல்வதாவது, உயிரோடிருக்கும் ஒரு மனிதனுடைய சரீரத்தில் பல ஸ்தானங்களில் ஜீவாதார வஸ்துக்கள் தங்கி நிற்கின்றன. ஜீவ ஸ்தானங்களில் அடிபட்டோ, அல்லது பலமாகக் காயமடைந்தோ, ஒரு மனிதன் இறந்து விடுவது ஸகஜமாயிருக்கிறது. அப்படி இறந்தவனுடைய சரீரத்தில், அடிபட்ட ஜீவஸ்தானத்தை யொழித்து மற்ற ஸ்தானங்களிலுள்ள ஜீவன்கள் நல்ல ஸ்திதியிலேயேயிருக்கவேண்டும். ஆகையால் அவைகளை எடுத்து அவைகளில்லாத வேருெரு சரீரத்தில் புகவைத்து ஜீவனை உண்டுபண்ணி விடலாம். ஸாதாரணமாய், எல்லா ஸர்ஜன்களும் இறந்துபோனவர்களுடைய பற்கள், எலும்புகள், தசை முதலியவற்றை தாராளமாய் எடுத்து, உயிரோடிருப்பவர்களுடைய சரீரங்களில் சேர்த்து, அவர்களுடைய உபத்திரவத்தை நீக்கி, ஜீவனையும் பலப்படுத்தி வருவதைக் கண்ணுரக் காண்கிருேம். அதுபோலவே ஜீவாதாரப் பொருள்களையும், இறந்துபோன ஒரு சரீரத்திலிருந்து, மற்ருெரு சரீரத்தில் சேர்த்து பிழைப்பு மூட்டி விடலாம். ஆனல், ஒரு சரீரத்தில் உயிர் உண்டு பண்ணுவதற்கு 40, அல்லது, 50, செத்த சரீரங்களிலிருந்து ஜீவஸ்தானப் பொருள்கள் சேகரிக்க வேண்டிவருமென்று அவர் அபிப்பிராயப்படுகிருர்.

# LAW.
## சட்டம்.

**Widow's Right to Inheritance.**

சொந்தையடைய விதவையின் ஸ்வதந்திரம்.—ஒரு விதவை தன்னுடைய புருஷன் ஸொத்தை அடைவதற்கு தேகசுத்தமான கற்புமாத்திரம் இருக்க வேண்டியது அவச்யம். ஒரு ஸ்திரீ கொஞ்சகாலம் புருஷனைவிட்டுப் பிரிந்திருந்தாள். புருஷன் மறு விவாகம் செய்துகொண்டான். பிறகு முதல் மனைவியை வீட்டுச்கு வரும்படி யழைக்க அவள் வர ஸம்மதிக்கவில்லே. அவள் துர்நடத்தையுள்ளவள் என்று ரூபிக்க ஒன்றுமில்லாததனல், அவள் புருஷனுடன் மனஸ்தாபப்பட்டிருந்தாள் என்பது மாத்திரம் இறந்து போன புருஷனுடைய ஸொத்துக்குள்ள பாத்யதையை நீக்க போதுமானதல்ல.

**Criminal Procedure Code.**

க்ரிமினல் புரோஸிஜர் கோட்.—க்ரிமினல் ப்ரோஸீஜர் கோடைத் திருத்தி ஒன்று சேர்க்க இந்தியா கவர்ன்மெண்டார் வெகு தீவிரமாய் ஒரு மசோதா தயார் செய்து வருகிறுர்கள். இந்தியா கவர்ன்மெண்ட் சட்ட ஙிரூபண இலாகா அதிகாரிகளும், மற்ற இலாகா அதிகாரிகளும் அடிக்கடி கூடி அதைப்பற்றிப் பேசி வருகிறுர்களாம். இந்தியா கவர்ன்மெண்ட் சட்ட மெம்பர் ஆனரெபில் மிஸ்டர் ஆலி இமாமும், அந்த கவர்ன்மெண்ட் ஹோம் மெம்பர் ஸர். ஆர். க்ராடாக்கும் அந்த ஆலோசனையில் விசேஷமாய்க் கலந்து வருகிறுர்களாம்.

**Alienation by a Daughter.**

பெண்ணுல் செய்யப்பட்ட பராதீனம்:—ஒரு ஹிந்து விதவைக்கு தன்னுடைய புருஷனிடமிருந்து கிடைத்த ஸொத்தில் எவ்வளவு பாத்யமிருக்கிறதோ, அவ்வளவுக்குக் குறையாமல் பெண்ணுக்கும் தன்னுடைய தகப்பனுரிடமிருந்து கிடைக்கும் ஸொத்திலும் பாத்யமுண்டு. பெண் தன்னுடைய ஜீவனத்துக்காக ஸொத்தை பராதீனம் செய்தால் அது அநந்தர வார்ஸுகளேயும் கட்டுப்படுத்தும்.

**Maintenance of a Daughter.**

பெண்ணுக்கு ஜீவனும்சம்.—ஒரு ஸ்திரீயானவள் கலியாணமா யிருந்தபோதிலும் அவளுடைய இறந்து போன புருஷன் குடும்பத்திலிருந்து தகுந்த ஜீவனும்சம் கிடைக்காதபக்ஷத்தில் அந்தப் பெண்ணின் தசப்பனுரும், அவர் குடும்பமும் அப்படி ஆதரவற்ற பெண்ணுக்கு ஜீவனம் கொடுத்து உதவ சட்டப்படிக் கடமைப்பட்டவர்களாவார்சள்.

**Clients' Promises.**

கக்ஷிக்காரர்சள் சொல்லும் வார்த்தைகள்:—இதன் விஷயமாக ஒரு சட்ட மாஸாந்திர பத்ரிகையில் ஒருவர் எழுதுகிறுர்.—கக்ஷிக்காரர்களுடைய பேச்சில் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. வக்கீல்களால் காரியமாகிற வரையில் அவர்களுக்குப் பவுன் மூட்டைகளாய் அடுக்கிவிடுவதாகச் சொல்லிக்கொண்டே வருவார்கள். வேலே முடிந்ததும் வக்கீல்கள் தங்களுச்கு சக்ஷிக்காரர்கள் செய்த வாக்குத்தத்தை ஙிறைவேற்ற வேண்டுமென்று ஙிர்ப்பந்தப்படுத்தினுலொழிய, அவர்கள் தாங்கள் சொன்னதை மறந்தே விடுவார்கள். அப்படிக்கு ஙிர்ப்பந்தப்படுத்தினுலும், ஒன்றும் விசேஷமாய் கைகூடிவராது. அதுவுமல்லாமல் சக்ஷிக்காரர்களுடைய விரோதமும் எற்படுகிறது. வேலேசெய்ததிற்கு கூலியாக குற்றஞ் சாட்டப்படுவது மன்றி அவதூரான வார்த்தைகளுக்கும் உள்படவேண்டும். சக்ஷிக்காரர்கள் விசேஷமாய் நன்றிகெட்டவர்களென்ற ஞாபகத்தை வக்கீல்கள் கைவிடக்கூடாது

**Batta for Jurors,**

ஜூரர்களுக்கு படிக்கட்டணஏற்பாடு.—சென்னே மாகாணத்திலுள்ள க்ரிமினல் கோர்ட்டுகளில், ஜூரர்களாசவும், அஸெஸர்களாகவும் இருக்கும்படி அழைக்கப் படுடவர்களுக்கு ப்ரயாணச்செலவு, படி முதலியன கொடுப்பதைப் பற்றி சென்னே கவர்ன்மெண்டார் ஒரு புதிய உத்தரவு பிறப்பித்திருக்கிறுர்கள். இதனல் தங்களிருப்பிடங்களே விட்டு, ஐந்துமைல் தூரத்திற் கப்பாலுள்ள க்ரிமினல் கோர்ட்டுகளுக்கு ஜூரர்களாகவும், அஸ்ஸெஸர்களாகவும், இருக்க அழைக்கப்படுபவர்கள், வரப்போக ஏற்பட்ட ப்ரயாணச்செலவும், படியும், இரண்டாம் வகுப்பு சாக்ஷிகளுக்கு எற்படுத்தப்பட்டிருக்கும் படிவிகிதப்படி கொடுக்கப்பெறுவார்கள். இதுவரையில் இப்படிக் கொடுக்கப்படுவது கிடையாது. ஐந்து மைலுக்கு மேல் யாத்திரை செய்யும் ஜூரர்கள், அப்படி அதிகமாகச் செய்த ப்ரயாணத்தில், தங்களுக்குண்டான உண்மையான கைப்பொறுப்பைத் தெரிவித்து, ஜட்ஜியின் அபிப்பிராயத்தின்பேரில் அத்தொகையைப் பெறுவதாயிருந்தது. இப்போதைய உத்தரவானது சென்னே சட்ட ஸபையில், 1910-ம் வருஷம் ஆனரபில் ராய்பஹதூர் ராமபத்ரநாயுடு செய்த பிரேரணேயின் பலனெனத் தெரிகிறது.

# MEDICINE.
## வைத்தியம்.

### Start from Sleep.

தூங்கி திடீரென்று எழுதல்.—ஸாதாரணமாய் தூங்கி விழித்தபிறகு கொஞ்சம் நேரமாவது அதாவது ஸுமார் 10, 15 நிமிஷமாவது படுத்த படுக்கையாகவே இருந்து அப்பால் எழுந்திருப்பது தேக ஆரோக்யம் என்று சொல்லப்படுகிறது. அதிலும் குறைத்தூக்கத்தில் எழுப்பப்பட்டால் கட்டாயம் விழித்தபிறகு 20 நிமிஷம் வரையில் படுக்கையிலே படுத்திருக்கவேண்டுமாம். அதிக சிரமப்பட்டு வேலை பார்த்து தூங்குகிறவர்கள் குறைத்தூக்கத்தில் விழித்து உடனே படுக்கையைவிட்டு எழுந்து தன்வேலைக்கு வேண்டிய கிருஷிகளைச் செய்வாரானல் அனேகம் வியாதிகள் உண்டாகும். சில ஸமயங்களில் பைத்தியமும் பிடிக்கக்கூடும் என்று ஒரு டாக்டர் சொல்லுகிறார்.

### Overcoming the Habit of Smoking.

புகை குடிக்கும் வழக்கத்தை நிறுத்துதல்.--ஸில்வர் நைட்ரேட் தண்ணீரினல் வாயைக் கொப்பளித்து பிறகு சுருட்டுக்குடித்தால் வாயில் ஒருவித அருவருப்பான ருசி உண்டாகும். இதனல் ரொம்ப நாளைக்கு புகை குடிப்பதிலேயே ப்ரியம் விழாமல் போகும்.

### The Sanitary Conference.

ஸுகாதாரக் கான்பரேன்ஸ்.—இந்தக் கான்பரென்ஸ் சென்னை நகரில் நவம்பர்மாதம் 11வ முதல் நடை பெற்றது. வைஸராய் நிர்வாக ஸபையில் கல்வி வைத்தியம் ஆகிய இந்த இரண்டு டிபார்ட்மெண்டுகளுக்கும் மெம்பரான ஸர் ஹார்கோர்ட் பட்லர் இந்த கான்பரென்ஸுக்கு அக்ராஸனாதிபதியாயிருந்தார். அவர் முதல்நாள் செய்த ப்ரஸங்கத்தில், ஸுகாதார இலாகாவில் செய்யப்பட்டிருக்கும் மாறுபாட்டைப்பற்றிச் சொன்னர்.

பாக்டீரியா என்னும் பூச்சி சோதனைகள் செய்யும் டிபார்ட்மெண்டை வைத்திய டிபாட்மெண்டோடு சேர்த்துவிட்டபடியால் ஸுகாதாரவிதிகளை வைத்ய சாஸ்திரத்துக்கு ஒத்தபடி ஏற்படுத்தல் ஸாத்தியமாகும். காலரா, மலேரியா (விஷ ஜுரம்) முதலிய வியாதிகளின் காரணங்களையும் நிவர்த்திகளையும் பற்றி சாஸ்திர வல்லோர் சோதனை செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் பல உண்மைகளையும் புதிதாய் சோதனைகளால் அறிந்திருக்கிறார்கள். அவைகள் சென்ற இரண்டு வருஷங்களாக இந்தியா கவர்ன்மெண்டார் ஸுகாதார அபிவிர்த்திக்காகக் கொடுத்திருக்கும் கிராண்டுகள் $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேலாகின்றன என்று சொன்னர். இன்னம் இப்படி ஸுகாதாரத்துக்காக செய்யப்படும் பல முயற்சிகளில் ஸ்தல ஸ்தாபனங்களாற் செய்யப்படும் முயற்சிகளே முக்கியமானதால், சுத்தமான ஜலம் போதுமான அளவு கிடைக்கும்படி செய்வதே மனிதனுடைய பிணிகளை நீக்குவதற்கு அவசியமென்றும், வட இந்தியாவில் சில பாகங்களில் மருந்துகளுடன் ஒரு டிஸ்பென்ஸரியையே (மருந்துச்சாலை) இடத்துக்கிடம் ஆட்கள் தலைமேல் கொண்டுபோய் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யப்படுவதால் நல்ல பலன் உண்டாயிருக்கிறதென்றும் சொன்னர். ஜனங்களுக்கு கல்வியையூட்டி அவர்களும் அவர்களுக்குப்பிரியமுள்ள பந்து மித்திரர்களும், ப்ளேக், மலேரியா, முதலிய நோய்களால் மாளாவண்ணம் ஸுகாதார விதிகளைப் போதிக்க வேண்டுமென்றும் சொன்னர்.

### Vegetarian Diet.

சாக வர்க்க போஜனம்.—ஒரு ராத்தல் மாம்ஸத்தின் போஜனஸத்து அரை ராத்தல் பருப்பின் ஸத்துக்கு குறைவானது. பருப்பு மலிவாயிருக்கிறது என்பது மாத்திரமல்ல. எந்த வகையான மாம்ஸ போஜனத்தைப்பார்க்கிலும் மேலான போஜனமாயுமிருக்கிறது. பருப்பிலே வயிற்று க்ருமிகள் முதலியன ஜனிக்கிறதில்லை.

ஒரு ராத்தல் மாம்ஸத்தைப் பார்க்கிலும் அதே நிறையுள்ள பருப்பில் ரத்தம், எலும்பு, தசை முதலியவற்றை உண்டாக்கும் ஸத்து அதிகமாயிருக்கிறது.

இந்தியா தேசத்து காலாட்படைகள் அனேகமாய் அரிசிச்சாதம் சாப்பிடுகிறார்கள். அவர்கள் மாம்ஸம் சாப்பிடுகிறதில்லை. ஒரு நாளுக்கு 60 மைல் வீதமாக தினமும் பயணம் செய்பவர்கள். மேலும் மாம்ஸம் ஜீரணிப்பதற்கு மூன்று மடங்கு நேரமும் ஆகிறதாம். துருக்கிய ஸைன்யம் ரொம்ப வல்லமையோடு யுத்தம் செய்யும். அவர்களுடைய போஜனம் அரிசிச்சாதம், அத்திப்பழம், அப்பம், தயிர், மோர் என்பனவாம்.

மாட்டிறைச்சி தின்னும் ருஷியரை அரிசிச்சாதம் சாப்பிடும் ஜப்பானியர் பறக்கடித்தார்கள். ஒரு மாட்டுக்கு அல்லது குதிரைக்கு மாம்ஸ உணவு எப்படி அநாவசியமோ அப்படியே மனிதனுக்கும் அது அநாவசியமாம்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Always Consistent.

எப்போதும் ஒரேமாதிரி.—"நீங்கள் எப்போது எனக்குப் புடவை வாங்கித்தருகிறீர்கள்?" என்று மனைவி தன் கணவனைக் கேட்டாள். "இந்த வாரத்தில் வாங்கித்தருகிறேன்" என்று புருஷன் சொன்னான். "ஆமாம்; போனவாரத்திலும் இப்படித்தான் சொன்னீர்கள்" என்று மனைவி மனம் சலித்துக் கொண்டே கூறினாள். "சிலரைப்போல் இன்றைக்கொன்று நாளைக்கொன்று பேசும் கெட்டவழக்கம் என்னிடம் இல்லை. நான் எப்போதும் ஒரே மாதிரியாய்த்தான் பேசுவேன்" என்று கணவன் பதில் சொன்னான்.

### How a Common Well was Dug.

எல்லாருக்கும் வேண்டிய கிணறுவெட்டிய விதம்.—வட இந்தியாவில் ஒரு கிராமத்திலே ஒரு பொதுக்கிணறு அவசியமாயிருந்தபோதிலும், 'அவன்தான் வெட்டட்டுமே, இவன்தான் வெட்டட்டுமே' என்று ஒருவர்மேலொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஒருவரும் வெட்டாமலிருந்தார்கள். இதைக் கண்ட அவ்வூர் விருத்தாப்பியரொருவர், ஊராருச்கு புத்திமதி போதிக்க வேண்டுமென்று எண்ணி, வேறொருவருடைய உதவியில்லாமலே தான் மட்டும் பொதுநலத்தின் பொருட்டு அக்கிணற்றைத் தன் கையாலேயே வெட்டி முடிப்பதாக ஒப்புக்கொண்டு, கட்டைபாரையும் மண்வெட்டியும் கொண்டுவந்து வெட்ட ஆரம்பித்தார். ஒரு ஆள் ஆழம் வெட்டினவுடன் அவருக்குச் சிறிது ஆயாசமாயிருக்க, வெளியே வந்து தன் மேல்உடுப்புகளைந்து அருகிலிருந்த ஒரு கல்லின்மேல் வைச்தார். இதற்குள் தரை மணற்பாங்காயிருந்தபடியால் கிணறு இடிந்து சரிந்து விழுந்தது. சற்று களைப்புத் தீர்ந்தவுடன் வந்து மறுபடியும் வெட்டலாமென்று யோசித்து, அதற்குள் என்ன வேடிக்கை நடிக்கிறது பார்ப்போமென்று எண்ணமுள்ளவராய், கட்டைபாரையையும் உடுப்பையும் கல்லின்மேல் வைத்துவிட்டு மண்வெட்டியை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு ஸமீபத்திலிருந்த மரத்தின் உச்சிக்கிளையில் மேலேறி உட்கார்ந்தார். இதற்குள் கிராமத்தாருள் சிலர் கிணறு எவ்வளவு வெட்டப்பட்டிருக்கிறது பார்ப்போமென்று வந்தார்கள். உடுப்பு மட்டும் வெளியே இருப்பதையும், விருத்தாப்பியரும் மண்வெட்டியும் காணாமற்போனதையும், மணல் சரிந்திருப்பதையும் பார்த்து, 'ஐயோ! பாவம்! கிழவன் கீழே வெட்டிக்கொண்டிருக்கையில் மேலே மணல் சரிந்து விழுந்திருக்கும். அவன் என்ன அவஸ்தைப் படுகிறானோ' என்று பரிதாபமுள்ளவராய் கிராமத்திலுள்ளவர் அனைவரையும் அழைத்துவந்து எல்லாருமாகச் சேர்ந்து விழுந்த மணலை விரைவாக வெட்டியெடுத்தார்கள். தண்ணீர் ஊற்றெடுக்கு மட்டும் அவர்கள் வெட்டியும் விருத்தாப்பியனைக் காணாமையினால் அவர்கள் வியப்புற்றார்கள். அப்பொழுது அக்கிழவர் மரத்திலிருந்து இறங்கிவந்து என்னுடைய வேலையை நீங்களே செய்து முடித்ததற்காக வந்தனம். நீங்கள் முன்னால் இதை வெட்டுவதற்கு ஒருவரும் முன் வராததினால் அனைவரும் இக்காலத்தில் வந்து வெட்டி ஒருங்கே பயனடையும்படி இந்த யுக்தி செய்தேனென்று எல்லாரும் நாணச் சொன்னார்.

### A Dry Lecture.

ஸாரமில்லாத ப்ரஸங்கம்.—ஒரு சிறிய பட்டணத்தில் வித்வானொருவர் மதஸம்பந்தமான விஷயத்தைப்பற்றி ப்ரஸங்கிக்கலானார். ஸபா மண்டபத்தில் இருந்த ஜனங்கள் சிலரே. இவருடைய உபந்யாஸம் ஒருவருக்கும் பிடிக்காததனால் மண்டபத்திலிருந்து ஒவ்வொருவராக நழுவினார்கள். இப்படிப் போவதைக்கண்ட வித்வான் தன் ப்ரஸங்கத்தைச் சுருக்க எண்ணங்கொண்டபோதிலும் மண்டபத்தின் கோடியிலொருவர் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருப்பதைப்பார்த்து இவருக்கு தைரியமுண்டாயிற்று. சிறிது நேரத்திற் கெல்லாம் உபந்யாஸஞ் செய்பவரும், கோடியி லுட்கார்ந்திருந்தவரும் தவிர வேறொரு ப்ராணி அந்த மண்டபத்திலில்லை. கடைசியில் வித்வான் ஸபையாரைப்பார்த்துக் கூறுகிறார். "இந்தப்பட்டணத்தில் பொறுமையும் தெய்வபக்தியும் பொருந்தியவர் ஒருவராவது இருக்கிறாரே யென்பதைப் பார்க்க மிகவும் ஸந்தோஷகரமாயிருக்கிறது. ஆனால்......' என்று அவர்சொல்லி முடிக்குமுன்னே உட்கார்ந்திருந்தவன் எழுந்து 'ஐயா! போதும்! நீங்கள் சொல்வதெல்லாம் ஸரி, நீங்கள் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லிவிட்டாச்சுதனால், நான் சதவைச் சாற்றிக்கொண்டேபோவேன். இந்த மண்டபங் காப்போன் நான்' என்று சொல்லி விளக்குகளைத் தணிக்க ஆரம்பித்தான்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Thumb-impression.

விரலால் முத்திரையிடுவது.—விரலாலே முத்திரையிட வேண்டுமென்பது இக்காலத்திலே சாஸ்த்ரிகள் நூதனமாகக் கண்டுபிடித்த *முறையென்று நினைக்கிறார்கள். அப்படியன்று. ஆது முதல் முதலில் சீனருக்குள்ளே ஆயிரவாயிர வருஷங்களுக்கு முன்னே அனுஸரிக்கப்பட்டு பின்பு இந்தியாவுக்கு வரலாயிற்றும்.

### A Republic without Women.

பெண்காற்றுப்படாத குடியரசு.-க்ரீஸ் தேசத்தில் மஸிடோனியா நாட்டுக்குத் தென்பாகத்தில் ஓர் தீபகல்பத்தில் ஸ்திரீகள் ஒருவராகிலுமில்லாத ஓர் குடியரசு இருக்கிறது. அதில் 10,000 ஆண்பிள்ளைகள் ஓயாது படித்துக்கொண்டும் ஜெபம் பண்ணிக்கொண்டு மிருக்கிறார்கள். கடற்கரை மார்க்கமாய் ஸ்திரீ யாத்திரைகாரர் வராதபடி போலீஸ் மனுஷர்கள் காபந்து பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். 10,000 ஆண்பிள்ளைகள் சஞ்சரிக்குமிடம் ஆத்தோஸ் என்ற ஓர்மலை. அதில் 20-ஸந்யாஸிமடங்கள் இருக்கின்றன. 10,000 ஸந்யாஸிகளும் தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டு வருகிறார்கள். கவர்ன்மெண்ட் கட்டிடங்கள் கிடையாது எல்லாம் மடங்கள்தான். அந்த இடத்துக்குக் கான்ஸ்டாண்டி நோப்பிளிலுள்ள க்ரீக் பிதாப் பிதாவுடைய அனுமதிப் பத்ரமில்லாமல் ஒருவரும் போகக்கூடாது. அத்தகைய உத்திரவு சீட்டு வாங்கிக்கொண்டு போகிறவர்கள் கடற்கரையில் காபந்து பண்ணிக்கொண்டிருக்கும் போலீஸ் உத்யோகஸ்தர்களின் தலைவரிடம் அக்கடிதத்தைக் காட்டி மடங்களில் ப்ரவேசிப்பார்கள். ஒன்பதாவது நூற்றாண்டில் அந்தக் குடியரசு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அக்காலம் முதற்கொண்டு இப்போது ஆயிரம் வருஷத்திற்குமேல் பெண்பிள்ளையின் கால் அந்த ஸ்தலத்தில் பட்டதேயில்லை.

### Taxing the Unmarried.

கல்யாண மாகாதவர்க்கு வரி—ப்ரான்ஸ் தேசம் ஸுகவாஸத்திற்குப் பேர்போனது. அங்கே ஸதா காலமும் ஐரோப்பிய ஸ்ரீமான்களும் சீமாட்டிகளும் கூடின வண்ணமாகவே யிருப்பார்கள். அவர்கள் ஸ்திரீ புருஷர்களாக முறைப்படி வஸிக்க இஷ்டப்படாமல் ஸமயத்திற்குத் தக்கபடி இருந்து வருகிறார்கள். இதை முதல் முதல் பார்த்துக் குறை கூறினவர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பழைய தலைவரான மிஸ்டர் ரூஸ்வெல்ட்டாம். ஜனஸங்கியை குறைவதால் உண்டாகும் அபாயத்தை உணர்ந்து ப்ராஞ்சியர் கண் விழித்துக்கொண்டு முறைப்படி கல்யாணம் செய்துகொண்டு வாழ்ந்து, குழந்தைகளை யுடையோருக்குக் குறைந்த வரியும், மற்றோருக்கு ஜாஸ்தி வரியும் விதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 3-குழந்தைகளுக்கு மேற்பட்டோருக்கு குழந்தைகளின் ஸங்கியைக்குத் தக்கபடி வரி குறைக்கப்படும். இந்த ப்ரான்ஸ் தேசத்தில் மாத்திரமல்ல, ஏற்கனவே ப்ரஷ்யா, ஸாக்ஸனி, நார்வே, ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து முதலிய தேசங்களிலும் இம்மாதிரி செய்யப்பட்டு வருகிறதாம்.

### An Expert Singer.

ஓர் ஸங்கீத வித்வான்—சிஞ்ஞோர் கருஸோ என்பவன் மகா சிறந்த ஸங்கீத வித்வான். ஆஸ்ட்ரியா தேசத்தின் ப்ரதம நகரமாகிய வீயன்னா பட்டணத்தில் ஆப்பெரா என்ற கூத்து மேடையில் கச்சேரி வைக்கும்படியாக ஷை ஸங்கீத வித்வானிடம் அந்நாடகக் கம்பெனியார் ஏற்பாடு செய்தார்கள். வித்வான் சில நிபந்தனைகளுடன் அந்த ஒப்பந்தம் செய்துகொண்டான். அவையாவன: திரைச்சீலை தூக்கப்படுகிறவரையில் மேடையில் ஸிகரெட் பிடிக்க உத்தரவு கொடுக்கவேண்டியது. ஸிகரெட் பிடிப்பதனால் உண்டாகக்கூடிய ஆபத்தைத் தடுக்க ஓர் ஆள் பக்கத்திலிருந்து விழுகிற சாம்பலை ஏந்திக்கொள்ள வேண்டியது. வித்வான் மேடைமேலிருக்கும்போது வேலைக்கு அவச்யமில்லாத பேர்வழிகள் மேடையில் இருக்கக்கூடாது. தன்னுடைய பரிவாரம், அதாவது ஓர் வைத்யர், வார்த்தை யெடுத்துக்கொடுக்கிற ஒருவர், தன் குமஸ்தா, தன் காரியக்காரன், தன்னோடு காலப்போக்குக்காகப் பேசிக்கொண்டிருப்பவன், ஆகிய இத்தனைபேரும் உடுத்துகிற அறையிலிருந்து மேடைக்கு வரும்போதும் அங்கிருந்து அறைக்குத் திரும்பும்போதும் ஒவ்வொரும் ஸமயத்திலும் தன்னுடன் கூட வருகிறதற்கு உத்தரவு கொடுக்கவேண்டியது. இத்தனை கார்யங்களையும் ஏற்றுக்கொண்டபின்தான் சிஞ்ஞோ கருஸோ பாட ஸம்மதித்தான். அட்பேர்ப்பட்ட வித்வானுக்குக் கூலியென்ன வென்று கேட்பீர்களோ, மூன்று கச்சேரிக்கு 1800 பவுன். அதாவது கச்சேரி யொன்றுக்கு 9000 ரூபாய். ஸங்கீதத்தின் அருமையை இதனால் அறிந்து கொள்ளலாம்.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### Symptoms of Malaria.

குளிர்காய்ச்சலின் அடையாளங்கள்.—மலேரியா அதாவது குளிர்காய்ச்சல் வருவதில் முதலில் காணப்படும் அறிகுறியானது நடுக்கம் கொடுக்கும் குளிர்காய்ச்சல். இது மலேரியாவின் ப்ரதானமான குணங்களில் ஒன்று. இது எப்போதும் காலையிலாவது மத்யானம் சீக்ரமாகவாவது உண்டாகும். ஏதோ அரிதாய் ஸாயந்த்ரமும் வருவதுண்டு. இரவிலும், அதிகாலையிலும் குளிர்காய்ச்சல் வருவது அபூர்வம். காலாஅஸார் என்னும் வ்யாதியாயிருந்தால்தான் அதிகால வேளைகளில் குளிர்காய்ச்சலுண்டாகும். இதனால் வந்த வ்யாதி மலேரியாவா, கலா அஸாரா என்று ஸாதாரணமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

### Eggs and their Preservation.

முட்டைகளைக் காக்கும் முறை.—முட்டையைப் பழுதுபடாமற் காக்கும்படிக்குக் கூருள்ள பக்கத்தில் அது தங்கிநிற்கத்தக்கதாக வைக்கவும். புதுமுட்டை பழையமுட்டைகளை சோதிக்கும்முறை:—ஒரு பாத்திரத்தில் தண்ணீரிட்டு முட்டையைப்போட புதுமுட்டை அடியிற் படுத்துக்கொள்ளும். 3-5 நாட்சென்றால் தண்ணீரில் 36-டிக்ரீ உள்ள கோணமுண்டாக்கும். இப்படி நாட்கள் கூடக் கூடக் கோணமுமதிகரிக்கும்.

### New Stockings.

புதிய ஸ்டாகிங்க்ஸ்:—

புதிய ஸ்டாக்கிங்ஸுகளைத் தரித்துக்கொள்ளுமுன் அவைகளை ஜலத்தில் சுத்தம் பண்ணவேண்டும். இப்படிச் செய்வதினால் புது ஸ்டாக்கிங்ஸுகளை அப்படியே தரித்துக்கொண்டால் எவ்வளவு காலம் உபயோகத்துக்கு வருமோ அதைவிட அதிக காலம் உபயோகிக்கலாம். ஸோப்பை(சவர்க்காரம்) ஜலத்தில் கரைத்து நுரையுண்டாகும்படி செய்து அதில் ஸ்டாக்கிங்ஸுகளைப் போட்டு பிறகு சுத்த ஜலத்தில் நன்றாய் அலசிக் கழுவிவிடவும். உடனே நன்றாய்ப் பிழிந்து காயவைக்கவும். காயும்போது கால்விரல் பக்கம் மேலிருக்கும்படி தொங்கப்போட்டால் ஸ்டாக்கிங்ஸுகளில் சுருக்க முண்டாகாது.

### Some Hints about Lamps.

விளக்குகளைப் பற்றின சில யுக்திகள்—கெரொஸின் எண்ணெய் விளக்குகளில் எண்ணெயின் அடியில் சிறிது உப்பைப் போட்டு வைத்திருந்தால் விளக்கு அதிக பிரகாசமாய் எரியும். விளக்கில் எண்ணெய் குறைந்து போனால் விளக்கில் ஜலத்தை ஊற்ற அடியிலிருக்கும் எண்ணெய் எல்லாம் ஜலத்தின் மேல் மிதந்து மேலேவரும். எண்ணெய் கொஞ்சங்கூட சேதமாகாதபடி எல்லாம் எரிந்துவிடும். திரிசிறியதாயிருந்தாலும் இதேவிதமாய் ஜலம் ஊற்றி எண்ணெயைத் திரி உயரத்துக்கு ஏற்றிவிடலாம்.

### Cleaning Oil Cloth.

மெழுகுத் துணியை சுத்தப் செய்தல்.—மெழுகுத்துணியை (ஆயில்க்ளாத்) நம்மவர்கள் இப்போது அதிகமாய் உபயோகித்து வருகிறார்கள். இவைகளில் அழுக்குப் பற்றிவிட்டால் உடனே ஸோப் போட்டு அதை ஜலத்தில் தோய்த்து விடுகிறார்கள். ஸோப் போடுவதில் மெழுகு துணியில் உள்ள வர்ணம் நீங்கி, துணியும் சீக்ரம் கெட்டு விடும். ஆகையால் இதற்கு பதிலாக வருஷத்துக்கொருதரம் இதில் வார்னிஷ் லேசாய்ப் பூசினால் போதுமானது. அல்லது தேன்மெழுகு பூசலாம். ஒரே பூச்சு கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் வெகுகாலம் கெடாமல் நீடித்து நல்ல ஸ்திதியில் இருக்கும்.

### Killing Rats.

எலிகளைக் கொல்லுதல்.—விவஸாயிகளுக்கும், பொதுவாய் ஜனங்களுக்கும் எலிகள் தொந்தரவுகளும் நஷ்டங்களும் உண்டாக்குகிறபடியால் அவைகளை லகுவாய்க் கொல்லுவதற்குப் பின் வரும் உபாயம் சிறந்ததாகும். கந்தகத்தைக் கொளுத்தி அதினாலுண்டாகும் புகையை எலிகளிருக்கும் வளைகளுக்குள் பரவும்படி செய்தால் அவைகளிலிருக்கும் எலிகள் கந்தகப் புகையினால் மூச்சடைத்து உடனே இறந்து விடுகின்றன. மறுபடியும் அங்கு எலிகள் உண்டாகா. பாரிட்கோட் பட்டணத்தில் இதேமாதிரி செய்து பார்த்ததில் பலிதமாயிற்றென்று சொல்லப்படுகிறது. 884-வீடுகளில் சோதனை செய்து பார்க்கப்பட்டது. இவைகளில் மொத்தம்2,889 எலிவளைகள் இருந்தன. இவைகளிலிருந்த எலிகளையெல்லாம் கொன்றதற்கு மொத்தம் 15-ரூபாயே செலவாயிற்றென்றும், அதற்குப்பிறகு எலிகள் அதிகமாய் அங்கு காணப்படுவதில்லையென்றும், சொல்லப்படுகிறது. இந்தமாதிரியாக தான்யங்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடங்களில் வந்து அவைகளைச் சேதப்படுத்தும நெல் அந்து, வண்டு முதலியவைகளையும் இந்த கந்தகப் புகையினால் எளிதில் நாசப் படுத்திவிடலாமென்றும் சொல்லப்படுகிறது.

# ECONOMIC LITERATURE.
## பொருளாதார ஸம்பந்தமான ப்ரசுரங்கள்.

**Points in a Cow.**

பசுவின் அங்க லக்ஷணங்கள்.—"தென்னிந்திய விவஸாயம்" என்னும் மாதப் பூத்ரிகையில் பசுவின் அங்கலக்ஷணங்களைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர் அமெரிக்கர் ஆகிய இவர்கள் பின்கண்டவாறு பசுவின் லக்ஷணங்களைக் கவனிப்பார்கள். பசுவுக்கு மொத்தத்தில் 100 மார்க்குக் கொடுத்து ஒவ்வொரு அங்கத்துக்கும் பின்காட்டிய ப்ரகாரம் மார்க்குக் கொடுப்பார்கள். நல்லபசு 80 மார்க்குக்குக் குறைந்து வாங்கப்படாது; $\frac{1}{8}, \frac{1}{4}, \frac{1}{2}, \frac{3}{4}$, மார்க்கும் சில அங்கங்களுக்குக் கொடுப்பதுண்டு.

I. பார்வை—உருவம், தேக ஆரோக்யம், வலிவு, தெளிவு, சுறுசுறுப்பு முதலியன. 5

வடிவம்-முகம் பக்கமாய்ப் பார்த்தாலும், விலாப்பக்கமாய்ப் பார்த்தாலும், முதுகு பக்கம் பார்த்தாலும், அடி சிறுத்தும் தலை அகன்றுமுள்ள கொட்டாப்புளியைப்போல இருக்கவேண்டும். 5

மயிர்த்தோல் மிருதுவாகவும், கைக்கு வரும்படியாகவும் மஞ்சள் தைலப்பசையுள்ளதாகவும் இருக்கவேண்டும். 5

சுறுசுறுப்பு (முரட்டுத்தனமல்ல) கண்ணிலும் சதை உடைந்திருப்பது. 5

மொத்தம்... 20

II. தலையும் கழுத்தும்.

நெற்றி-அகலமாயும் நிறைந்தும் இருப்பது. 2

கொம்பு-சிறுத்தும், சந்துவிட்டும், நாணயமாயும் இருத்தல். 1

கண்—பெரிதும், பிதுங்கியதும், பளபளப்பு முள்ளது. 1

முகம்—மெல்லியதாயும், நீண்டும் அல்லது கொஞ்சம் குழைந்தும் இருப்பது. 1

உதடு—சுத்தமாயும் வலுவாயும் வாய் மூக்கு இவைகளின் த்வாரங்கள் பெருத்தும் இருத்தல். 1

காது நயமாயும் மத்யதரமாயும் மஞ்சள் பசையுள்ளதாயும் இருப்பது. 1

கழுத்து-நீண்டும், ஸன்னமாயும் சுத்தமாயும் நாணயமாயும் அதிகமாய்த் தொங்காமலும் இருக்கவேண்டும். 1

மொத்தம்... 8

III முன்பக்கம்.

மார்பு—அகன்றும் வலுவாயும் தாழ்ந்தும் சதை குறைந்தும் இருத்தல். 3

முசுப்பு—இல்லாமலிருத்தல். 1

தொடை—சதை குறைந்து ஸன்னமாயும் சாய்ப்பாயும் இருத்தல். 1

கால் குறுகியும் நேராயும் இருத்தல். 3

மொத்தம்... 8

IV தேகம்.

முதுகு—எலும்பு பிரிந்தும், நடு எலும்பு சுத்தமாயும் ஸன்னமாயும் இருப்பது. 3

தேகம்—நீண்டும் உருட்சியாயும் விலா அகன்றும் நன்ருய் வளைந்தும் பிரிந்தும் வலுமையுள்ளதாயும் இருப்பது 8

சுற்றளவு—முன்னந் தொடைக்குப் பின்னுல் பெரியதாயும் தாழ்ந்து மிருந்தால் இரத்தாசயம் ஈரல் இவைகளுக்கும் போதுமான இடம் உண்டு. 4

வயிறு—பெரிதாயும் அகன்றும் ஆழ்ந்தும் தொப்புள் ஒட்டியும் இருத்தல் 6

இடுப்பு—அகன்றும் வலுத்தும் இருத்தல். 3

மொத்தம்... 24

V பின்பக்கம்

புட்டம்—அகன்று இருத்தல், கர்ப்ப எலும்பு உறுதியும் பிதுங்கியும அரைச்சதை நீண்டும் அகலமாயும், 6

வால்—நாணயமாயும், நீண்டும், செண்டுள்ளதும், 2

தொடை—நீண்டும் ஸன்னமாகவும் சதை குறைந்தும், 3

கால்—நேராயும் குறுகியும் நன்ருய்த் திரும்பக்கூடியதும், 3

முன்மடி—சதைப்பற்றி சாய் இல்லாமல் நிறைந்தும் நீண்டும் வயிற்றில் ஒட்டியும் வளர்ந்தும் 8

பின்மடி—அகன்றும் நிறைந்தும் ஒட்டியும் சதை இல்லாமலும், 8

முலைக்காம்பு—நீண்டும் சுத்தமாயும் தூரமாகவும் நயமாகவும் 5

பால் நரம்பு—மடிக்கு முன்பாக பருத்தும் பலவிதமாய் வளைந்தும் பிதுங்கியும் ஒடி முனையில் பள்ளங்களில் மறைவது. 5

மொத்தம்... 40

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Improvement of Telugu.

தெலுங்கு பாஷாபி விருத்தியைப்பற்றிய ஒரு பொதுக் கூட்டம்.—தெலுங்கு பாஷையின் அபிவ்ருத்தியைக் கருதி, அப்பாஷாபிமானிகள் பலர் சேர்ந்து, சென்னமாதம் பச்சையப்பன் ஹாலில், ஒரு கூட்டம் கூடினார்கள். தற்போது, தெலுங்கு பாஷையானது, எப்படிப் பேசப்படுகிறதோ அதேவிதமாக எளிய நடையில் வாசக புஸ்தகங்கள் எழுதப்பட்டு, அவைகளையே பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், இப்படிச் செய்வதால் தெலுங்கு பாஷை அபிவ்ருத்தியாகக் காரணமாகு மென்றும், தீர்மானித்து கவர்ன்மெண்டுக்கு ஒரு மெமோரியல் அனுப்பிக் கொண்டார்கள்.

### Moral Sayings.

நீதிவசனங்கள்.—

1. ஐச்வரியம் வந்தகாலத்திலும் அடக்கமாயிருப்பதே அறிவுக்கு அழகு.

2. சொல்லாலும் செய்கையாலும் ஒருவனுடைய உள்ளம் தானே வெளியாகும்.

3. சிறுவருக்கு ஸந்தோஷம் அதிகம், விசனமோ சொற்பம்.

4. பணத்தால் மரணத்தை ஒட்ட முடியாது.

5. சிறு ப்ராயத்தில் சோம்பேறியா யிருப்பவர்கள் தள்ளாத வயதில் வருத்தப்படுவார்கள்.

6. வேலைசெய்பவனுக்கே அதிலுள்ள வருத்தங்கள் தெரியும்.

7. படித்தவர் பெருமை, படித்தவருக்கே தெரியும். மற்றவருக்குத் தெரியாது.

8. மரியாதை யில்லாமல் முரட்டுத்தனமாகப் பேசிக் கொடுப்பதைவிட மரியாதையோடு இல்லை யென்று சொல்லியனுப்புவது உத்தமம்.

9. கையிலிருப்பதை "இல்லை" யென்பது கள்ளத்தனம்.

10. த்யாகமிருப்பது யோகஸூசகம்.

டி. கே. ஆர்.

### Sayings from Appar.

அப்பர் வாக்யங்கள்.—

அப்பர் தேவாரத்திலுள்ள பழமொழி போன்ற வாக்யங்கள்:—

1. தன்னை யடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ தலையா யவர்தங் கடனா வதுதான்.
2. கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன் நானே.
3. முயல்விட்டுக் காக்கைப் பின்போன வாறே.
4 அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே.
5. பனிநீராற் பாவைசெய்யப் பாவித்தேனே.
6. எதன்போர்க் காதனாயகப்பட்டேனே.
7. இருட்டறையின் மலடு கறந் தெய்த்தவாறே.
8. விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே.
9. பாழூரிற் பயிக்கம் புக் கெய்த்தவாறே.
10. தவமிருக்க பவஞ்செய்து தருக்கினேனே.
11. கரும்பிருக்க இரும்பு கடித் தெய்த்தவாறே.
12. உற்றாரா ருளரோ, உயிர்கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லானமக் குற்றாருளரோ.
13. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை.
14. ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்.
15. கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது.
16. நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.
17. வெந்தநீ றருங்கலம் விரதிகட்கெலாம்.
18. அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்.
19. அறுகயிறூசல்.
20. மன்றத்துப் புன்னைபோல மரம்படுதுயரம்.
21. நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தோற்றம்.
22. கழயிடைத் தோணி போன்றேன்.
23. உலால் கயவர் தேற்றரூர்.
24. ஒரு முழம் உள்ள குட்டம் ஒன்பது துளை யுடைத்தா யரைமுழம் அதனகலம் அதனில்வாழ் முதலை ஐந்து.
25. காம்பின் மூழைபோல.
26. மத்துறு தயிரே போல.
27. என்னிலாரும் எனக்கினி யாரில்லை.
28. நூலும்வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே.
29. ஒடு நீரினை ஒட்டைக் குடத்தட்டி மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே.
30. யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெல்லாம் மாதே வனலாற் றேவர்மற் றில்லையே.
31. கூவலாமை குரைகடலாமையைக் கூவலோ டொக்கு மோகட லென்றல் போல்.
32. நரிவிருத்த மதாகுவர்!
33. செத்தால் வந்து தவ்வார் ஒருவரில்லை.
34. எங்கெழிலென் ஞாயிறு?

விவேகபோதினியில் வ. சு. செங்கல்வராய பிள்ளை. எம். ஏ

# MISCELLANEOUS NEWS.
## நாநா ஸங்கதி.

### Scientific Agriculture.

சாஸ்த்ரோக்தமான விவஸாயம்.—சிக்காகோவிலுள்ள 'ஸியர்ஸ் ரோபக் அண்ட் கம்பெனி' என்னும் ஒரு கம்பெனியார் ஸுமார் 30 லெக்ஷம் ரூபாயை ஒரு கமிட்டியாருக்கு இனாம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியார் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு விவஸாய இன்ஸ்பெக்டரை அனுப்பி க்ராமவாஸிகள் ஒவ்வொருவருக்கும் புதிய விவஸாயமுறைகளை சொல்லிக்கொடுப்பார்கள். இப்படி செய்வதினால் ஒவ்வொரு சின்ன குடித்தனக்காரனும் நன்மை அடைவான் என்பதில் ஸந்தேகமில்லை.

### Mr. D. T. Chadwick, I.C.S.

மிஸ்டர் டி. டி. சாட்விக், ஐ. ஸி. எஸ்.—மிஸ்டர் டி. டி. சாட்விக் சென்னை விவஸாய டைரெக்டராக வேலை பார்க்க நியமனம் பெற்றிருக்கிறார்.

### The Nagpore Agricultural Conference.

நாகபுரி விவஸாய கான்பரேன்ஸ்.—நவம்பர் மாதம் 14௳ அகோலா என்னுமிடத்தில் நாகபுரி விவஸாய கான்பரென்ஸ் கூடும்.

### The Congress Presidentship.

காங்கிரேஸ் தலைமை.—காங்கிரெஸ் தலைமையை வகிக்க ஆனரெபில் ராவ்பகதூர் ஆர். என். மதோல்கர் ஒப்புக்கொண்டு விட்டார். எல்லா இந்தியா காங்கிரெஸ் கமிட்டியார் ராவ்பகதூர் மதோல்கரைத் தெரிந்தெடுத்ததை உபசரணைக் கமிட்டியாரும் ஸரியென்று அங்கிகரித்து விட்டார்கள்.

### Stamping of Weights.

படிக்கல்களுக்கு முத்திரை போடுதல்.—

1912௵ ஏப்ரல்௴ 22௳யுள்ள ரிவினியூ போர்டாரவர்களின் 274 நெ. ப்ரொஸீடிங்ஸின் பிரகாரம் கீழேகண்டிருக்கும்

$\frac{1}{2}$ மணு.
$\frac{1}{4}$ மணு.
$\frac{1}{2}$ வீசை $= \frac{1}{16}$ மணு.
$\frac{1}{4}$ வீசை $= \frac{1}{32}$ மணு.
$\frac{1}{8}$ வீசை $= \frac{1}{64}$ மணு.
2 பலம் $= \frac{1}{160}$ மணு.
$\frac{1}{2}$ பலம் $= \frac{1}{640}$ மணு.

முதலிய நிறைகள் கவர்ன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் மணுவின் பிரிவுகளாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறன. ஷை படிக்கல்லுகள் முத்திரிக்கும் உத்தியோகஸ்தர்களால் முத்திரிக்கப்படும்.

### The Adwaita Conference.

அத்வைத கான்பரேன்ஸ்.—நாளது வருஷம் டிஸம்பர் மாதம் 28, 29, 30, 31-ந்தேதிகளில் காளஹஸ்தியுள்ள ஆநந்த விலாஸத்தில் 7-வது அத்வைத கான்பரென்ஸ் நடைபெறும்.

### The Greatest Tea Drinkers.

தேயிலை நீரை மிகுதியாகப் பருகுவோர்.—திபேத் தேசத்தார் தேயிலை நீர் பருகுவதுபோல வேறெத்தேசத்தாரும் தேயிலை நீர் பருகுவதில்லையாம். அங்கொவ்வொருவருக்கும் வருஷத்தில் 13 ராத்தல் தேயிலை செலவாகிறதாம்

### The Deepest Gold Mine.

மிக ஆழமான தங்கச்சுரங்கம்.—ப்ரெஸில் தேசத்திலுள்ள ஸெண்ட் ஜான்டெல் ரே என்னும் சுரங்கம் தரைமட்டத்திலிருந்து கீழே 6500 அடி ஆழத்தில் இருக்கிறது. இது ஸுமார் $1\frac{1}{4}$ மைல் ஆழமாகிறது.

### Chinese Women.

சீனஸ்திரீகள்.—சில தினங்கட்குமுன் "ஷெமாக்ஷான் யாட்போ" என்னுமொரு சீனப் பத்திரிகை சீனஸ்திரீகளைப்பற்றிக் குறைவாக வெழுதியது. அது பற்றி யங்கு சில சீன ஸ்திரீகள் ஒன்று கூடி, அப்பத்திரிகையின் ஆபீஸுக்குச் சென்று, அதன் கதவை யுடைத்து ஆர்பாட்டஞ் செய்தார்களாம்.

### A Diamond.

ஒரு வைரம்.—1649 காரட் நிறையுள்ள ஒரு வைரம் ஸமீபத்தில் தென் ஆபிரிக்காவில் ப்ரிமியர் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டது. உச்சியை நறுக்கிவிட்ட ஒரு முட்டை போன்ற உருவாயிருக்கிறது. இவ்வளவு பெரிய வைரம் இது வரையில் உலகத்தில் இல்லை.

### A Very Old Newspaper.

வெகுகாலமாய் நடந்து வந்த ஒருபத்திரிகை.—"கிங்பாவோ" என்னும் சீனபத்திரிகை 1500 வருஷ

காலமாய் ப்ரசுரிக்கப்பட்டு வந்தது. இது முதலில் கி. பி. 400-ம் வருஷத்தில், மஞ்சள் பட்டில் அச்சிடப்பட்டு, பத்து பக்கங்களுள்ளதாய் வெளிவந்தது. இப்போது சீனுவின் புதிய குடியரசின் ப்ரெஸிடெண்ட் யுவான்-ஷி-கே-என்பவர் அப்பத்ரிகையைத் தடுத்துவிட்டார்.

### Railway from Panruti to Trichi.

பண்டுருட்டிக்கும் திருச்சிக்கும் புதிய ரெயில் பாதை:—தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் 1913—14-ம் வருஷத்தில் புதிய ரெயில்பாதைகள் ஏற்படுத்தும் விஷயத்தில், பண்டுருட்டிக்கும் திருச்சினுப்பள்ளிக்கும் ரயில் பாதை போடும்படி கவர்ன்மெண்டாரை கேட்டிருக்கிறார்கள். ஆகையால் வருகிற ஜனவரி மாதத்திலிருந்து மேற்படி பாதை ஸம்பந்தமாக வேலைகள் ஆரம்பிக்கப்படலாம்.

### Children's Fatal Play.

குழந்தைகளின் விளையாட்டால் நேர்ந்த விபத்து.—ஆஜ்மீரிலுள்ள மிஸ்ஸஸ் வியூஸ் என்ற ஐரோப்பிய ஸ்த்ரீ தன்னுடைய இரண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு வெளியே போய் தீபாவளி வேடிக்கை பார்த்து விட்டு வீட்டுக்கு வந்தாள். வந்ததும் நான்கு வயது மூன்று வயதுமான அக்குழந்தைகள் கைக்குழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த கட்டிலில் நெருப்பை வைத்து கட்டில் எரியும் போது ஸந்தோஷத்தால் கையைக் கொட்டின. குழந்தை எரிவதைக்கண்ட தாய் மயங்கிக் கிழே விழுந்து விட்டாள். வேறு யாரும் வருவதற்குள் குழந்தை எரிந்து போய்விட்டது.

### What War Costs.

யுத்தத்தால் உண்டாகும் நஷ்டங்கள்.—ஒரு பெரிய பீரங்கியில் ஒருதரம் வெடி சுட ஏற்படும் செலவு 5100 ரூபா யாகிறதாம்.

ஒரு "ட்ரெட்நாட்" என்னும் யுத்தக் கப்பலின் விலை 360 லக்ஷம் ரூபாய். அந்தத் தொகையைக் கொண்டு, ஒவ்வொன்று அறுபதினுயிரம் ரூபாய் விலையுள்ள அறுநூறு ரெயில்வே எஞ்ஜின்கள் வாங்கிவிடலாம்.

அந்த யுத்தக்கப்பலை வைத்து நிர்வகிப்பதற்கு வருஷத்துக்கு 30 லக்ஷம் ரூபாய் செலவாகிறது.

அந்தக்கப்பல் பத்து அல்லது பதினைந்து வருஷந்தான் நல்ல ஸ்திதியிலிருக்கும்!

சரித்ரத்தில் தெரிந்த வரையில் இதுவரையில் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் ஸுமார் 1500 கோடி ஜனங்கள் என்று கணக்கிடப்படுகிறது.

சென்ற நூற்றாண்டில் மாத்திரம் 1 கோடியே 40 லக்ஷம் ஜனங்கள் யுத்தத்தில் மடிந்தார்கள்.

### The New Post Cards.

புதிய போஸ்ட் கார்டுகள்.—இப்பொழுதுள்ள போஸ்டு கார்டுகள் செலவாய் விட்டவுடன், புதிய கார்டுகள் விற்பனைக்கு வெளியிடப்படும். அவற்றில் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் உருவம் பதிக்கப்பட்டிருக்கும். இப்பொழுது காலணுத் தலைகள் எந்த நிறத்தில் இருக்கின்றனவோ அதுபோன்ற நிறமுள்ளவையாகவும், இப்பொழுதைவிட அதிக அழுத்தமுள்ளவையாகவும், ஐந்தரை அங்குல நீளமும் மூன்றேகால் அங்குல அகலமும் உள்ளவையாகவும் இருக்கும். வெளிப்பக்கத்தில் ஸரிபாதியில் ஒரு கோடு போட்டிருக்கும் அக்கோட்டின் வலப்புறத்தில் மேல் விலாசத்தை எழுதிக்கொண்டு இடப்புறத்திலும் ஸமாசாரம் எழுதலாம்.

### The Mysore Widow's Home.

மைஸூர் விதவாச்ரமம்—மைஸூர் விதவாச்ரமத்தைப் பற்றிய 1911-12-ம் வருஷத்து ரிபோர்ட்டினால் அடியிற்கண்ட விஷயங்களை அறிகிறோம்.—

ஆச்ரமத்தைச் சார்ந்த பள்ளிக்கூடத்தில் 34 முதல் 45 மாணவர்கள் வரையில் இவ்வருஷத்தில் கல்வி கற்று வந்தார்கள். அத்தொகையில் 28 மாணவர்கள் விதவைகள், 3 பேர் விவாகமாகாத பெண்கள், 14 பேர் விவாகமானவர்கள்.

ஆச்ரமத்தைச் சார்ந்த ஜாகையில் 22 மாணவர்கள் இருந்தார்கள். அவர்களில் 19 பேர் பள்ளிக்கூடத்திலும் 3 பேர் மகாராணி காலேஜிலும் கல்வி கற்று வந்தார்கள். தங்களுடைய வீடுகளிலேயே வஸித்துக் கொண்டு ஸ்காலர்ஷிப் பெற்று ஆச்ரமப் பள்ளிக்கூடத்தில் 22 மாணவர்கள் படித்தார்கள்.

பள்ளிக்கூடத்திலிருந்த 9 உபாத்யாயர்களில், இங்கிலீஷுக்கும் ஸமஸ்கிருதத்திற்கும் தையலுக்கும், பிரம்பு வேலைக்கும் தனித்தனியே ஒவ்வொரு உபாத்யாயருண்டு. பள்ளிக்கூடத்தையும், ஜாகையையும் நடத்தும் செலவு சென்ற வருஷத்துக்கு ரூபா 6,240-4-2 ஆயிற்று.

ஆரம்பமுதல் இவ்வித்யா ஸ்தாபனத்துக்கு உழைத்து அதை மேல் பார்வை செய்துவரும் ஸ்ரீமத் எஸ். ரங்கம்மாளின் விடாமுயற்சியாலேயே இது நல்ல நிலைமையில் இருந்து வருகிறது.

# OPENINGS FOR BUSINESS.
## வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியில் கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ளவர்கள் "பிழைக்கும் வழி" யையும் அந்தந்த நம்பரையும் குறிப்பிட்டு வேண்டிய விவரங்களுக்கு கல்கத்தாவில் டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்மர்ஷியல் இண்டெலிஜென்ஸ் என்னும் அதிகாரிக்கு எழுதவும். தக்க வியாபாரி என்பதற்கு அடையாளமாக தாம் பத்து வரவு செய்யும் பாங்கிக்காரர்களைக் குறிப்பிட்டு எழுதினால் சீக்கிரத்தில் பதில் கிடைக்கும்.

**Machinery.**

**யந்திரங்கள்.**—க்லாஸ்கோவிலுள்ள ஒரு கம்பெனிக்கு, காஸ் இன்ஜின், எண்ணெய் இஞ்ஜின், மோடார் படகுகள், எலெக்ட்ரிக் லைட் உண்டாக்கும் யந்திரங்கள் முதலியவைகள் விற்பனை செய்ய ரங்கூனில் ஏஜண்டுகள் தேவை. (B. 135.)

**Builder's Hardware.**

**கட்டிடத்துக்கு உதவும் இருப்பு ஸாமான்கள்.**—ஒரு லண்டன் கம்பெனிக்கு கட்டிடத்துக்கு உதவும் இரும்பு ஸாமான்களை விற்க ஏஜண்டுகள் தேவையாம். (B. 136.)

**Caustic Potash.**

பொடாஷ் காரம்.—கல்கத்தாவிலுள்ள ஒரு வீருபருக்கு பொட்டாஷ்சாரம் விற்பவருடைய விலாஸம் தேவையாம். (B. 137.)

**Milk Powder.**

பால் பொடி.—ஹாலண்டிலுள்ள ஒரு கம்பெனிக்கு, பால்பொடி இறக்குமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 138.)

**Potato Flour.**

உருளைக்கிழங்குமா.—ஹாலண்டிலுள்ள ஒரு கம்பெனிக்கு உருளைக்கிழங்குமா இறக்குமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 139)

**Poultry.**

கோழி வாத்துகள்.—இங்கிலாந்தில் கோழி வாத்து வளர்ப்பவர் ஒருவருக்கு, ச்லாக்யமான கோழிகள் வாங்குபவருடைய விலாஸம் தேவையாம். (B. 148.)

**Kapok.**

இலவம் பஞ்சு.—ந்யூஸீலண்டிலுள்ள ஒரு கம்பெனிக்கு இலவம்பஞ்சு ஏற்றுமதிசெய்பவருடைய விலாஸம் தேவையாம், (B. 149.)

**Hand Saws.**

கை ரம்பங்கள்.—ஷெப்பீல்டிலுள்ள ஒரு கம்பெனிக்கு, கை ரம்பங்களும் இதர ஆயுதங்களும் வாங்குபவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 150.)

**Milling Machinery, Stones and Accessories.**

மில் யந்திரங்கள், கல்லுகள் அவைகளுக்கு வேண்டிய ஸாமான்கள்.—

மேற்குறித்த ஸாமான்கள் வாங்கும் கம்பெனிகளின் விலாஸம் ஒரு லண்டன் கம்பெனிக்குத் தேவையாம். (B. 154.)

**Almonds.**

பாதாமி.—பாலெர்மோ விலுள்ள ஒரு கம்பெனிக்கு, பம்பாயைத் தவிர மற்ற நகரங்களில் கொட்டை நீக்காத பாதாமி இறக்குமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 155.)

**Ivory.**

தந்தம்.—கல்கத்தாவிலுள்ள ஒருவருக்கு தந்தம் வாங்குபவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 156.)

**India Rubber** (**Caoutchouc**).

இந்திய ரப்பர்.—வர்ஜினியாவிலுள்ள ஒருவருக்கு இந்திய ரப்பர் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 159.)

**Lace and Lace Manufacture.**

ஸரிகை.—ஸரிகை செய்யும் இங்கிலீஷ் கம்பெனி ஒன்றுக்கு தாங்கள் செய்யும் ஸாதா ஸரிகைகள், முதலியவைகளை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் வேண்டுமாம். (B. 160.)

**Red Ochre.**

சிவப்புக் காவிக்கல்.:—பம்பாயிலுள்ள ஒருவருக்கு சிவப்புக்காவிக்கல் மொத்தத்தில் வாங்கும் வ்யாபாரிகளுடைய விலாஸம் தேவையாம். (B.161.)

**Oriental Curios.**

கீழ்தேசத்து விநோத ஸாமான்கள்.—லண்டனில் கீழ்தேசத்து விநோத ஸாமான்கள் வியாபாரம் செய்யும் கம்பெனி ஒன்றுக்கு தந்தமாவது எலும்பாவது வைத்து இழைத்த மரஸாமான்கள் செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B, 169.)

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் நவம்பர்மாஸம் 20-ம் ௳ ரிப்போர்ட்டுப்படி

**Produce Market**.—விளைபொருள்கள்.

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| ஆவாரம்பட்டைபாரம் 1-க்கு | ... | 21 முதல் 31 |
| கொன்னைப்பட்டை ஷை | ... | 18 முதல் 19 |
| கடப்பை கடுக்காய் ஷை | ... | 15 முதல் 20 |
| சேலம் ஷை ஷை | ... | 28 முதல் 30 |
| நல்லெண்ணெய் ஷை | ... | 110 முதல் 120 |
| புங்கம் எண்ணெய் ஷை | ... | 95 |
| எட்டிக்கொட்டை ஷை | ... | 15 முதல் 17 |
| விளக்கெண்ணெய் ஷை | ... | 76 முதல் 77 |
| கொட்டை முத்து 165 ராத்தல் | | 11 முதல் $11\frac{1}{4}$ |
| பந்தர் பச்சை அரிசி 44 படி | ... | 8 முதல் $9\frac{1}{2}$ |
| நெல்லூர் அரிசி 31 படி | ... | 7-12 முதல் 8 |
| வெங்காயம் (கடப்பை) பாரம் | ... | 14 |
| ஷை (பல்லாரி) ஷை | ... | 7 |
| நீலகிரி உருளைக்கிழங்கு | ... | 24 |

**Metals**.—உலோகங்கள்.

| | | |
|---|---|---|
| பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் பாரம் | ... | ரூ. 243 முதல் 244 |
| செப்புத் தகடுகள் பாரம் | ... | 317 |
| செப்புக்கட்டி ஷை | ... | |
| நாகம் ஷை | ... | 90 |
| ஷை (உள்ளூர்) ஷை | ... | 82 |
| ஈயம் ஷை | ... | 75 |
| காரீயம் ஷை | ... | 73 |
| வெள்ளீயம் ஷை | ... | 237 வராகன் |

**Iron**.—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் | | ரூ 24 முதல் 29 |
| சீமை | | 39 முதல் 40 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | 28 முதல் 38 |
| பீப்பாய்க் கட்டு | ... | 32—35 |
| 8 பட்டை எஃகு | ... | 24—25 |
| எஃகு வில்கட்டு | ... | 26—27 |
| திரணைக் கம்பிமருக்கி 2 நெ. | ... | 27 முதல் 30 |
| சீமை | ... | 42—49 |

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall**.

மழை.—1912௵ ஏப்ரல்மீ 1௳ யிலிருந்து 1912௵ நவம்பர்மீ 30௳ வரையில் பெய்த மழையின் அளவு, இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 37·33 | 42·63 |
| வால்டேர் | 30·96 | 34·03 |
| காக்கினாடா | 26·19 | 36·79 |
| மசூலிப்பட்டணம் | 42·91 | 38·11 |
| நெல்லூர் | 44·47 | 30·20 |
| மதராஸ் | 43·56 | 41·81 |
| கூடலூர் | 47·36 | 41·19 |
| நாகப்பட்டணம் | 34·06 | 39·42 |
| பாம்பன் | 22·41 | 26·15 |
| கொழும்பு | 90·60 | 69·11 |
| திருவநந்தபுரம் | 87·30 | 58·18 |
| கொச்சி | 142·49 | 108·75 |
| கள்ளிக்கோட்டை | 138·63 | 114·66 |
| மங்களூர் | 144·71 | 126·40 |
| மெர்க்காரா | 133·12 | 124·95 |
| ஐதராபாத் | 23·40 | 30·04 |
| பல்லாரி | 22·41 | 19·48 |
| கர்நூல் | 19·17 | 26·06 |
| கடப்பை | 28·20 | 30·04 |
| ஹாஸ்ஸான் | 40·65 | 34·57 |
| பெங்களூர் | 41·34 | 34·11 |
| கொடைக்கானல் | 57·50 | 50·45 |
| உதகமண்டலம் | 51·74 | 50·37 |
| கோயம்புத்தூர் | 29·32 | 19·54 |
| வேலூர் | 42·05 | 39·58 |
| சேலம் | 32·86 | 37·92 |
| திருச்சினாப்பள்ளி | 30·96 | 28·46 |
| புதுக்கோட்டை | 35·66 | 30·32 |
| மதுரை | 32·63 | ·1·02 |
| திருநெல்வேலி | 21·92 | 2( 57 |